Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

ஜன.29-பெப்.04,1995

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 87

## பூநகரியில் புலிகளின் பொறி!



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## சதுரங்க நடுவிலே சந்திரிக்கா அரசு



அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை!
அதிரடியான அரசியல் தொடர்

ஜில் ஜில் சினி விசிட்

கிரைம் டயறி அதிர்ச்சியான உண்மை

-ரசிகன்-
இலக்கிய நயம்

# முரசம்

## சரணடைதல் இல்லாமல்.......

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பாப்பரசரை தரிசிப்பதற்காக
தலைநகருக்கு வந்த
யாழ்ப்பாண மக்களில் பலரை
சந்தித்து கலந்து பேச முடிந்தது.

போர் ஓய்வு நீடித்து
நிரந்தர சமாதானமாக அமையுமா?
என்பதுதான் சந்தித்த பலரதும்
உள்ளத்து எதிர்பார்ப்பாகும்.

கௌரவமான அரசியல் தீர்வோடு
சமாதானம் மலரவேண்டும்
என்பதையும் அவர்கள்
மனதில் வைத்திருக்கிறார்கள்.

சமர் வேண்டாம் என்பது
உயிருக்குப் பயந்து செய்யும்
சமரசம் அல்ல.
சமாதான வேட்கையினை
எவரும் அப்படி ஒருபோதும்
நினைத்துவிடக்கூடாது.
நீண்டதொரு போராட்ட வரலாறு.
இரத்தம் சிந்திக் கடந்த
நெடிய போராட்டப் பாதை......

பல்லைக் கடித்து வலியைச் சகித்து
பல நூறு இனிய உயிர்களை இழந்து
நெஞ்சுக்குள் நிறைந்து முட்டிய
அசுரத்தனமான சோகம் சுமந்து
இதுவரை பட்ட துயர்கள் யாவும்
சரிநிகர் சமானமாய் வாழ்வதற்கே!

எவரின் உரிமையையும்
எட்டிப் பறித்து எமக்கெனச் சொல்லோம்!
எம்துரிமையே எமக்கு வேண்டும்!
தமிழ் பேசும் மக்களின்
உரிமைப் போரின்
சங்கொலி அதுதான்!

நியாயமான அந்த சங்கொலியை
சகிக்க முடியாமல்
சமருக்கான களத்தை அமைத்ததும்
சரித்திரத் தவறை சாதித்ததும்
யார் என்று கேட்டால்
தென்னிலங்கைத் தலைவர்கள் என்றே
வரலாற்றின் கரங்கள்
சுட்டிக்காட்டிச் சத்தியம் செய்யும்!

இப்போது நிலமை மாறியிருக்கிறது.
சரித்திரத் தவறைத் திருத்தும் பொறுப்பை
சந்திரிக்காவின் கரத்தில்
மக்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறது!

ஏற்ற பொறுப்பை
செவ்வனே செய்வார் என்று
முழு நாடுமே எதிர்பார்த்திருக்கிறது.
அதிலே- வடபகுதி மக்களும் அடக்கம்!

இத்தனை இழப்புக்கள்

கற்பனைக் கெட்டா கடும் துயர்கள்!
இனிவரும் தீர்வு
புதியதாய் இருத்தல்
முக்கியம்.
பூரண திருப்தி தருவது அவசியம்.
என்பதுதான் மக்களின் அபிப்பிராயம்!

பண்டா-செல்வா ஒப்பந்தம்
காலம் கடந்தது என்று
கூட்டணித் தலைவரே கூறியிருக்கிறார்.

அகிம்சைவாதிகளையே
அதிருப்தியடைய வைக்கும் ஒன்றை
ஆயுதம் ஏந்தியோர்
அங்கீகரிப்பர் என்று எதிர்பார்ப்பது
இயலாத விடயம்!

நீண்டதூரம் வந்துவிட்ட பின்னர்
தொடங்கிய இடத்திற்கே
மீண்டும் திரும்பச் செல்லவேண்டும்
என்று கருதுவது சரியாக இருக்காது.

எனவே-ஜனாதிபதி அவர்கள்
தீர்வுத் திட்டத்தை வகுக்கும்போது
இவற்றைக் கருத்தில் கொள்வார்
என்றே நம்புகிறோம்.

வடக்கு-கிழக்கு இணைப்பு
என்பது ஐயத்துக்கிடமற்றது
என்பதே புலிகளின் நிலை!

ஏனைய தமிழ் கட்சிகளும்
அதனையே சொல்லுகின்றன.
முஸ்லிம் காங்கிரசின் கருத்து
மாறுபட்டதாக இருக்கிறது.
இணைப்பை எதிர்க்கவில்லை
ஆனால் நிபந்தனையோடு ஏற்போம்
என்று மு.கா கூறுகிறது!

தமிழ், முஸ்லிம் கட்சிகள்
தமக்குள் ஒருமித்த முடிவைக் காண்பது
காலத்தின் அவசியம்.
தீர்வு முயற்சிகளுக்கும் முக்கியம்!

வடக்கு-கிழக்கு மக்கள்
எதிர்பார்ப்பது
நிரந்தர சமாதானத்தையும்
நேர்மையான அரசியல் தீர்வையுமே!

சமரும் வேண்டாம்.
சரணடைதலும் வேண்டாம்!
சகல மக்களதும்
கௌரவத்தையும், உரிமைகளையும்
பாதுகாத்துக்கொள்ளக்கூடிய
அரசியல் தீர்வே
இன்றைய தேவை!

□□

தைப்பொங்கல் கடந்த பின்னரும்
வாழ்த்து மடல்கள் கரம் வந்து சேர்ந்தன.
மடல் அனுப்பி மகிழ்வு சொல்லி
மகிழவைத்த அனைவரோடும்
மனதுக்குள் கைகுலுக்கியாகிவிட்டது.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை.

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## வாய்க்காதே போகும் ஆயுதங்கள்

"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்" (ஏசாயா 55:17)

எதிரிகளின் கொல்லுலைகளிலும், பட்டறைகளிலும் சுறுசுறுப்பாக வேலை நடைபெறுகிறது; பரிசுத்தவான்களைத் தாக்குவதற்காக அவர்கள் ஆயுதங்களைச் செய்கிறார்கள். பரிசுத்தவான்களின் ஆண்டவர் இடமளித்திராவிட்டால் அவர்கள் இவ்வளவு கூட செய்திருக்க முடியாது. கரித்துண்டுகளை நெருப்பில் வைத்து ஊதும் கொல்லரை அவரே படைத்தார். அவர்கள் எவ்வளவு சுறுசுறுப்பாய் வேலை செய்கிறார்கள் என்று பாருங்கள். எத்தனை வாள்களையும் ஈட்டிகளையும் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்று கவனியுங்கள். இவற்றினால் ஆவது ஒன்றுமில்லை. ஏனெனில் ஒவ்வொரு ஆயுதத்தின் மேலும் இது வாய்க்காதே போகும் என்று எழுதப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

இன்னொரு சத்தத்தை கவனித்து கேளுங்கள். அது நாவுகள் உண்டாக்கும் சத்தம். சம்மட்டியாலும் பட்டடைக் கல்லாலும் செய்யப்படும் ஆயுதங்களைவிட நாவுகள் பயங்கரமான ஆயுதங்கள். அவைகளால் ஏற்படும் தீமைகள் ஆழமாயும் அகலமாயும் வெட்டி விடுகின்றன. இப்பொழுது நமக்கு என்ன நேரிடும்? அவதூறு, பொய்யுரை, கட்டிக்குறை கூறுதல், ஏளனம்-இவை விஷ அம்புகள். அவற்றின் தாக்குதலை நாம் எவ்விதம் சமாளிக்க முடியும்? ஆண்டவராகிய தேவன் அவற்றை நம்மால் அடக்கமுடியாவிட்டாலும் அவற்றால் அழித்துவிடப்படுவதிலிருந்து காப்பாற்றப்படுவோம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்.

அவர்கள் இப்பொழுது நம்மை குற்றப்படுத்துகிறார்கள். ஆனால் இறுதியில் நித்திய காலத்துக்குமாக நாம் அவர்களைக் குற்றப்படுத்துவோம். பொய்யுரைக்கும் வாய்கள் அடைக்கப்படும். அவர்கள் கூறின பொய்கள் அவற்றினால் தீங்கு அனுபவித்த நல்ல மனிதர்களுக்கு நன்மதிப்புக்கானவையாக மாற்றப்படும்.

குணத்தி பிரபா-கனடா.

# ஆன்மீகம்



## இறை மறையின் அறிவு மொழிகள்

எவன் மறுமைக்காகப் பயிரிட விரும்புகின்றானோ அவனுடைய பயிரின் விளைச்சலை நாம் அதிகப்படுத்துகின்றோம். (எனினும்) எவன் இம்மைக்காக (மாத்திரம்) பயிரிட விரும்புகிறானோ நாம் அதிலிருந்து ஒரு பகுதியைக் கொடுக்கின்றோம். எனினும் அவனுக்கு மறுமையில் எதுவிதமான நற்பாக்கியமுமில்லை.

-அல்குர்ஆன் (42:20)

(விசுவாசிகளே!) நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக்கொண்டு) நீங்கள் பிரிந்து விடவேண்டாம்.

-அல்குர்ஆன் (3:103)

எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டும்) விரும்பினால் அவர்களது செயலுக்குரிய பலனை இவ்வுலகிலேயே நாம் பூரணமாகக் கொடுத்துவிடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப் படமாட்டார்கள். எனினும் மறுமையில் இத்தகையோருக்கு (நரக) நெருப்பைத் தவிர வேறொன்றுமில்லை. இங்கு அவர்கள் செய்தவைகள் யாவும் அழிந்துவிட்டன. அவர்கள் செய்துகொண்டிருப்பவையும் வீணானவையே.

-அல்குர்ஆன் (11:15-16)

எம்.எச்.எம்.ஹாரித்

## கவிதைப்போட்டி இல-84

**வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்**

### பரிசுக்குரிய கவிதை

### சமாதானம்

சந்திரிகா அன்றி
சமாதானம் பேசுகிறார்
பேச்சுவார்த்தை சரிவந்தால்
பிரான்சு போன பெரியண்ணா
வந்து சேர்வார்.
சிங்கப்பூர் சின்னண்ணாவும்
சிங்காரமாய் வந்திடுவார்.
ஷெல்லடிபட்டுச் செத்துப்போன
அப்பாவும் தம்பியும்...?

மதுரா யோகேந்திரன்-திருக்கோவில்.

### வியக்கப்பட்டவை

**தோன்றுமா உதயம்**

எத்தனை காலம் தனிமை வாழ்வு
இனியும் வேண்டாம் இங்கோர் சாவு
ஏற்றிடும் தீபத்தில் மிளிரும் ஒளியே
ஏங்கிடும் எனக்கு தோன்றுமா உதயம்?

தெ.லோஜனா-கொழும்பு-15

**விடிவு**

இன்னும்
எரிகிறது
எப்போது விடியுமோ?

மு.காஸீம்-இறக்குவானை.



**சுமைகள்**

மனிதாபிமானம்
மடிந்து
மரணங்கள்
மலிந்து
சோகங்கள் நெஞ்சில்
சுமைகளாகின...!

சோதிரெட்னம்
வவுனியா.

**மின்னொளி தேவையில்லை**

ஏ! தீச்சுடரே
யாழ் தமிழ் மாணவர் நாம்
மின்னொளி தேவையில்லை
உன்னொளியே போதும்
உயர்ந்திடுவோம் உலகினிலே.

கா.யோகேந்திரன்-ஆரையம்பதி-2.

**விழிகளின் வினா..?**

ஒளிதந்து
உருகி மறையும்
மெழுகுதிரிபோல
மோதல் தவிர்ப்பும்
முடிவடையுமா?
அன்றி
நின்று நிலைக்குமா...?

வை.சித்திக்கிருஷ்ணா
பாண்டிருப்பு.

**இது பாப்பரசர் வருகைக்கு முன்**

பாப்பாண்டவரை தரிசிக்க
பல மைல்கள் போக
வேண்டும்!
ஆனையிறவு பாதை
திறபட அருள் புரியும்
ஆண்டவரே!

ரமேஷ்குமாரி-நானுஓயா.

**வெண்சுடர்**

வீட்டின் இருளகற்ற
விளக்கேற்றும் வெண்ணிலவே
நாட்டின் இருள்விலக
நாற்திசையும் ஒளியேற்று.

க.விஜயகுமார்-கலஹா.

**ஒளி பிறந்ததோ?**

போர் நிறுத்த
ஒப்பந்தம்...கேட்டு
சின்ன விழியிரண்டில்
ஒளி காட்டும்
ஆனந்தம்..!

ஐ.பர்வின்-வத்தேகம.

## கவிதைப் போட்டி இல-87




சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.02.1995.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 87
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**முழுவதும் நாசம்**

சமாதானச்சுடர்
வேர்விடும் வேளை
கடவுளே!
மூச்சுவிட்டு
அணைந்தால்கூட
முழுவதும் நாசம்

இ.ஜீவராஜா-கரூவாஞ்சிக்குடி.

**போர் தவிர்ப்பு**

எனதறையின் இருள் மறைய
விடியும் வரை விளக்குண்டு
போர்
இருள் சூழ்ந்த நம் மண்ணில்
போர் தவிர்ப்பும்-நல்ல
விடிவுவரை ஒளிராதோ?

காயத்திரி-அக்கரைப்பற்று.

**பெயர் அறியா தேசம்!**

சிறிலங்கா என்கிறார்கள்
ஈழம் என்கிறார்கள்.
இலங்கை என்கிறார்கள்
கடவுளே!
என் தேசத்தின்
பெயர் என்ன?

பாத்திமா ஹிசாமா கரூத்துறை (தெற்கு)

**'ஒளி பெறுமா?'**

திரியின் ஒளிபோலே
தெரியும் சமாதானம்!
தெளிவாமோ-
ஒளி வீசும்
எதிர்காலம்?

றோஸ்-பண்டாரவளை.

**தேசம்**

யுத்த இருள் தொலைத்து
சமாதான விளக்கேற்றி
தேசம் இளைப்பாறுகிறது.

பஸ்மியா வாஹிட்-புத்தளம்.

**தவி(ர்)ப்பு**

மெழுகுவர்த்தி
முடியுமுன்னே
விடிந்திடுமோ-இல்லை
காரிருள் மூடி
மீண்டும்
கலகமழை
பெய்திடுமோ!

மகிந்தா-செட்டியூர்.

**ஒளி நிலைக்குமா?**

கடைசிவரை ஒளி
கரையாது எரியுமா?
கண் எதிரே தெரியும் ஒளி
கால மெல்லாம் நிலைக்குமா?

வி.ஜே.சீவரத்தினம்-நுகேகொடை.

**சிந்தையைத் தா**

நெஞ்சிரக்கமில்லாப்போர் மிஞ்சவிட்ட
குஞ்சுகளாய் கூடுவிட்டு, பஞ்சையான
பிஞ்சுகளில் நானொருத்தி
தஞ்சமெனக் கார்? இறைவா சிந்தையைத்தா!

வாழையூர்-வைரமுத்து.

**சின்னப் பூவே**

சோகமென்ன சின்னப் பூவே
சொன்னால் உன் துயர் தீராதோ
வண்ண நிலவே வாசமலரே-நீ
வாடி நிற்பது முறைதானோ?

எஸ்.எம்.மாலா-தீவில்ல.

**'அகதிகள்'**

தாய் மண்ணில்
ஆத்மாவும்,
தஞ்சமடைந்த மண்ணில்
உடலுமாய்,
ஊரை நினைத்திங்கு,
உள்ளம் உருகுகின்றோம்.

என்.கே.சலீம்-சின்னச் சிப்பிக்குளம்.

## ஒரு சந்தர்ப்பம்

கவிதைப் போட்டி இல 85 க்கு ஒரு படம் போட்டு அனைவருடைய குமுறல்களையும் வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கொடுத்து முரசை அசத்திட்டீங்க போங்க...

குணபாலசிங்கம் சுகந்தினி-வெள்ளவத்தை.

□□

## தாமதம் ஏன்?

இராஜதந்திரியாரின் அரசியல் அலசல்கள் அடி...தூள்! நன்றாகவே வெளுத்து வாங்குகிறார் (சாயம் போகும் வரை) அற்புதனும் அலசலில் இறங்கிவிட்டதால் நில் கவனி.... தொடரை கவனிக்காமல் விட்டுவிடுவாரோ..? (உங்களை) கொலைகளை இனிதாக முடித்து விட்டு இன்னும் கொலைகாரனை, ஓ..சொறி ரசிகனை அறிமுகப்படுத்த தாமதமேன் தலைவா?

து.சர்மிளாதேவி-கலஹா.

□□

## இரகசியமாய் சொல்லிவிடு

அன்பின் முரசே,

நீ வாரா வாரம் வந்து கொட்டும் அரசியல் கருத்துக்களும், தொடர் கதைகளும், ரசிகனின் இலக்கிய நயம், தேன் கிண்ணம், தகவல் பெட்டி உன் இதழ்கள் அனைத்தும் தேன். நீ புதிதாக சுமந்து வரும் 'மகாசூலம்' அருமையிலும் அருமை. என் மனதை சோதிக்காமல் 'மகாசூலம்' எழுதுவது யாரென்பதை எனக்கு மட்டும் தெரிவிப்பாயா என் அன்பு முரசே!

எஸ்.உதயகுமார்-மாத்தளை.

□□

# வாசகர் சாலை

## விளக்கம் தேவை

அன்பு முரசிற்கு,

நான் விரும்பிச் சுவைக்கும் 'ரசிகனது இலக்கிய நயம்' எழுதும் ரசிகன். காதலையும் வீரத்தையும் சமமாக உடைய நாயகனை கொண்டு எழுதுகிறார். ஆனால் கவியரசு கண்ணதாசன் அவர்கள் 'காதல்' உள்ள இடத்தில் உண்மையான வீரம் இருப்பதில்லை; வீரம் இருக்கும் இடத்தில் காதற்குழைவு இருப்பதில்லை என்பதற்கு வரலாற்று சான்றுகளை முன்வைக்கிறார்? இது பற்றிய இரசிகனது விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்.

இரசிகனின் இரசிகை-வத்தளை.

□□

## பாராட்டுக்கு பாராட்டு

15.1.95ல் வெளியான தினமுரசில் இடம் பெற்றிருந்த அனைத்து அம்சங்களும் பிரமாதமாக அமைந்திருந்தது. ஜெ.புளோரன்ஸ் எழுதிய 'பாராட்டு' கதை உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய வித்தியாசமான கதை. கதையை தந்த முரசுக்கும் எழுதிய ஆசிரியைக்கும் இனிய பாராட்டுக்களை தெரிவிக்கிறேன்.

ஸிபானா சுபைர்-கலஹா.

## இரட்டிப்பு மகிழ்ச்சி

வாரமொருமுறை வண்ண மலராய் மலரும் தினமுரசு வார மலரே! புத்தாண்டு பரிசாய் மக்சீம் கார்க்கியின் 'தாய்' நாவல் தொடர் கிடைத்த மகிழ்ச்சியில் திளைத்திருக்கையில், 'மகாசூலம்' தொடர் எமக்கு கிடைத்த போனஸ் பரிசு. மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது.

ஆர்.சுரேஷ்-கலஹா.



கவிமலர் தந்து மகிழ்ந்திடச் செய்தாய் கட்டுரை பலவும் கருத்துடன் தந்தாய். சிறுகதை, தொடர்கதை மூலம் சிந்திக்கச் செய்தாய். 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' மூலம் ஊர்வலம் வந்தாய். உள்ளதை நீயும் உரைத்திட்ட உண்மை உயர்விற்கு வழியை தந்திடச் செய்தது சிந்தியாவின் பதிலால் குறும்புகள் செய்து குறைகள் பலதை தெளிவாய் தீர்த்தாய். பள்ளி மாணவர் பயிற்சிகள் பெறவே பாப்பா முரசு களத்தை நீயும் அமைத்துக்கொடுத்தாய். இனி தாய் நீயும் இதுபோல் என்றும் நிறைவாய் எம்மை தழுவிடவே நித்தம் உனை வாழ்த்துகிறேன்.

சித்தி மர்ழியா ஹுசைன்-தியத்தலாவை.

□□

இளம் கன்றுக்குட்டிபோல் துள்ளி வரும் தினமுரசே! உன்னை வாங்கியதும் ஒரு குழந்தையைப் போல் அள்ளி அணைத்து முத்தமிட்ட பின்னரே உன் பக்கங்களைப் புரட்டுவேன்.

சி.ஸ்ரீரவி-இரத்தினபுரி.

□□

தீன்சுவை தினமுரசே,

திக்கெட்டும் நீ பரவி, திகைக்க வைக்கிறாய் என்னை, நீ அள்ளி வழங்கும் அமுத சுரபியா? 'தாய்' தொடர்கதையை தந்த உமக்கு நன்றி கூறாமல் இருக்கமுடியுமா? அரசியல் செய்திகளை சுடச்சுடத் தருவதில் நிகர் நீயேதான். உன் சேவை ஓங்கி வளமுடன் வளம்பெற வாழ்த்துக்கள்.

செல்வராணி-அவிஸ்ஸாவெல்ல.

# “எரிபொருள் தடைநீக்கம் அவசியம்”

## பொருளாதார தடை நீக்கம் புலிகளுக்கு திருப்தியில்லை!

(அரசியல் நிருபர்)

**மூன்றாம் கட்டப் பேச்சில் புலிகள் தரப்பு முற்றாக பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும் என்று அரச குழுவிடம் வலியுறுத்தியிருந்தது.**

**மூன்றாம் கட்டப் பேச்சையடுத்து இலங்கை அரசு மேலும் சில பொருட்களின் தடையை நீக்கியுள்ளதாக அறிவித்திருந்தது.**

**இரண்டாவது தடவையாக பொருளாதார தடையில் தளர்வு ஏற்படுத்தப்பட்டது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் புலிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

தமிழீழ அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ் செல்வன் இது பற்றிக் கூறியுள்ளார்.

புலிகள் அமைப்பை சேர்ந்த மிருதங்க கலைஞரது அரங்கேற்றம் 21.1.95 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தமிழ் செல்வன் கூறியதாவது:

சிறிலங்கா அரசு இரண்டாவது தடவையாக பொருட்களின் தடையை நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. எரிபொருள் மீதான தடை இன்னமும் நீக்கப்படவில்லை.

பொருளாதார தடையைத் தளர்த்தல் என்பதில் எரிபொருட்கள் மீதான தடை நீக்கம் என்பது அவசியமானது.

எரிபொருள் தடையானது முற்றாக நீக்கப்பட்டால்தான் தடை நீக்கப்பட்ட ஏனைய பொருட்களை சுலபமாக எடுத்துவர முடியும்.

எரிபொருளை தடைசெய்துகொண்டு ஒருசில ஆடம்பர பொருட்களின் தடையை தளர்த்துவது ஒரு நியாயமான செயலாக மாட்டாது.

எரிபொருள் தடை நீக்கப்படாமையானது ஏனைய பொருட்களின் விலை குறைப்புக்கோ அல்லது சாதாரண பயன்பாட்டுக்கோ பயனற்றவையாகின்றது.

சிறிலங்கா அரசு எரிபொருள் தடையை நீக்காமல் சில பொருட்களின் தடையை நீக்குவது எந்த நன்மையையும் மக்களுக்கு ஏற்படுத்தப்போவதில்லை.”

இவ்வாறு தமிழ் செல்வன் தனது உரையில் தெரிவித்தார்.

நான்காம் கட்ட பேச்சில் முற்றாக பொருளாதார தடை நீக்கம் செய்வது பற்றி புலிகள் மீண்டும் வற்புறுத்துவார்கள்.

உடனடிப் பிரச்சனைகள் என்று புலிகள் குறிப்பிடும் விடயங்களில் ஒரு உடன்பாடு ஏற்படாத பட்சத்தில் நான்காம் கட்டப் பேச்சும் எந்த முடிவுகளுக்கும் வராமல் முடிவடையும் என்று கருதப்படுகிறது.

இவ்வாறான சூழலில் அரசியல் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கும் அறிகுறிகள் தெரியவில்லை.

அரசு தானாக ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்து முன்வைத்தால் ஏதாவது முன்னேற்றம் ஏற்படலாம் என்று நம்பப்படுகிறது.

# “இது பிரபாகரன் யுகம்; செல்வநாயகம் காலமல்ல!’

## “தமிழீழமே எமது இலட்சியம்; மாற்றுத்திட்டம் இருந்தால் தாருங்கள்”

## புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேச்சு

புலிகள் அமைப்பின் முன்னாள் யாழ் மாவட்ட தளபதி கிட்டுவினதும் அவரோடு கடலில் பலியான ஒன்பது புலிகளினதும் நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி தீருவில் திடலில் நடைபெற்றது.

அங்கு புலிகளது அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையின் சில பகுதிகள் சென்றவார முரசில் வெளியாகியிருந்தது.

அவரது உரையின் முக்கியமான கருத்துக்களில் மேலும் சிலவற்றை இங்கே தருகிறோம்:

### புலிகளது இலட்சியம்

விடுதலைப் புலிகள் கடந்த இரண்டு தசாப்தங்களாக-20 ஆண்டுகளாக-இரத்தம் சிந்தி ஒரு இலட்சியத்திற்காகப் போராடி வரும் இயக்கம்.

தமிழ் மக்களுக்கு ஒரு தனியரசு வேண்டும். தனித்துவமான இறைமையுடைய ஓர் ஆட்சி வேண்டும்; நாங்கள் இந்தக் கொள்கையை இலட்சியமாக வரித்துக் கொண்டு போராடி வருகிறோம்.

நீங்கள் ஒரு மாற்றுத் திட்டத்தை தந்தால் நாங்கள் அதனை பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

சந்திரிக்கா பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இப்பொழுது திட்டம் ஒன்று எங்களிடம் இருக்கிறது. இது பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தயாரித்திருப்பதாக கூறியிருக்கின்றார்.

### இடைக்கால உடன்பாடு

பண்டா-செல்வா ஒப்பந்தம் என்றால்- நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப் பட்ட ஓர் இடைக்கால உடன்பாடு. அது ஒரு முழுமையான தீர்வுத் திட்டமல்ல.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் உள்ள பிரதேச சபையை ஒரு சுயாட்சி அதிகாரம் கொண்ட முழுமையான தீர்வுத் திட்டமாக நாம் ஏற்க முடியாது.

### பழையகதை-பிரதேச சபை

பிரதேச சபை ஒரு பழைய கதை. வரலாற்றின் புதை குழியில் இருந்ததைத் தூக்கி எமக்குத் தரக்கூடாது.

அப்படித்தான் சந்திரிக்கா தனது தந்தை வழியில் போக விரும்புகிறார் என்றால் இன்னும் 70 வருடம் பின்னோக்கிச் சென்று 1927ம் ஆண்டு பண்டாரநாயக்கா பகிரங்கமாக கூறிய விடயத்தை- அதாவது தமிழ் மக்களுக்கு சமஷ்டி சுயாட்சி அதிகாரம் வழங்கவேண்டும்.

தற்பொழுது புதிய யுகம். நீண்டகால போராட்டத்தின் பின்னர் எமது மக்கள் எமது மண்ணிலே ஆட்சி அதிகாரம் கொண்ட கட்டமைப்புக்களை அமைத்து சுதந்திர பிரஜைகளாக வாழும் கட்டம் இது. செல்வநாயகம் அவர்களது காலகட்டம் வேறு. பிரபாகரன் அவர்களது காலகட்டம் வேறு.

இது பிரபாகரன் யுகம். இருபது ஆண்டுகாலமாக இரத்தம் சிந்திப் போராடி நாங்கள் பெரிய சாதனைகளைச் செய்துள்ளோம். 30 ஆயிரம் மக்களை இழந்துள்ளோம். ஏழாயிரம் போராளிகளை இழந்துள்ளோம் பெரிய சுயாட்சி அமைப்புக்களை இங்கே தோற்றுவித்துள்ளோம். காவல்துறை என்றும் நீதித்துறை என்றும் நிர்வாகத்துறை என்றும் பல கட்டுமானங்களை கட்டி எழுப்பி இங்கு ஒரு சுயாட்சி நடைபெறுகிறது.

### தமிழீழம் பிரிந்துவிட்டது

கடந்த தேர்தல் பிரசாரத்தின்போது சந்திரிக்கா கூறியிருக்கிறார்- எற்கனவே தமிழீழம் பிரிந்து போய்விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியினால் தமிழ் மக்கள் பிரிந்துபோய் இருக்கிறார்கள். தனியரசு ஒன்று அங்கு பிரபாகரன் நடத்திக் கொண்டிருக்கிறார். நான் ஆட்சிக்கு வந்தால் தமிழீழத்தை-தமிழ் மாநிலத்தை சிங்கள தேசத்துடன் ஒன்று சேர்ப்பேன்” என்று கூறியிருக்கிறார்.

யுத்த நிறுத்தத்தை மீறுவதோ பேச்சு வார்த்தையை குழப்புவதோ எமது நோக்க மல்ல. எவ்வளவிற்கு எவ்வளவு இந்த அரசு எமக்கு நீதி வழங்கப் போகிறது என்பதை நாம் பார்க்கப் போகிறோம்.

### பாதைத் திறப்பு

வட தமிழீழத்தின் பெரு நிலப்பரப்புக்கும் கொழும்பிற்கும் செல்வதற்கான பாதை திறக்கப்படவேண்டும்.

எங்களின் பாதை... நாங்கள் நடமாடும் பிரதேசம். அதில் நந்திமாதிரி இராணுவம் குந்தியிருக்கிறது. விலகிக்கொண்டால் எங்களுக்கும் மக்களுக்கும் நம்பிக்கை வரும்.

ஆகவே அந்த பாதையை திறந்து விட்டார்கள் என்று சொன்னால் பேச்சு வார்த்தையில் ஒரு கணிசமான முன்னேற்றம் ஏற்படும்.

### 4ம் கட்டப் பேச்சு

அடுத்த பேச்சுக்கான திகதியை குறிக்காமல் அரச குழு போயிருக்கிறது. ஏனென்று சொன்னால், அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அடுத்த முறையும் வந்தால் இதே பிரச்சனைதான் இங்கு இருக்கிறது.

இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் தனது உரையில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு இணைந்த **‘தன்னாட்சி யுடைய சமஷ்டி தீர்வுத் திட்டம் இருந்தால் பரிசீலிப்போம்** என்பதையே புலிகள் கூறி வருகிறார்கள். சில கொழும்பு பத்திரிகைகள் வெறுமனே ‘சமஷ்டி’ என்று புலிகள் கூறுவ தாக வெளியிடும் செய்திகள் தவறானதாக இருக்கின்றன.

‘தன்னாட்சி சமஷ்டி’ என்ற கூற்றின் மூலம் தற்போதுள்ள தமது நீதித்துறை- நிர்வாகத்துறை-ஆயுதப்படை போன்ற அமைப்புக்களை சேதப்படுத்தாத தீர்வையே புலிகள் குறிப்பிடுகிறார்கள் என்று தெரிகிறது.

# போர் ஓய்வுக்கு சர்வதேச கண்காணிப்பு ஏன்?

## கல் ஒன்று- மாங்காய் இரண்டு!

போர் ஓய்வை கண்காணிக்க சர்வதேச பிரதிநிதிகளை கோரிய காரணம் என்னவென்பதை புலிகள் விளக்கி யுள்ளனர்.

தமது உத்தியோகபூர்வ பத்திரிகையான ‘விடுதலைப் புலிகள்’ ஜனவரி மாத இதழில் அக்காரணங்களை புலிகள் விளக்கியுள்ளனர்.

முன்னைய போர் நிறுத்த மீறல்கள் குழம்பியதற்கு சிங்கள படைகளது அத்து மீறல்களே காரணமாக இருந்தன. அவற்றை முன்னைய அரசுகள் மூடி மறைத்துவிட்டன.

போர் ஓய்வு உடன்பாட்டை வெளியுலக பிரதிநிதிகள் கண்காணித்து வருவதால் சிங்கள படைகளின் உடன்பாட்டு மீறல்கள் வெளியுலகிற்கு தெரியவரும். புலிகள்மீது பழி சுமத்த சந்தர்ப்பம் இருக்காது.

இதே வேளை போர் ஓய்வை கண்காணிக்க தமிழரின் தாயகப் பகுதி எங்கும் பயணம் செய்ய இருக்கும் இந்தப் பிரதிநிதிகள் சிங்கள படைகள் நடாத்திய அநர்த்தங்களையும் கண்டும் கேட்டும் அறிவார்கள். தமிழினத்திற்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இந்த இன அழிப்புப் போரின் கோர முகத்தையும்: ஒரு முழுமை யான அரசியல் தீர்வு தமிழினத்திற்கு கொடுக்கப்படவேண்டிய அவசரத் தேவை யையும் அந்த வெளிநாட்டு பிரதிநிதிகள் புரிந்துகொண்டு அதை சர்வதேச சமூகத் திற்கும் தெரிவிப்பார்கள்.

இதன் காரணமாக தமிழரின் அரசியல் அபிலாசைகளின் நியாயத்தன்மை சர்வதேச மயப்படும் சாத்தியங்களும் உண்டு.

இவ்வாறு ‘விடுதலைப் புலிகள்’ ஏடு தெரிவித்துள்ளது.

# தொண்டா தலைமையில் தமிழ்கட்சிகள் கூடுகின்றன

## பாராளுமன்றத்தில் ஒன்றுபட்டு செயற்படத் திட்டம்!

(அரசியல் நிருபர்)

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சிகள் தமக்குள் புரிந்துணர்வுடன் செயற்படவும் தமிழ் பேசும் மக்களது பொதுப் பிரச்சனைகளில் ஒரே குரலில் பேசவும் முன்வந்திருப்பதாக அறியப் படுகிறது.

மூத்த தலைவர் என்ற ரீதியில் அமைச்சர் தொண்டமான் தலைமையில் தமிழ் கட்சிகள் கூடிப் பேசவிருக்கின்றன.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை வலியுறுத்துவது உட்பட தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சனைகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் இணைந்து செயற்படவே இந்த முயற்சி என்று கூறப்படுகிறது.

முதலில் பாராளுமன்றத்திலுள்ள தமிழ் கட்சிகள் தமக்குள் ஒன்றுபட்டு செயற்படுவது என்றும் பின்னர் ஏனைய தமிழ் கட்சிகளையும் இணைத்துக்கொள்வது என்றும் மேற்படி இணைப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் மூலம் அறியமுடிகிறது.

# வடக்கு-கிழக்கு மாகாணசபை வாகனங்கள்

## அரச பணிக்கா? அதிகாரிகளின் வீட்டுப் பணிக்கா?

(திருமலை நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்கள் அரச பணிக்காக ஓடுவதைவிட அதிகாரிகளின் சொந்தப் பணிகளுக்காகவே ஓடித் திரிகின்றனவாம்.

தினமுரசைச் சந்தித்த மாகாணசபைச் சாரதிகள் பலர் இவ்வாறு முறையிட்டனர். தங்கள் பெயர்களை வெளியிடவேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட இவர்கள் இதுபற்றிக் கூறுகையில்-

வாகனங்களின் தேய்மானங்களும் எரிபொருட் செலவும் அதிகாரிகளின் வீட்டு வேலைகளுக்காகவே அதிகமாக விரயமாகின்றன, காலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஏற்றிச் செல்வது, பாடசாலை முடியும் நேரத்தில் காத்திருந்து அவர்களை ஏற்றி வருவது, அதிகாரிகளின் மனைவியரை ‘மார்க்கெட்’டுக்கு ஏற்றி வருவது அல்லது தாமே காய்கறி வாங்கி வந்து கொடுப்பது. டியூசன் வகுப்புகளுக்கு பிள்ளைகளை ஏற்றி இறக்குவது என்பன தமது ‘டியூட்டி சாட்’டில் எழுதப்படாத அன்றாடக் கடமைகள் எனத் தெரிவித்தனர்.

இவற்றைவிட, அதிகாரிகளின் நண்பர்கள், உறவினர்களுக்கு விசேஷம் என்றால் அவர்களது போக்குவரத்துத் தேவைகளை நிறைவுசெய்வது, குடும்பத்தவர்களை ஆலய வணக்கத்துக்காகக்கொண்டு செல்வது போன்ற கடமைகளையும் தாங்கள் செய்யவேண்டி யுள்ளதாகக் கவலை தெரிவித்தனர்.

இவ்வளவு காலமும் இப்படித்தானே நடந்து வருகிறீர்கள்; இப்போது ஏன் ‘தினமுரசு’க்குச் சொல்ல வந்துள்ளீர்கள் எனக்கேட்டபோது-

அதிகாரிகள் மனிதாபிமானத்துடன் நடக்கக்கூடியவர்கள் என்று நம்பியே அவர்கள் சொற்படி நடந்தோம். ஆனால் அண்மையில் அகால மரணமடைந்த எங்கள் சக சாரதி பெவெயின் மரணச் சடங்கில்தான் அவர்களது சுயரூபத்தைக் கண்டுகொண்டோம் என்றனர் அவர்கள்.

புதிய ஆளுநர் இவற்றை கவனத்தில் எடுப்பாரா? என்று கேட்கிறார்கள் சம்பந்தப்பட்ட சாரதிகள்.

# வடபகுதிப் பயணிகளுக்கு உபசரிப்பு

## இராணுவ இசைக்குழு மகிழ்வித்தது

(கொழும்பு)

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வடபகுதியில் இருந்து வந்த பயணிகள் கொழும்பு முன்னாள் குதிரைப் பந்தய மைதானத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

அந்த மைதானத்திற்குள் வெளியார் எவரும் அனாவசியமாக உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. மைதானத்தை சுற்றி இராணுவ பாதுகாப்பும் வழங்கப் பட்டிருந்தது.

மின்சாரமயமான கொழும்பு நகரும், தொலைக்காட்சியில் பல்வேறு அலை வரிசைகளும் பயணிகள் பலருக்கு ஆச்சரியமாக இருந்தன.

குறிப்பாக சிறுவர் சிறுமிகள் மைதானத் தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொலைக் காட்சி பெட்டியில் நிகழ்ச்சிகளை ஆர்வத் தோடும் குதூகலத்தோடும் கண்டுகளித்தனர்.

பாப்பரசரைத் தரிசிக்க வந்த பயணிக ளுக்கு 21.1.95 அன்று இராணுவத்தினர் பிரியாவிடை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார்கள்.

இராணுவ இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் அன்று இரவு மைதானத்தில் நடத்தப்பட்டது.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கள் டக்ளஸ் தேவானந்த, ரமேஷ் நடராஜா, தங்கவேல் ஆகியோர் வடபகுதிப் பயணி களையும் அவர்களை அழைத்துவந்த வண.பிதாக்கள் ஆகியோரையும் சந்தித்து உரையாடினார்கள்.

கொழும்பில் தமக்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள் குறித்து வடபகுதி பயணிகளும், வண பிதாக்களும் திருப்தி தெரிவித்ததாக திரு. டக்ளஸ் தேவானந்தா பா.உ. முரசிடம் தெரிவித்தார்.

# தாண்டிக்குளத்தில் ‘தமிழீழ’ வாகனங்கள்!

(வவுனியா)

பாப்பரசரைத் தரிசிக்க வந்த வடபகுதி பயணிகளை புலிகளின் பஸ் வண்டிகள் தாண்டிக்குளம்வரை கொண்டுவந்து இறக்கி விட்டுச் சென்றன.

புலிகளது பஸ் வண்டிகளின் இலக்கத் தகடுகளைக் கண்ட தாண்டிக்குளம் தடை முகாமில் இருந்த இராணுவத்தினருக்கு வியப்பு.

அந்த பஸ் வண்டிகளின் இலக்கத் தகடுகளில் ‘த’ என்ற தமிழ் எழுத்தோடு இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருந்தமையே வியப்புக்குக் காரணமாகும்.

தமிழீழம் என்பதன் குறியீடாகவே ‘த’ என்று இலக்கத் தகடுகளில் பொறிக்கப் பட்டிருந்தது.

போர் தவிர்ப்பு கால கட்டம் என்பதால் அதனை ஒரு பிரச்சனையாக்க படையினர் விரும்பவில்லை என்று கூறப்பட்டது.

# தமிழ் மண்ணிலிருந்து பறிபோகும் மற்றொரு நிறுவனம்

# திருமலை தொழிற் செயற்திறன் பயிற்சி நிலையம் மூடப்படுமா?

**வ**டக்கு-கிழக்கு மாகாண அரசால் தோற்றுவிக்கப்பட்டு இன்றுவரை வெற்றிகரமாக இயங்கிவரும் தொழிற் செயற்திறன் பயிற்சி நிலையம் சம்பந்தப்பட்ட செயலாளர்களின் அசிரத்தை காரணமாக மூடுவிழாவை எதிர்நோக்கி நிற்கிறதா? இவ்வாறு பொது மக்கள் மத்தியில் அதிருப்தி நிறைந்த சந்தேகம் தோன்றியுள்ளது.

ஜுலை 89ல் வடக்கு-கிழக்கு மாகாண அரசின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு 90 கலவரத்தின்போது முடக்கப்பட்டு மீளவும் 10.01.91ல் உயிர்த்த இந் நிறுவனம் தற்போது 6.2 ஏக்கர் நிலப்பரப்பில் 43700 ச.அடிகளைக் கொண்ட ஆறு தளங்களில் ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபா பெறுமதி கொண்ட இயந்திரங்களுடன் வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

பயிற்சிப் பிரிவு உற்பத்திப்பிரிவு என இருபிரிவுகளாக இந்நிறுவனம் இயங்குகின்றது. பயிற்சிப்பிரிவில் வருடா வருடம் சுமார் 100 மாணவர்கள் பயிற்சிபெற்று சர்வதேச அரங்கில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க சான்றிதழ்களைப் பெறுகின்றனர். மின்னியல், கடைச்சல்வேலை, மோட்டார் மெக்கானிசம், குளிரூட்டி, ஏசி திருத்துதல் தச்சு வேலை, வெல்டிங் என்பவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

உற்பத்திப் பிரிவில் மர, இரும்புத் தளபாடங்கள், பாடசாலை அலுவலக உபகரணங்கள், பேப்பர் கிளிப், கைத்தறிகள் என்பன தயாரிக்கப்படுகின்றன. சப்பாத்துகள் தொடக்கம் வடகிழக்கின் பாடசாலை அலுவலக தேவைகளை வழங்கக்கூடிய ஆற்றல் இப்பிரிவுக்கு உண்டு.

**(திருமலை நிருபர்)**

இந்நிலையம் மூடப்படுமானால் சகல தரத்திலுமான 178 ஊழியர்கள் வேலை வாய்ப்பை இழப்பதோடு பயிற்சித் திறனையும் எதிர்கால இளைஞர்கள் இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது. அத்துடன் பெறுமதி வாய்ந்த உபகரணங்களும் பாழடைய வேண்டி ஏற்படும்.

ஆர்வத்துடன் உழைக்கும் இவ்வூழியர்கள் எவரும் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லையாம். பாதிக்கப்பட்ட இளைஞர்களையே ஊழியர்களாகக் கொண்டுள்ள இந்நிறுவனம் மூடப்பட்டால் சமூகத் தாக்கம் கூட ஏற்படலாம் எனக் கருதப்படுகின்றது.

முரசு நிருபரிடம் இவ்விளைஞர்கள் தங்கள் நிலைபற்றி விளக்குகையில் 1994ல் தங்கள் உற்பத்தி 15 மில்லியனுக்கும் அதிகம் என்றார்கள். தீர்க்கமான முடிவு எடுக்கத் துணிவில்லாத அதிகாரிகளால் தங்கள் வாழ்க்கை கருகிவிடுமோ என அஞ்சுகிறார்கள்.

இதுபற்றி உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், இலங்கையில் மாகாண அரசுகளைப் பொறுத்தமட்டில், இங்கு மாத்திரம்தான் இத்தகைய ஒரு வளமான நிறுவனம் இருக்கிறது. வடக்குக் கிழக்கின் அலுவலகத் தேவைகளில் 25 சதவீத ஓடர்கள் எமக்குக் கிடைத்தால்கூட 500 இளைஞர்களுக்கு இங்கே வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்றார்.

உற்பத்திகள் தரமாக இருக்கின்றனவே. இங்கே கொள்வனவு செய்யத் தயக்கம் ஏன்? என நிருபர் கேட்டபோது ஒரு இளைஞர் வெடுக்கென்று கூறினார். "எங்களிடம் கொள்வனவு செய்தால் அதிகாரிகளின் பொக்கற்றை நிரப்புவதற்கு கொமிசன் யார் கொடுப்பார்?"

ஏனோ தானோ என்ற செயலாளர்களாலும், பொக்கற் நிரப்பும் அதிகாரிகளாலும் நொந்துபோயுள்ள இளைஞர்கள் தங்களையும் தமிழ் மண்ணின் சொத்தான இந்த நிறுவனத்தையும் காப்பாற்றுமாறு த.வி.கூ.செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை நாடியுள்ளனர். இவர்களின் கையில்தான் இந்த இளைஞர்களின் வாழ்வும். நிறுவனத்தின் வளமும்!

# ஒதுங்க ஒரு இடம் வேண்டும்!

**(ஏறாவூர் நிருபர்)**

வாழைச்சேனை, ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் பயணிகள் காத்து நிற்க பஸ் தரிப்பிடங்கள் இல்லை. மழையோ வெயிலோ எதுவாகிலும் பயணிகள் வீதி ஓரங்களிலும் கடை ஓரங்களிலும் ஒதுங்கி நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை கடந்த பல வருடங்களாக இருந்து வருகிறது.

அறுபது மைல் தொலைவு கொண்ட மட்டக்களப்புக்கும் பொலன்னறுவைக்கும் இடையில் உள்ள இரு பெரும் நகரங்களான வாழைச்சேனையும், ஓட்டமாவடியும் நிலைய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும்.

வாழைச்சேனையிலிருந்து மூதூர், கதிரவெளி, வாகரை, வெருகல், பொலன்னறுவை, பிபிலை, மட்டக்களப்பு போன்ற தூர இடம் செல்லும் பயணிகள் அடாத மழையிலும் கடும் வெயிலிலும் கடை ஓரங்களில் காத்து நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அதே போன்று கடுகதி பஸ் நிறுத்தும் ஓட்டமாவடி நகரின் எந்தவொரு இடத்திலும் பஸ் தரிப்பிடங்கள் இல்லை. கொழும்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களுக்குச் செல்லும் தூர இட பஸ்கள் ஓட்டமாவடியில் தேனீர் சாப்பாட்டுக்காக மட்டும் கடைகளில் நிறுத்தப்படுகின்றன.

எனவே குறித்த நகரங்களான வாழைச்சேனை, ஓட்டமாவடி ஆகிய பகுதிகளிலிருந்து செல்லும் ஆயிரக்கணக்கான பயணிகளின் நலன் கருதி பொறுப்புமிக்கவர்கள் பஸ் நிலையங்களை அமைக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் தினமுரசு வாயிலாக வேண்டுகின்றனர்.

# குட்வின் சந்தியிலுள்ள கடைகளை அகற்றுக!

## காத்தான்குடி பிரதேச சபை உத்தரவு

**(காத்தான்குடி நிருபர்)**

**கா**த்தான்குடியின் மிகவும் பிரபல்யமான வர்த்தகப் பிரதேசமான குட்வின் சந்தியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சகல கடைகளையும் உடனடியாக அகற்றுமாறு காத்தான்குடிப் பிரதேச சபை- காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் பள்ளி வாசலைக் கேட்டுள்ளது.

மிகவும் சன அடர்த்திமிக்க இவ்விடத்தில் வீதியோரங்கள் கடைகளை அமைத்து வியாபாரம் செய்வதால் வீதி விபத்துக்களும், பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. மட்டுமன்றி மேற்படி கடைகளுக்கு முன்னால் சமாளிக்க முடியாத அளவிற்கு சனக்கூட்டம் கூடுவதால் இக்கடைகளின் முன்னால் கைகலப்புகளும் அடிக்கடி ஏற்படுகின்றன.

எனவே, மேற்படி கடைகளை உடனடியாக அகற்றுமாறு காத்தான்குடி பிரதேசசபை உத்தரவு பிறப்பித்துள்ளது.

# உடைந்த கட்டிடங்களோடு ஒரு பாடசாலை!

# திறந்த வெளியில் 1000 மாணவர்களின் கல்வி!

**(ஏறாவூர் நிருபர்)**

**க**டந்த 1990ம் ஆண்டு தொடக்கம் மட்டு மாவட்டத்தின் இரண்டாந்தரப் பாடசாலையான மொறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண மிஷன் அ.த.க.வித்தியாலயம் திறந்த வெளியில் மர நிழல்களின் கீழும் உடைந்த கட்டிடங்களிலும் இயங்கி வருகிறது.

இருபது ஆசிரியர்களைக்கொண்ட இவ்வித்தியாலயத்தில் கிட்டத்தட்ட 1000 மாணவர்கள் பயில்கின்றனர். ஆண்டு 1 தொடக்கம் க.பொ.த சா/த வரையில் 25 வகுப்புக்கள் உள்ளன.

மட்டக்களப்பு-வாழைச்சேனை பிரதான வீதியருகே உள்ள உடைந்ததும் வசதியில்லாததுமான தனியார் வீடுகளிலும் மர நிழல்களின் கீழும் இப்பாடசாலை 1990ம் ஆண்டு தொடக்கம் இதுநாள்வரை இயங்கி வருகிறது. வெள்ளையுடையுடன் மரங்களின் கீழ் அமர்ந்திருந்து பயிலும் மாணவர்கள் மழை வந்ததும் கதிரை மேசைகளை வீடுகளில் தூக்கிப் போட்டுவிட்டு ஓட்டம் பிடிக்கும் பரிதாபக் காட்சி இங்கு வழமையாகிவிட்டது.

மழை தொடர்ந்து பெய்தால் மாணவர்கள் தமது வீடுகளுக்கு நிரந்தரமாகவே சென்றுவிடுவர். இங்கு இரண்டு தற்காலிக கொட்டில்கள் உள்ளன. அவற்றில் 6 வகுப்புக்களை நடாத்த முடியும். க.பொ.த சா/த வகுப்புக்குத் தோற்றிய 30 மாணவர்களில் 5 பேர் மாத்திரம் 6 பாடங்களைப் பெற்றுள்ளனர் என்பது அப்பாடசாலையின் பின்தங்கிய நிலையைக் காட்டுகிறது.

படையினர் மையம் கொண்டுள்ள இப்பாடசாலையின் நிரந்தரக் கட்டிடங்களைத் திரும்பப் பெற பொறுப்பு வாய்ந்த சகலரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இப்பகுதி வாழ் வறிய பெற்றோர் கேட்கிறார்கள்.

## விளம்பரப் பகுதி


**BRIGHT TRAINING CENTRE**

(தபால் மூலம் கல்விநெறிகள்)

**G.C.E.(O/L (முனனோடிப் பயிற்சி**

G.C.E.(O/L) மாணவர்களுக்கு விசேட சித்தியை (D) பெற்றுக் கொடுக்கும்; முன்னோடி பாடத்திட்டம், இத்திட்டத்தில் இணையும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் 1000 வினாக்களுக்க விடை எழுதும் பயிற்சியும், பூரண பாடத்திட்டமும் நிறைவு செய்யப்படும். அத்தோடு ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் மிகச்சிறந்த பாடப் பொழிப்பும் விளக்கமும் தபால்மூலம் பாடத்திட்டத்தில் வழங்கப்படும்.

**ஆண்டு 5 புலமைப் பரிசல மாணவர்கட்கு முன்னோ - பயிற்சியும் வெகுமதியும வழங்கப்படும-1995**

நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களை மிக கூடிய புள்ளி பெறவைத்து முன்னணியில் கொண்டு வந்த நிறுவனம் 1995லும் இம்முன்னோடி பயிற்சியை வழங்குகிறது. இம்முறை அரசினர்கல்வித் திணைக்கள பாடத்திட்ட மாற்றத்திற் கேற்ப நவீன முறையில் பாடத்திட்டம் தயாரிக்கப்டும் என்பதையும் மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம். எனவே மாறும் புதிய பாடத்திட்டம் பற்றி மாணவர் கவலை கொள்ளாது சிறந்த முறையில் மிக கூடிய புள்ளி பெற BRIGHTன் ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடித் திட்டத்தில் இணைந்து கொள்ளவும்.

**METHOD OF BOOKKEEPING**
**கடைக்கணகு எழுதும முறை**

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை மிகச்சிறந்த முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத்தரப்படும். இக்கல்வி நெறியை பயில்வது மூலம் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும். இது ஆறுமாத கால DIPLOMA பயிற்சியாகும். இப்பயிற்சியில் இணையும் மாணவர்களுக்கு நற்சான்றிதழும் (Cetificiate)வழங்கப்படும்.

**90 நாடகளில் ஆஙகில/சிஙகள பேச்சு பயிற்சி**

ஆங்கிலம்/சிங்களம் பேச எழுத வாசிக்க 90 நாட்களில் தபால் மூலம் கற்றுத் தரப்படும். இப்பயிற்சி நெறி மிக இலகுவான எளிய நடையில் நவீன உளவியல் அடிப்படையில் மிக சிறந்த முறையில் போதிக்கப்படும்.

**EFFECTIVE ENGLISH WITH GRAMMAR**
**செயற்திறனுடன் கூடிய ஆங்கி ல இலக்கணம்**

பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கேற்ற முறையில் ஆங்கில இலக்கணம் (Junior/Seinor)இரு பகுதியாக நடைபெறுகிறது. விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க

BRIGHT TRAINING CENTRE
S. 27, FIRST FLOOR,
P.O.BOX-162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO-11. (T.P. 434770)
SRI LANKA.





**மலையாள மாந்திரீகம்**

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை நிலைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

**இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:**

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



**இலங்கை அரசினால் வழங்கப்படும் பெறுமதிமிக்க**

**Computer Certificate ஒன்றினைப்**

**பெற்றுக் கொள்ளுவதற்கு இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்**

**National Examination in Computer Application (N.E.C.A)**

பரீட்சையில் தோற்றுவதற்கு முழுப் பாடநெறியும் மிகக் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும்.

★ இப்பரீட்சையை அரசாங்கமே நடத்துவதால், இனிவரும் காலங்களில் அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்புக்களுக்கு இச்சான்றிதழ் முன்னுரிமைபெறும்.

★ இப்பாடநெறிக்கு விரிவுரைகளும், Computer இல் பயிற்சியும் வழங்கப்படும்.

★ இப்பாடநெறிக்கான மொத்தக் கட்டணம். ரூபாய் 500/– மட்டுமே.

**(வேறு கட்டணம் எதுவும் கிடையாது)**

5ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு MIRAJ வழங்கும் இன்னுமொரு சலுகை இது

**இன்றே தொடர்பு கொள்ளுங்கள்**

MIRAJ INFORMATION SYSTEMS
196, D.S. SENANAYEKE VEEDIYA,
KANDY.



**நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!**

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 492/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 251/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 128/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பூநகரியில் புலிகளின் பொறி





# சதுரங்க நடுவிலே சந்திரிக்கா அரசு

கட்டம் கட்டமாக பேச்சை நடத்துவது:

முதல் கட்டமாக உடனடிப் பிரச்சனையைத் தீர்ப்பது:

உடனடிப் பிரச்சனையெல்லாம் தீர்க்கப்பட்டு, நன்றி, வணக்கம், மீண்டும் வருக:

அதன் பின்னரே அரசியல் தீர்வு பற்றிய பேச்சை ஆரம்பிக்கலாம் என்பதே புலிகளது நிலைப்பாடாக இருக்கிறது.

நேரடியாகச் சொல்லப்படாவிட்டாலும் புலிகள் அரசுக்கு விதித்துள்ள நிபந்தனைதான் இது.

பிரேமதாசா அரசாங்கமும் புலிகளும் பேச்சு நடத்தினார்கள். பின்னர் பேச்சு முறிந்தது.

மீண்டும் பேசுவது பற்றிய அறிகுறிகள் தென்பட்டபோது பிரேமா அரசு பின்வருமாறு சொன்னது:

**பேச்சுவார்த்தையில் புலிகளது தரப்பில் முடிவெடுக்கும் அதிகாரமுடைய தலைவர் கலந்துகொள்ள வேண்டும்.**

**பேச்சுக்கு வருவதானால் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கவேண்டும்.**

**ஏனைய கட்சிகளும் பேச்சில் கலந்துகொள்ளவேண்டும்.**

பேச்சுவார்த்தைக்கான அடிப்படைகள் என்று அவற்றை பிரேமா அரசு கூறியது.

ஆனால் புலிகள் அவற்றை நிபந்தனைகள் எனக் கூறி நிராகரித்தார்கள்.

நிபந்தனையில்லாத பேச்சுக்கு தாம் தயார் என்று அறிவித்தார்கள்.

ஒருமுறை பட்டது போதும் என்று நினைத்தோ என்னவோ பிரேமா அரசு தான் வற்புறுத்திய அடிப்படைகளை கெட்டியாகப் பிடித்து நின்றதால் பேச்சு மீண்டும் நடக்கவில்லை.

சந்திரிக்கா அரசு எவ்வித நிபந்தனையும் இல்லாமல் புலிகளோடு பேச்சை ஆரம்பித்தது.

புலிகள் பேச்சுவார்த்தை நடத்த நிபந்தனை விதிக்கவில்லை. பேச்சுவார்த்தையில் நிபந்தனை விதித்திருக்கிறார்கள்.

எதனை முதலில் பேசுவது என்பதற்கான புலிகளது நிகழ்ச்சி நிரலையே அரசு அனுசரித்துப்போக வேண்டி ஏற்பட்டது.

தமிழ் பேசும் மக்களது பிரச்சனை ஒரு அரசியல் பிரச்சனையாகும்.

அரசியல் தீர்வு ஒன்றின் மூலமாகவே அதற்கு தீர்வு காண முடியும்.

எந்தவொரு சிங்கள அரசும் நியாயமான அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதில்லை. எனவே தமிழீழமே முடிந்த முடிவு.

என்பதுதான் ஈழப் போராட்டத்தின் நியாயத்தை வலியுறுத்தக் கூறப்பட்ட வாதமாகும்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழீழம் அமைக்க பொதுமக்களின் ஆணையைக் கோரியது தமிழர் விடுதலைக் கூட்டணி.

பின்னர் பாராளுமன்றம் சென்றதும் பாடசாலை கட்டிடத் திறப்பு விழாக்களிலும், பாலங்களை திறந்துவைப்பதிலும் கூட்டணி பா.உக்கள் ஈடுபட்டனர்.

ஈழம் கேட்டவர்கள் ஏன் பாலம் திறக்கிறார்கள்? என்று கேட்கப்பட்டது.

அதற்கு கூட்டணியினர், "எமக்கு பாலமும் வேண்டும்-ஈழமும் வேண்டும்" என்றார்கள்.

தமிழீழத்தை அமைத்த பின் அபிவிருத்தியை பார்த்துக்கொள்ளலாம்: அபிவிருத்திக்காக அரசிடம் கையேந்தத் தேவையில்லை.

என்று புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புக்களும் கூறிக்கொண்டன.

சோறா சுதந்திரமா என்ற வாதங்களும் எழுந்தன.

முதலில் தீர்வு பின்னர்தான் அபிவிருத்தி என்ற அடிப்படையில்தான் அன்று கூட்டணியினரை சகல இயக்கங்களும் எதிர்த்தன.

இன்று ஒரு பாலத்தை கட்டி என்ன பிரயோசனம்? நாளை அந்த பாலத்தை படைகள் உடைக்கலாம் அல்லவா? எனவே முதலில் ஈழத்தை அமைப்போம். பின்னர் உடைக்கவே முடியாத சூழலில் கட்டிடங்களை அமைப்போம் என்றன இயக்கங்கள்.

இதனை மறுத்துப்பேசி கிடைப்பதை பெற்றுக்கொண்டு தமிழீழத்திற்கு போராடுவோம் என்ற கூட்டணி தலைவர்களுக்கு மரண தண்டனை விதித்தவர் பிரபாகரன்.

ஆனால், இப்போது புலிகளும் அதே இடத்திற்கு வந்துவிட்டார்கள்.

முதலில் புனரமைப்பு பின்னர் அரசியல் பேச்சு என்கிறார்கள் புலிகள்.

புலிகள் பேச்சு நடத்துவதற்கு தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தால்,

அல்லது அரசாங்கத்தை நம்பக்கூடாது என்று தமிழர்கள் மத்தியிலே பரவலான கருத்து இருந்தால் முதலில் அந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும். அதற்கு அரசு சில காரியங்களை உடனடியாக செய்ய வேண்டும் என்று புலிகள் கோருவதில் நியாயம் இருக்கும்.

ஆனால், தமிழ் மக்கள் பள்ளிக்கூடங்களை கட்டுவதையோ, தெருப் போடுவதையோ கேட்டுக்கொண்டு இருக்கவில்லை.

தமது பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு கண்டாக வேண்டும். யுத்தம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதையே அவசரமாக எதிர்பார்க்கிறார்கள்.

புலிகளும்-அரசும் பேசவேண்டும். அந்த

**— நாரதர் —**

பேச்சு வெற்றியளித்து நீண்டகால இறுக்கம் தளரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

முதல் சுற்றுப் பேச்சுக்கு சென்ற அரச பிரதிநிதிகளை விழுந்தடித்து மக்கள் வரவேற்றார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்கா மீதும் தமிழ் மக்கள் புதிய நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

எனவே மக்களுக்கு நம்பிக்கையூட்டுங்கள். அப்போதுதான் பேச்சு நடத்த மக்கள் அனுமதிப்பார்கள் என்று புலிகள் அரசுக்கு சொல்லவேண்டிய அவசியம் தற்போது இல்லை.

அரசையும், புலிகளையும்விட மக்கள்தான் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்று காணப்பட்டுவிட வேண்டும் என்று விரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய மோதல் தவிர்ப்புக்கூட எங்கே முறிந்துவிடுமோ என்று கவலைப் படுபவர்கள் வடக்கு-கிழக்கு மக்கள்தான்.

நீதியான அரசியல் தீர்வே நிரந்தர சமாதானத்திற்கான உத்தரவாதம் என்பதால் மக்களின் எதிர்பார்ப்பு அரசியல் தீர்வு பற்றியதாகவே இருக்கிறது.

அரசியல் தீர்வு இல்லாமல் திறக்கப்படும் பாதை மீண்டும் மூடிக்கொள்ளக்கூடும். கட்டப்படும் கட்டிடங்களும் மீண்டும் இடியக் கூடும். மின்சார விநியோகமும் கிடைத்தாலும் மீண்டும் நிறுத்தப்படக்கூடும்.

அரசியல் தீர்வு இல்லாத அபிவிருத்தி அத்திவாரமில்லாத கட்டிடம் போன்றதுதான்.

புலிகள் நிபந்தனை விதிப்பது போல அரசும் நிபந்தனைவிதித்தால் என்ன செய்வது?

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் தமது சொந்த பகுதிகளுக்கு திரும்பிச் செல்லவேண்டும். புலிகளது காவலில் உள்ள பொலிஸ்-இராணுவத்தினர் அனைவரும் விடுதலையாக வேண்டும்.

புலிகள் யாழ் மக்களுக்கு விதித்துள்ள பாஸ் தடையை முற்றாக நீக்கவேண்டும்.

என்று அரசு கோருமானால் என்னாகும்? இழுபறி நிலை ஏற்படும்.

ஆனால் வடபகுதி மக்களும் இலங்கை அரசின் பிரஜைகள் என்ற வகையில் அந்த மக்களுக்கு உடனடித் தேவைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று புலிகள் கேட்பது நியாயமானால்,

தனது பிரஜைகளை புலிகள் 'பாஸ்' தடை போன்றவற்றால் கட்டுப்படுத்துவதை நிறுத்தக் கோரவும் அரசுக்கு உரிமையுண்டல்லவா?

புலிகள் பற்றிய நம்பிக்கையை சிங்கள மக்களிடம் ஏற்படுத்தவேண்டுமானால் காவலில் உள்ள பொலிஸ், இராணுவத்தினரை புலிகள் விடுதலை செய்ய வேண்டும் என்று அரசும் புலிகளது பாணியில் கேட்கலாம் அல்லவா?

ஆனால், அரசு அவ்வாறு கோரக்கூடிய சூழ்நிலையில் இல்லை.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று, பேச்சுவார்த்தையை குழப்பியதாக தன்மீது பழி விழுந்துவிடக்கூடாது என்று அரசு நினைக்கிறது.

இரண்டு, புலிகளை உடனடியாக பகைத்துக்கொண்டால் தனது நிலை பலவீனமாகிவிடும் என்று அரசுக்கு தெரிந்திருக்கிறது.

அதனால் கூடியவரை உடனடிப் பிரச்சனை பற்றிய புலிகளது கோரிக்கைகளை நிறைவேற்றவே அரசும், ஜனாதிபதியும் விருப்பம் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

ஆனால், புலிகள் அரசியல் தீர்வொன்றுக்கு உடன்பட்டுவிட்டார்கள் என்ற நிலை ஏற்படும்வரை அரசால் ஒரு வரையறைக்கு மேல் இறங்கிச் செல்ல முடியாது.

பொருளாதார தடையை மேலும் தளர்த்தலாம். கடல் வலயத்திலும் மேலும் தடைத் தளர்வு ஏற்படுத்தலாம். பூநகரி பாதையில் இருந்து இராணுவம் ஒரு குறிப்பிட்ட தூரம் பின்வாங்கி நிற்க இணக்கம் காணலாம்.

ஆனால், முற்று முழுதாக தனது படைகளது பிடியை அகற்றிக்கொள்ளச் செய்ய அரசு முன்வராது.

இதற்கு முக்கிய காரணம் புலிகள் பற்றிய சந்தேகம். புலிகள் ஏமாற்றக்கூடும்; அப்போது உள்ளதையும் பறிகொடுத்தார் சந்திரிக்கா என்று பழி விழக்கூடாது என்கின்ற ஜாக்கிரதை.

அரசு சந்தேகம் கொள்ளக்கூடாது என்று ஒரு தலைப்பட்சமாக கூறவும் முடியாது.

ஏனென்றால் புலிகளும் அரசுமீது சந்தேகம் கொண்டே ஒவ்வொரு நகர்வையும் மேற்கொள்ளுகிறார்கள்.

இது இயல்பானது. நீண்டகால விரோதம் கொண்ட இரு தரப்புக்களை "சந்தேகம் ஏன் உங்களுக்குள்" என்று கேட்பது அறிவீனம்.

"நம்ப நட, நம்பி நடவாதே" என்பதுதான் உறுதியான தீர்வு எட்டப்படும்வரையான அணுகுமுறையாகும்.

பண்டா-செல்வா ஒப்பந்தம்; டட்லி-செல்வா ஒப்பந்தம் எல்லாமே நம்பித்தான் செய்யப்பட்டன. அதனால்தான் நம்பிக் கெட்டோம் என்று தந்தை செல்வா போன்றோர் தலையில் அடித்துக்கொண்டார்கள். அப்படிப் புலம்ப பிரபா விரும்பமாட்டார். அதுபோல பிரேமா-புலிகள் பேச்சு நம்பிக்கையோடுதான் எதிர்பார்க்கப்பட்டது.

இறுதியில் பேச்சு முறிந்தபோது பிரேமா ஏமாற்றப்பட்டார்; புலிகளுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டார் என்று அன்றைய எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டியிருந்தன.

எனவே-அந்த நிலை அதே குற்றச்சாட்டுக்கு தன்னையும் உட்படுத்தக்கூடாது என்று சந்திரிக்கா நினைப்பார்.

அரசு மீதான சந்தேகத்தின் அடிப்படையில் புலிகளது உடனடிக் கோரிக்கைகளும் அமைந்துள்ளன.

சீதைமீது இராமனுக்கு சந்தேகம் ஏற்பட்டதால்தான் தீக்குளிப்பு பரீட்சை நடந்தது.

அரசுமீது புலிகளுக்கு சந்தேகம். அதனால்தான் உடனடிப் பிரச்சனைகளை தீர்க்க முடிகிறதா பார்ப்போம் என்று பிரபா பரீட்சை வைத்திருக்கிறார்.

அரசை நம்பி ஏமாறத் தயாரில்லை. ஆனால் சந்தர்ப்பம் கொடுப்போம் என்று புலிகள் பகிரங்கமாகவே சொல்லுகிறார்கள்.

எனவே-புலிகளது உடனடிக் கோரிக்கைகள் என்பவை மக்களுக்கு நம்பிக்கையூட்ட முன்வைக்கப்பட்டவையல்ல.

அரசாங்கம் பிரச்சனைகளைத் தீர்க்கும் என்று நம்பும் மக்களுக்கு "அது உண்மையல்ல" என்னும் கருத்தையூட்டவே புலிகள் விரும்புகிறார்கள்.

"ஈழத்தை தவிர எதையும் தருவோம்" என்று அரசு சொல்வதை புலிகள் நம்பவில்லை.

"மாற்றுத் திட்டம் இருந்தால் பரிசீலிப்போம்" என்று புலிகள் கூறினாலும் அவர்கள் ஈழத்தை தவிர வேறு எதையும் ஏற்றுக்கொள்வார்களா என்பதில் அரசுக்கு சந்தேகம் இருக்கிறது.

இந்த இரு தரப்பு சந்தேகமும் அவர்கள் தரப்புக்களைப் பொறுத்து நியாயமானவையே.

ஆனால் இந்த சந்தேகங்கள்தீர ஒரே வழி-அரசியல் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிப்பதுதான்:

தன்னால் எதைக் கொடுக்க முடியும் என்று அரசு வெளிப்படுத்தட்டும்.

தன்னால் அதனை ஏற்கமுடியுமா? இல்லையெனில் ஏன் என்று புலிகள் கூறலாம்.

இதனைச் செய்ய அரசு தயார். ஆனால் புலிகள் தரப்பில் ஒரு தயக்கம் தெரிகிறது.

ஏன் அந்தத் தயக்கம்? காரணம் இல்லாமல் இல்லை.

அரசு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால்கூட புலிகளிடம் தற்போதுள்ள அதிகாரங்களை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் அது அமையப் போவதில்லை.

ஆனால், ஏனைய தமிழ் கட்சிகளும் சர்வதேச அபிப்பிராயமும் முதல் கட்டமாக அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்று கருதக்கூடும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை புலிகள் முதலில் ஏற்றுக்கொண்ட நிர்ப்பந்தம்போல் இது அமைந்துவிடும்.

அல்லது அதனை நிராகரித்து போர் நடத்தினால் சர்வதேச அபிப்பிராயம், உதவிகள் என்பவை சந்திரிக்கா அரசின் பின்னால் நிற்கும்.

தற்போது புலிகள் சமஷ்டி பற்றி பேசுகிறார்கள். ஆனால் தன்னாட்சியுள்ள சமஷ்டி என்றுதான் கூறுகிறார்கள்.

அந்த தன்னாட்சி என்பதில்தான் சிக்கல். புலிகள் எந்த அடிப்படையில் அவ்வாறு கூறுகிறார்கள் என்று யாருக்கும் விளக்கமில்லை.

எனவே அரசு எந்த தீர்வை முன்வைத்தாலும் இது போதாது என்று கூறக்கூடிய ஒரு பதப்பிரயோகமாக **'தன்னாட்சியுள்ள சமஷ்டி'** என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அரசோ வடக்கு-கிழக்கு இணைப்புக்காவது தான் தயாரா என்றுகூட கூறவில்லை.

எனவே-அரசு முன்வைக்கும் தீர்வுத் திட்டம் புலிகளை திருப்திப்படுத்த

**(6ம் பக்கம் பார்க்க)**



**வ**ணக்கத்துக்குரியவர் வந்து போன கையோடை ஒரு புது மொட் உருவாகியிருக்குது. சிறுசுகள் முதல் பெரிசுகள்வரை 'ஆய்போவான், வணக்கம்,' எண்டல்லோ சொல்லித் திரியினம். நல்ல விசயம்தானே.

**வி**மான நிலையத்தில் வணக்கத்துக்குரியவரின் பிரியாவிடை நிகழ்ச்சியிலை ஒரு முக்கிய புள்ளி மிஸ்ஸிங். விமான நிலையம் எந்த மாவட்டத்திலை இருக்குதோ அந்த மாவட்ட அதிகார மட்ட வெகுஜன பிரதிநிதியை காணவில்லை. ஏதோ உள்ளே சின்னப் புகைச்சலாம். அந்த வெகுஜன பிரதிநிதி யார் தெரியுமோ? தமிழர்தான். கத்தோலிக்க மதத்தவர். 'பிள்ளை' எண்டு அவர் பெயர் முடியும். கண்டுபிடியுங்கோவன்.

**ரெ**ண்டு எழுத்தார் புதியவரை பற்றி நல்ல அபிப்பிராயத்திலை இருக்கினம் எண்டு நினைச்சுக்கொண்டு விழுந்து விழுந்து வாழ்த்தி எழுதினவையல்லோ சில விமர்சகவித்தகர்கள்! இப்ப ரெண்டு எழுத்தார் அதிருப்திப்படுகினம் எண்டு தெரிஞ்சவுடனை அந்த விமர்சகர்களின் சுருதியே மாறிப்போச்சுங்கோ. எல்லாப் பிழையும் அதிகார மட்டத்தில் எண்ட மாதிரி எழுதித் தள்ளுகினம். அதுசரி இவை விமர்சகர்களோ வைத்தியர்களோ. ரெண்டு எழுத்தாரின் நாடித்துடிப்பை பார்த்து அதுக்கேற்ற மாதிரி எழுதுறதாலைதான் இந்த சந்தேகம் வருகுது பாருங்கோ.

**கி**ழக்கிலை ரெண்டு எழுத்தார் தேனக தலைநகரிலை நடமாடுகினம். இடுப்பிலை பொருளோடைதான் உள்ளே வருகினமாம். பச்சை உடையினருக்கும் அது தெரியும். சுருக்கமா சொல்லும்போது 'லோ' என்ற எழுத்தில் முடியும் இயக்கக்காரர் ரெண்டு எழுத்தாரின் பின்னாலை திரிஞ்சு நோட்டமிடுகினமாம்.

## அதிரடி அய்யாத்துரை

**த**மிழ் நாட்டிலை இருந்துகொண்டு தமிழாராய்ச்சி மாநாட்டை கண்டிச்ச இலங்கைக்காரர் அங்கை ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனம் வைச்சிருந்தவர். செல்வி அணியின் கோபத்துக்கு பயந்து புத்தக கடையை மூடி மூட்டை முடிச்சோடு ஒடி வந்திட்டாராம் சா....சச்சா....

**வ**டக்கிலிருந்து வந்த பக்தர்கள் விடயத்திலை வயதுக்கட்டுப்பாடு மட்டும்தான் தளர்த்தப்பட்டதாம். பிணைவைச்சுத்தான் வந்தவையாம். வந்த தொகையிலை ஒருவர் குறைந்திருந்தாலும் பொறுப்பாக வந்த 'பிதாக்கள்' பதில் சொல்லியிருக்க வேண்டியநிலை வந்திருக்குமாம்.

**பு**னிதரைக் காண யாழிலிருந்து பத்தாயிரம்பேர் வருவினம். ஆனையிறவு பக்தர்களுக்காக திறக்கும் எண்டெல்லாம் செய்தியள் வந்ததல்லோ. ஆனால் பாருங்கோ, ஐயாயிரம் பேர் வரைதான் வருவினம்; கிளாலியாலைதான் வருவினம் எண்டு 'முரசு' முந்திப்போட்ட செய்திப்படிதான் காரியம் நடந்திருக்கு.

**நா**டு முழுக்கவிருந்து இன்னும் சனம் வந்து சேர்ந்திருக்குமாம். சிறு சலசலப்புக்கள் இருந்தபடியால்தான் பிரச்சனை வருமோ எண்டு பயந்து வரேல்லையாம். தீக்குளிப்பு எண்டு சொல்லிக்கொண்டிருந்தவர் அதைச் செய்யேல்லை. செய்யுறவர் சொல்லிப்போட்டோ செய்வார்? இது எனக்கு முந்திலேயே தெரியும் பாருங்கோ.

**வ**டக்கேயிருந்து வந்த பயணிகளுக்குச் சீருடையினர் நல்ல உபசரிப்பு செய்தவை. அதே நேரத்திலை விழிப்பாயும் இருந்தவையாம். பயணிகளுக்கு உதவி செய்ய நியமிக்கப்பட்ட ஆட்கள் சிலர் ஒற்றர் பிரிவினராம். அதே மாதிரி வந்த பயணிகளை கவனிக்க ரெண்டு எழுத்தாரின் ஒற்றர் பிரிவினர் சிலரும் கூட வந்தவையாம். இரண்டு பகுதியும் ஒத்துழைத்துக்கொண்டு ஒரு கண்ணும் வைச்சிருந்திருக்கினமாக்கும்.

**பு**துக்கவிதை எண்டால் வாக்கியத்தை உடைச்சுப் போடுற விசயமல்ல. சுருக்கென்று படிப்பவர் நெஞ்சில் தைக்கிற மாதிரி எழுதவேணும். பொ.துரையரசன் என்ற தமிழ்நாட்டு கவிஞர் எழுதின ஒரு கவிதை:

**"அடுத்த குழந்தை**
**இப்போது வேண்டாம்.**
**இரண்டிற்கு பிறகு**
**எப்போதும் வேண்டாம்.**
**அரசு விளம்பரங்கள்**
**கண்ணைப் பறித்தன.**
**ஆமாம் இரண்டுக்கு மட்டும்**
**என்ன திட்டம்**
**போட்டுள்ளார்களாம்?"**

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# 12 கண்ணீர் விட்டுக் கதறிய இளைஞர்கள்

# இளைஞர்களைக் கடந்துசென்ற தலைவர்!




'தி ஐலண்ட்' பத்திரிகை அன்று வெளியிட்ட கருத்தோவியம்

## முதல் பெரிய கொள்ளை

5.12.78இல் நடைபெற்ற திருநெல்வேலி மக்கள் வங்கிக் கொள்ளையில் பிரபாகரனும் நேரடியாகப் பங்கு கொண்டார்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளைகளையடுத்து பாதுகாப்பை அரசு பலப்படுத்தியிருந்தது.

திருநெல்வேலி மக்கள் வங்கியில் மூன்று பொலிசார் பாதுகாப்புக்காக இருந்தனர். ஒருவர் இயந்திரத் துப்பாக்கியும் வைத்திருந்தார்.

அந்த இயந்திரத் துப்பாக்கியை பறித்தெடுத்து பொலிசாரை நோக்கி சுட்டனர் புலிகள்.

ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கழிவறைக்குள் ஓடிச்சென்று கதவை மூடிக்கொண்டார். கதவை உடைத்து அந்த கான்ஸ்டபிளையும் சுட்டுக்கொன்றார்கள்.

கிங்ஸ்லி பெரேரா, சத்தியநாதன் என்னும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டனர். செல்வம் என்னும் பொலிஸ் கான்ஸ்டபிள் படுகாயமடைந்தார்.

12 இலட்சம் ரூபா பணத்துடன் அங்கிருந்த கார் ஒன்றை பறித்தெடுத்துக் கொண்டு புலிகள் தப்பிச் சென்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் நடைபெற்ற மிகப்பெரிய வங்கிக் கொள்ளை அதுதான்.

78ம் ஆண்டு 12 இலட்சம் ரூபா என்பது மிகப்பெரிய தொகைதான்.

## வெளவால் கதை

இக்கால கட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையின் கீழ் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவைக்குள் பிளவுகள் ஏற்படத் தொடங்கின.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையின் தீவிரம் போதாது என்று இளைஞர் பேரவையில் ஒரு சாரார் வெளிப்படையாகவே பேசத் தொடங்கினார்கள்.

1978ம் ஆண்டு கியூபாவில் நடைபெற்ற இளைஞர் மாணவர் மாநாட்டுக்கு கூட்டணி சார்பில் அனுப்பப்பட்டவர்களில் மூவர் புலிகளைச் சேர்ந்தவர்கள். காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள்.

கியூபாவுக்கு தன்னை அனுப்பி வைக்கவில்லை என்று வண்ணை ஆனந்தனுக்கு கோபம்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பிரசார பீரங்கியாக இருந்தவர் வண்ணை ஆனந்தன்.

உண்மையாகவே சிறந்த பேச்சாளர். வண்ணை ஆனந்தன் பேசும் கூட்டங்கள் என்றா[ல்] மக்கள் திரளுவார்கள்.

கூட்டத்தின் முன்னால் அமர்ந்திருக்கும் சிறுவர்களைப் பார்த்து வண்ணை ஆனந்தன் கேள்வி ஒன்று கேட்பார்,

**"மரம் பழுத்தால்**
**என்ன வரும்?"**

உடனே சிறுவர்கள் பதில் சொல்லுவார்கள்.

**"வெளவால் வரும்!"**

சிறுவர்கள் பதில் சொன்னவுடன் வண்ணை ஆனந்தன் சொல்லுவார்,

**"வரும் வெளவால் காலில்**
**பீரங்கியுடன்தான் வரும்"**

கூட்டத்தில் கரகோசம் வானைப் பிளக்கும்.

தமிழீழக் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவு உண்டென்று தெரிந்தால் வெளிநாட்டு உதவி கிடைக்கும். ஆயுத உதவியாகவும் அது கிடைக்கும் என்பதுதான் 'வெளவால்' கதையின் அர்த்தம்.

## குமார்மீது தாக்குதல்

ஒரு சுவாரசியமான தகவலை இந்த நேரத்தில் சொல்லவேண்டும்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஒரு ஆசனம் கேட்டவர் குமார் பொன்னம்பலம்.

கூட்டணி ஆசனம் கொடுக்கவில்லை. குமாருக்கு ஆவேசம் வந்துவிட்டது.

யாழ் தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கூட்டணி சார்பாக போட்டியிட்டவர் யோகேஸ்வரன்.

தமிழீழக் கோரிக்கையை கிண்டல் செய்தும், கூட்டணித் தலைவர்களை கேலி செய்தும் பிரசாரம் நடத்தினார் குமார் பொன்னம்பலம்.

குமாரை மேடைகளில் கிழிக்கத் தொடங்கினார் வண்ணை ஆனந்தன்.

குமாரின் சின்னம் மரம். அது வண்ணை ஆனந்தனுக்கு வசதியாகிவிட்டது.

"குமார் நீ மரமாக வந்து குறுக்கே நிற்கிறாய். எட்டப்ப வேலை செய்கிறாய்?"

என்று ஒருமையில் அழைத்து வசை பாடுவார்.

குமார் பொன்னம்பலத்தின் மாமனார் முருகேசம்பிள்ளை. யாழ் அரசாங்க அதிபராக இருந்தவர்.

பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி ஹர்த்தால் நடத்தியது.

அந்த நேரத்தில் நல்லூர் கோவிலுக்கு சென்றார் பிரதமர் சிறிமாவோ.

அவரது காலுக்கு தண்ணீர் ஊற்றி வரவேற்றவர் முருகேசம்பிள்ளை.

அந்தச் சம்பவத்தையும் மேடைகளில் குறிப்பிடுவார் வண்ணை ஆனந்தன்.

"தந்தை செல்வாவின் மைந்தன் சந்திரகாசன் ஆசனம் கேட்கவில்லை. எங்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்கிறார்.

ஆனால் குமார் எங்களிடம் ஆசனம் கேட்டுவிட்டு அதனைக் கொடுக்கவில்லை என்பதற்காக எதிர்த்து போட்டியிடுகிறார்.

என்ன காரணம்?

தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் இரும்பு மனிதன் நாகநாதனின் மருமகன்.

குமார் பொன்னம்பலம் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலுக்கு தண்ணீர் ஊற்றிய முருகேசம்பிள்ளையின் மருமகன். அதுதான் துரோகமான வேலை செய்ய ஏவப்பட்டிருக்கிறார்"

என்று சொல்வார் வண்ணை ஆனந்தன்.

இவ்வாறு பிரசார பீரங்கியாக இருந்த வண்ணை ஆனந்தனை கியூபாவுக்கு அனுப்பவில்லை கூட்டணி.

## எங்கே தேசிய மன்றம்

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மக்களிடம் சொன்னார்கள்.

**"தேர்தலில் வெற்றி பெற்றவுடன் தமிழீழ தேசிய மன்றத்தை உருவாக்குவோம். தமிழீழ அரசியல் சட்டத்தை வகுப்போம்."**

சொன்னார்களே தவிர வெற்றி பெற்றவுடன் அதனை மறந்துவிட்டார்கள்.

தமிழ் இளைஞர் பேரவையில் இருந்த தீவிரப் போக்குடைய இளைஞர்கள் "தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டு" என்று குரல் கொடுக்கத் தொடங்கினார்கள்.

அவர்களோடு வண்ணை ஆனந்தனும் சேர்ந்து குரல் கொடுத்தார்.

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோர்வை தயாரிக்கவேண்டும் என்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசினார் வண்ணை ஆனந்தன்.

## திறப்பு விழா

யாழ்ப்பாணத்தில் காப்புறுதிக் கூட்டுத்தாபன திறப்பு விழா ஒன்று நடைபெற்றது.

திறப்பு விழாவில் யாழ் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ள விருந்தனர்.

விசயமறிந்த இளைஞர்கள் நூறுபேர் வரை யாழ் பா.உ யோகேஸ்வரன் வீட்டின் முன்பாக குழுமிவிட்டனர்.

"சிங்கள அரசின் கூட்டுத்தாபனத்தை திறந்துவைக்கும் விழாவுக்கு செல்ல வேண்டாம்."

என்றார்கள் இளைஞர்கள்.

யோகேஸ்வரன் இளைஞர்களிடம் சொன்னார்,

"இது அமுதரின் கட்டளை. நான் மீற முடியாது. போயே ஆகவேண்டும்."

அப்போது அங்கே வந்தார் வண்ணை ஆனந்தன். அவரை கொண்டு சென்று யோகேஸ்வரன் முன்பாக நிறுத்திவிட்டு,

"எடுத்துச் சொல்லுங்கள் வண்ணை அண்ணா!"

என்றனர் இளைஞர்கள்.

வண்ணை ஆனந்தன் கண்ணீர் விட்டார்.

"இவர்களை மீறிப் போகவேண்டாம்"

என்று சொன்னார்.

யோகேஸ்வரன் தனது முடிவில் உறுதியாக இருந்தார். இளைஞர்கள் யோகேஸ்வரன் வீட்டின் வாயில் முன்பாக அமர்ந்துவிட்டனர்.

"எங்களை தாண்டி போக நினைத்தால் போகலாம்" என்றனர்.

உதயசூரியன் சின்னம் பொறித்த சால்வையோடு இளைஞர்களை கடந்து காப்புறுதிக் கூட்டுத்தாபன விழாவுக்கு போனார் யோகேஸ்வரன்.

அவர் கடந்து சென்றபோது இளைஞர்கள் சிலர் கண்ணீர்விட்டபடி சொன்னார்கள்:

"போகிறீர்களே அண்ணா!"

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்பாக வந்திறங்கினார் மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம்.

கூட்டணியின் தீவிர தொண்டராக இருந்த அப்பையா என்ற இளைஞன் ஓடிச்சென்று அவரது கையில் பிடித்தான்.

"போகவேண்டாம் அண்ணா!"

கையை உதறி விடுவித்துக்கொண்டு விழாவுக்கு சென்றார் தர்மலிங்கம்.

யாழ் நகர மேயர் துரையப்பா போன்றவர்கள் திறப்பு விழாக்கள் நடத்தியபோது துரோகிகள் என்ற தலைவர்கள்,

தாமே நேரடியாக அரச திறப்பு விழாக்களில் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

இளைஞர்களின் நம்பிக்கையீனம் மெல்ல மெல்ல வளர்ந்தது.

## ஆவரங்கால் மாநாடு

1978ம் ஆண்டு யாழ்ப்பாணம் கோப்பாய் தொகுதியில் உள்ள ஆவரங்காலில் கூட்டணி மாநாடு நடத்தியது.

இளைஞர் மாநாட்டுக்கு கோப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரன் தலைமை தாங்கினார்.

இவர் கைதடி வங்கிக்கொள்ளையில் சம்பந்தப்பட்டவர். இளைஞர் பேரவை ஆயுதம் ஏந்தவேண்டும் என்ற கொள்கையுடையவர்.

"தலைவர்கள் தீவிரமாக செயற்படவேண்டும். வேகம் போதாது. கல்லும், முள்ளும் காடுமே வாழ்க்கையாகிவிட்ட எங்கள் இளைஞர்களை நினைத்துப் பாருங்கள். போராட திட்டம் வகுத்துத் தாருங்கள்"

என்று பேசினார் பரமேஸ்வரன்.

இறுதியாக மாநாட்டு நிறைவாக பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அச்சுவேலி சந்தியில் இருந்து ஆவரங்காலை நோக்கி ஒரு ஊர்வலம் வந்தது.

"தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டுக" என்று அந்த ஊர்வலத்தில் வந்த இளைஞர்கள் கோஷம் எழுப்பிக்கொண்டு வந்தார்கள்.

மாநாட்டுக்குள் ஊர்வலம் வந்தவுடன் கூடியிருந்த மக்கள் ஏதோ பிரச்சனை என்று பயந்து எழுந்து ஓடத் தொடங்கி விட்டனர்.

மேடையில் 'வாழ்க ஈழ தமிழகம்' என்னும் பாடலை பாடிக்கொண்டிருந்தார்கள்.

## தேசிய கீதம்

அதுதான் தமிழீழ தேசிய கீதம் என்று கூட்டணியினரால் கூறப்பட்ட பாடலாகும்.

கூட்டங்கள் ஆரம்பிக்கும்போது தேசியகீதம் இசைக்கப்படுவது கூட்டணியின் அன்றைய நடைமுறை.

**"வாழ்க ஈழத் தமிழகம்**
**வாழ்க இனிது வாழ்கவே.."**

தமிழீழ தேசிய கீதம் என்று சொல்லப்பட்ட இந்த பாடலை இயற்றியவர் புலவர் பரமஹம்சதாசன். இவர் ஒரு இந்திய குடிமகன். அந்தப் பாடலையும் காசி ஆனந்தனே எழுதியதாக தவறாக நினைக்கப்பட்டதுமுண்டு.

மாநாட்டு மேடையில் பாடல் தடைப்பட்டது. மேடையில் அமிர்தலிங்கம்–சிவசிதம்பரம் போன்ற தலைவர்களும் நின்றுகொண்டிருந்தனர்.

சிவசிதம்பரம் சற்று அதிர்ந்து போனார். அமுதர் முகம் சிவந்தது.

ஊர்வலத்தில் வந்தவர்களை ஒருமுறை உற்றுக் கவனித்துவிட்டு அமுதர் சொன்னார்.

"இது ஈழ விடுதலை இயக்கக்காரரின் வேலை. தொடர்ந்து பாடுங்கள்"

சிவசிதம்பரம் பாடல் முடிந்தவுடன் கூடியிருந்த மக்களைப் பார்த்து சொன்னார்:

"தமிழீழ தேசிய கீதத்திற்கே மதிப்பு கொடுக்க முடியாதவர்கள் தமிழீழத்திற்காகப் போராடப் போகிறார்களா?"

ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிய முத்துக்குமாரசாமி உடனே ஒரு சிறு தாளில் ஒரு குறிப்பு எழுதி சிவாவிடம் அனுப்பினார்.

"தேசிய கீதம் பாடுவதை குழப்ப நாம் நினைக்கவில்லை. ஊர்வலம் வந்தபோது பாடலும் இசைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. தற்செயல் சம்பவம்."

சிவா குறிப்பை படித்துவிட்டு அலட்சியமாக இருந்துவிட்டார்.

கூட்டத்திற்குள் ஊர்வலத்தினர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள்.

அமுதருக்கு கோபம் வந்துவிட்டது.

"தொண்டர்களே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? பிரசுரம் விநியோகிப்பதை தடுத்து நிறுத்துங்கள்!"

என்று ஒலிபெருக்கியில் கட்டளையிட்டார்.

**(தொடர்ந்து வரும்)**

## (எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி)

முடியாது என்பது தெரிந்த விடயம்.

ஆனால், சர்வதேச அபிப்பிராயம் மற்றும் அந்த தீர்வுத் திட்டத்தை ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டால் தமது இயக்கத்திற்குள் ஏற்படக்கூடிய தளர்வு கள் போன்ற சிக்கல்கள் எதற்கு என்றே பிரபா நினைக்கிறார்.

எனவேதான் உடனடிப் பிரச்சனை என்ற தளத்தில் வைத்தே இரண்டில் ஒன்றை தீர்மானித்துவிடவே புலிகள் விரும்புகிறார்கள்.

புலிகளது இந்த வியூகத்தை ஊடறுத்து செல்ல நினைக்கும் அரசு பொருளாதார தடை தளர்வு, மற்றும் மூவாயிரம்கோடி ரூபாய்களில் அபிவிருத்தி போன்ற திட்டங்களை முன்வைத்துப் பார்த்தது.

ஆனால், புலிகள் அதனை அவதானித்து விட்டு தமது பொறியைப் பூநகரியில் வைத்திருக்கிறார்கள்.

புலிகளது இராணுவ நிலைகள் எதனையும் அகற்றுமாறு அரசு கோரவில்லை.

தீர்வுக்கு முன் அவ்வாறு கோருவதும் நியாயமில்லை.

ஆனால், புலிகள் பூநகரியில் இராணுவ முகாமை அகற்றுமாறு கோருகிறார்கள்.

இராணுவத்தை அகற்றுவது அரசுக்கு ஒன்றும் முடியாத காரியமல்ல.

ஆனால், புலிகளோடு மீண்டும் போர் தொடங்கினால் எந்த முகத்தோடு இராணுவத்தை எதிர்கொள்வது என்பதுதான் அரசின் யோசனையாக இருக்கிறது.

'போ என்றால் போ வா என்றால் வா' என்று கட்டளைக்கு மட்டும் கட்டுப்பட இராணுவத்தினர் வெறும் இயந்திரங்களல்ல.

அவ்வாறு செய்தார் என்றுதானே பிரேமா மீது அன்று கடும் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது.

எனவே கிளாலி போக்குவரத்தை கண்டும் காணாமல் இருந்துகொண்டு அரசியல் பேச்சை ஆரம்பிக்கலாம்; போக்குவரத்து பாதை பிரச்சனையை சற்று ஆறப்போடலாம் என்று அரசு நினைக்கிறது.

ஆனால், அரசு மீது நம்பிக்கையீனம் தெரிவிக்க சிறப்பு துருப்புச் சீட்டாக உள்ள பூநகரி பாதை விவகாரத்தை ஆறப்போட புலிகள் விடுவார்களா? விடமாட்டார்கள் என்றே தெரிகிறது.

இரு தரப்புமே தமது இராணுவ பலத்தை இழக்காமல் பேச்சைத் தொடருவதே சாத்தியமான ஒன்று.

நம்பிக்கையான அறிகுறிகள் காணப்படும் வரை சந்தேகம் நிலவும் என்பதால் இரு தரப்புமே தமது துப்பாக்கிகளை அலட்சியம் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது.

பூநகரி பாதை விவகாரத்தில் புலிகளது கோரிக்கை இராணுவ விவகாரத்தோடு தொடர்புடையது என்பதால்தான் அரசு கையைப் பிசைய வேண்டியிருக்கிறது.

முன்பு ஒருமுறை புலிகள் பிரேமா அரசிடம் கூறினார்கள்,

'பூநகரிப் பாதையை திறக்க முடியாவிட்டால் கிளாலி கடல் ஏரித் தடையை நீக்கவேண்டும்' என்று.

இப்போது சந்திரிக்கா அரசு பதவிக்கு வந்த பின்னர் கிளாலி பாதை போக்குவரத்து நடக்கிறது.

மோதல் தவிர்ப்புக்கு பின்னர் பகலிலும் போக்குவரத்து நடக்கிறது. அந்தப் பாதை தடைசெய்யப்பட்டிருந்த நேரத்திலும்கூட அதன் வழியாக வந்த மக்களை தாண்டிக்குளம் தாண்டி வவுனியா வர படையினர் அனுமதித்தனர். செல்லவும் அனுமதித்தனர். இப்படி அனுமதித்துக்கொண்டே கடலில் வைத்து வேட்டையும் நடத்தினார்கள்.

ஆனால், புலிகள் ஆனையிறவு மூலம் பயணிகள் யாழ் சென்றால் உள்ளே விடமாட்டார்கள். இப்போது போர் தவிர்ப்பு நேரத்தில் புலிகளது வாகனங்கள் படையினரது கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வந்து செல்லுகின்றன.

ஆனால், போர் தவிர்ப்பு என்று ஆனையிறவு ஊடாக பயணிகள் சென்றால் புலிகள் தமது கட்டுப்பாட்டு பகுதிக்குள் அனுமதிப்பார்களா? மாட்டார்கள்.

எனவே- போக்குவரத்து பாதை விவகாரத்தில் புலிகளது நிலைப்பாடுதான் அரசை விட இறுக்கமாக இருக்கிறது.

இதற்கான காரணங்கள்: புலிகள் தமது சுதந்திர நடமாட்டம் உள்ள பாதையை விரும்புவது,

கிளாலி பாதை மூலம் தமது போராட்டத்திற்கு கிடைக்கும் நிதி வருவாயை இழக்க விரும்பாமை,

மூன்றாவது காரணம்- அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத கோரிக்கை மூலம் அதன் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குவது.

பூநகரி பாதையை திறக்க முடியாவிட்டாலும் கிளாலி பாதையை அரசு தடைசெய்யப்போவதில்லை.

கிளாலி பாதை பயணம் மக்களுக்கு சிரமமானது. அதுபோல மழைக்காலங்களில் பூநகரிப்பாதை போக்குவரத்தும் சேறு சகதி நிரம்பியதுதான்.

எனவே- பொது மக்களுக்கு உள்ள சிரமத்தை தவிர்க்கவே பூநகரிப் பாதை என்று கூறமுடியாது. மேலும் ஏற்கனவே புலிகள் கிளாலி கடல் ஏரித் தடையை விலக்கி போக்குவரத்து நடத்துவது பற்றி கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

எனவே புலிகள் அரசியல் பேச்சை நடத்த விரும்பினால் விட்டுப்பிடிக்கும் முறையை பாதை திறப்பு விவகாரத்தில் கையாள முடியும்.

ஆனால் விட்டுப் பிடிப்பதைவிட கிடைத்த பிடியை விடாமல் இருப்பதே புலிகளது எண்ணம்.

ஆக, பூநகரி பாதை திறப்பு கோரிக்கை அரசுக்கு புலிகள் வைத்துள்ள பொறி- என்பது சந்தேகத்துக்கிடமற்றது.

அரசு-புலிகள் என்ற இருதரப்பும் ஒரு தரப்பின் இராணுவ பலத்தை மறுதரப்பு பலவீனப்படுத்தும் வகையில் கோரிக்கைகளை முன்வைக்காமல் நடந்துகொண்டால்தான் பேச்சைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியும்.

சந்தேகங்கள் இருக்கலாம். ஆனால் அந்த சந்தேகம் விட்டுக்கொடுப்புக்களுக்கு முட்டுக்கட்டையாகிவிடக்கூடாது. ஆனால் துரதிஷ்டவசமாக நிலமை அப்படித்தான் இருக்கிறது.

# முழுமையான சமஷ்டி அமைப்பை எதிர்பார்க்கும் தமிழீழ விடுதலைப் புலிகள்



"முற்று முழுதான தீர்வாக அமையாத இலங்கை-இந்திய ஒப்பந்தம்"



## தீர்வுத் திட்டங்களை முன்வைத்து ஆரம்பிக்கப்படவேண்டிய பேச்சுக்கள்

அலசுவது — இராஜதந்திரி

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தபோதிலும், இலங்கையர்கள் ஒரு தசாப்தகாலத்துக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் ஸ்தலயாத்திரைகளை மேற்கொள்வதில் பெரிதும் ஆர்வங் காட்டிவந்தனர்.

வடக்கேயிருந்து தெற்கே கதிர்காமம் வரை பயணஞ்செய்வோரும், தெற்கேயிருந்து வடக்கே சென்று பல்வேறு வணக்கஸ்தலங்களை தரிசிப்போருமாக யாத்திரிகர்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் யாத்திரைகளையும், சுற்றுப் பயணங்களையும் மேற்கொண்டு வந்தனர்.

வடக்கே மன்னார்ப் பகுதியில் கத்தோலிக்க மக்களின் பிரசித்தி பெற்ற திருத்தலமாக மடுத்திருப்பதி விளங்குகின்றது. இங்கே வருடந்தோறும் இடம்பெறும் உற்சவத்தின் போது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் வருவதுண்டு.

இதேபோல் சிங்கள மக்களும் வடக்கே நயினாதீவில் உள்ள நாகபூசணி அம்மன் கோயில், மற்றும் நாகதீபவிகாரை என்பவற்றை தரிசிக்க அவற்றின் உற்சவ காலங்களில் வடக்கே செல்வதுண்டு.

இத்தகைய ஸ்தலயாத்திரைகள், மற்றும் பயணங்கள் என்பன, இலங்கையரிடையே புரிந்துணர்வு, இன சௌஜன்யம் என்பவற்றை வளர்ப்பதில் பெரும் பங்காற்றியிருந்தன.

இருந்தபோதிலும் கடந்த ஒரு தசாப்த கால கெடுபிடி யுத்தம் இன்று இலங்கை மக்களை இனரீதியாகப் பெரிதும் அந்நியப்படுத்தியிருக்கக் காணப்படுகின்றது.

இவ்வகையில் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் கடந்தவார கொழும்பு விஜயம், இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள மக்களை ஒன்றிணைத்து அரசியலுக்கப்பாற்பட்ட விதத்தில் அவர்களை ஒன்றுகலக்கச் செய்திருந்தது.

வடக்கேயிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கொழும்புவந்து பரிசுத்த பாப்பரசரைத் தரிசித்திருந்தனர்.

இதன்மூலம் நீண்டகாலத்துக்குப் பின்னர் வடக்கேயுள்ள மக்கள் அரசியல் சார்பற்ற முறையில், பெருமளவில் வந்து தென்னிலங்கையில் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர். இலங்கையில் இன சௌஜன்யத்தைப் பாதுகாப்பதற்கான அனுகூலங்கள் தொடர்ந்து சாதகமாக இருப்பதனையே இந்த ஒன்றுகூடல் புலப்படுத்துவதாக இருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா அரசு பலத்த எதிர்ப்புகள், பாதுகாப்பு ரீதியான சவால்களுக்கு மத்தியிலேயே பரிசுத்த பாப்பரசரின் விஜயத்தை எதிர்கொண்டிருந்தது.

இந்நிலையில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக வன்முறைகள், கெடுபிடி யுத்தங்களால் சூழப்பட்டிருந்த இலங்கையில், பரிசுத்த பாப்பரசரின் விஜயம் எந்தவொரு விடயத்திலும் ஒரு நல்ல தோற்றுவாயை ஏற்படுத்தியதாகவே இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா அரசு, வடக்கு-கிழக்கு நெருக்கடியை தீர்த்துவைப்பது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கக் காணப்படுகின்றது.

கடந்த இருவாரங்களுக்கும் மேலாக இருந்து வரும் தாக்குதல் தவிர்ப்பு ஒழுங்கான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதனை வடக்கு கிழக்கிலிருந்து கிடைக்கும் தகவல்கள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

ஆங்காங்கே சில இடங்களில் சிறியளவில் அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும், அரச படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் பாரிய தாக்குதல்களை தவிர்ப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றனர். அத்துடன் இரு தரப்பினரும் தத்தமது முகாம்களை அண்டிய பகுதிகளில் சந்திப்புக்களையும் நடத்தி சிநேகபாவத்துடன் நடந்து கொண்டுள்ளனர்.

தாக்குதல் தவிர்பு ஒப்பந்தம் கொண்டுவந்துள்ள சமரச சூழ்நிலை தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்பதே சமாதான விரும்பிகளின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எதிர்காலத்தில் எந்தவொரு கட்டத்திலும் யுத்த நிலைமை மீண்டும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதனையே வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் விரும்புகின்றனர்.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இதுவரை நடத்திய சுற்றுப் பேச்சுக்கள் பெரும்பாலும் புனரமைப்பு நடவடிக்கைகள் சார்ந்ததாகவும், வடபகுதிக்கான போக்குவரத்துப் பாதையொன்றைத் திறப்பது சம்பந்தமாகவே விளங்கியிருந்தது.

அரச தரப்புப் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிய ஜனாதிபதியின் செயலாளர் திரு.பாலபட்ட பெந்தி பேச்சுவார்த்தைகள் குறித்து மேலோட்டமான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றாரே தவிர, உண்மை நிலையை ஒரு மூடுமந்திரமாகவே அவர் வைத்திருக்கக் காணப்படுகின்றார்.

ஆயினும் வடக்கே தமிழீழ விடுதலைப் புலிகள் அரசுடனான பேச்சுவார்த்தைகள் குறித்து வெளியிட்டுவரும் கண்ணோட்டங்களை நோக்குகையில், அரச தரப்பினர் அனைத்தையுமே இலகுவாக மட்டிட்டுவிடமுடியாதென்பதனையே உணரக்கூடியதாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், கடந்த வாரங்களில் வடக்கே வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் குழுவொன்றைச் சந்தித்திருந்தார்.

அப்பத்திரிகையாளர்கள் குழுவிடம் திரு.பாலசிங்கம் கருத்து வெளியிடுகையில் சமஷ்டி அமைப்பிலான ஆட்சிமுறையை தமது இயக்கம் பெரிதும் வரவேற்பதாகவும், அச் சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்கும் பட்சத்தில் அதுபற்றி விரிவாகப் பரிசீலனை செய்யத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, இலங்கையின் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள்கூட சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத்திட்டமொன்றையே வடக்கு,கிழக்குப் பிரச்னைக்குரிய தீர்வாக வலியுறுத்தி வருகின்றன.

1987ம் ஆண்டில் இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே கைச்சாத்தான இலங்கை-இந்திய ஒப்பந்தம் 'அதிகாரப்பரவலாக்கம்' என்ற விடயத்தை வலியுறுத்தியிருந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் பெரும்பாலும் நிர்வாகம், அதிகாரம் என்ற விடயங்களுக்குள் மட்டுமே பெரிதும் சுழன்றிருந்ததே தவிர ஒரு பூரணமான பிரதேச சுயாட்சியை, ஏற்படுத்தும் விடயத்தில் அந்த ஒப்பந்தம் வரவேற்கத்தக்க அம்சங்களைக் கொண்டிருக்கவில்லை.

அத்துடன் வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்துத் தரப்பு அரசியல் சக்திகளையும் திருப்திப்படுத்தக்கூடியவாறு அந்த ஒப்பந்தம் காணப்பட்டிருக்கவில்லை.

உள்ளூர் பாதுகாப்பு, நீதி, நிர்வாகம் போன்ற முக்கிய விடயங்களில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் தெளிவான வரையறைகளைக் கொண்டிருக்கவில்லை.

இலங்கையில் தமது பிரதேச சுயாட்சி, மற்றும் தமது அடிப்படை உரிமைகளை வலியுறுத்திப் போரிட்டுவரும் வடக்கு-கிழக்கு மக்களின் அபிலாஷைகளை பூரணமாக நிறைவேற்றாது, இலங்கை-இந்திய அரசுகளின் நலன்களை முதன்மைப்படுத்தியதாகவே அவ் ஒப்பந்தம் விளங்கியிருந்தது.

வடக்கு-கிழக்கு இணைப்பு, மற்றும் வடக்கு- கிழக்குக்கான புறம்பான நிர்வாக அமைப்பு போன்ற விடயங்கள் கூட அந்த ஒப்பந்தத்தில் உறுதியற்றவையாகவே விளங்கியிருந்தன.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்க்கும்வகையில் கொண்டுவரப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் முற்றுமுழுதான ஒரு தீர்வாக அமையவில்லை என்பதே கண்கூடு.

இந்நிலையில் இலங்கை-இந்திய ஒப்பந்தமும் அதனோடு அறிமுகமான மாகாண சபை நிர்வாக முறையும் வடக்கு-கிழக்கில் தோல்வியையே தழுவியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தற்போது ஒரு சமஷ்டி அமைப்பிலான தீர்வுத் திட்டத்தை வரவேற்றுள்ளனர்.

கடந்தகால ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காண்பதாகக் கூறி பல மகாநாடுகள், பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

இறுதியாக பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கை என்று தெரிவித்து நீண்டகாலம் பாராளுமன்றில் உள்ள பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளிடமும் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்த தீர்வுத் திட்டத்தை முன்னைய ஆட்சியாளர்கள் கோரியிருந்தனர்.

இக்கோரிக்கையயடுத்து தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த தீர்வு யோசனைகளை அன்றைய ஆட்சியாளர்கள் அலட்சியம் செய்திருந்தனர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அன்று தலைமை தாங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் இந்தியாவுக்கான இலங்கையின் இன்றைய உயர் ஸ்தானிகருமான திரு.மங்கள முனசிங்க கூட தகுந்த வகையில் தமிழ்க் கட்சிகள் தெரிவித்த தீர்வுத் திட்டத்தை பரிசீலிக்காததுடன், பாராளுமன்றத் தெரிவுக்குழு சார்பாகவோ அல்லது தாம் பிரதிநிதித்துவப்படுத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாகவோ வடக்கு-கிழக்குப் பிரச்னை சம்பந்தமாக ஒரு நல்ல மாற்றுத் திட்டத்தை வழங்கத் தவறியிருந்தார்.

இந்நிலையில் அரசாங்கம் தன்னிடமுள்ள தீர்வுத் திட்டத்தை தெளிவாக அழுத்தம் திருத்தமாக முன்வைக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா தமது பாராளுமன்ற சிம்மாசன உரையின்போது பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தீர்வுத்திட்டம் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார்.

ஆனால் இத் தீர்வுத்திட்டம் காலங்கடந்ததொன்றென தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வடக்கே அறிவித்துள்ளனர்.

கூடவே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை வெளியிடுகையில் முற்றுமுழுதான சுயாட்சி முறையைக் கொண்ட சமஷ்டி அமைப்பையே தாம் வரவேற்பதாக தெரிவித்துள்ளனர்.

எனவே அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசியல் ரீதியிலான பேச்சுக்கள் என்று அமரும்போது முதலில் தத்தமது தரப்பிலுள்ள தீர்வுத் திட்டங்களை முன்வைத்து அத்திட்டங்களிலுள்ள குறை, நிறைகளை ஆராய்ந்து ஒரு தீர்வை நோக்கிச் செல்வதே தகுந்த அணுகுமுறையாக இருக்க முடியும்.

இதைவிடுத்து இரு சாராருமே தத்தமது வரையறைகளை தெளிவாக வகுத்துக்கொள்ளாது பேச்சுக்கள் என்று இறங்கும்போது, அப்பேச்சுக்கள் மீண்டும் ஒரு 'பிரளயத்தை' ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்களே பலமாக இருப்பதை உணரமுடிகின்றது.

# கிரைம் டயறி

—ரசிகன்

# உலகை உலுக்கிய கொலை — உண்மைச் சம்பவம்



## கார்குண்டு வெடித்தது!

## காணாமல் போனார் அரசியல்வாதி

**தொ**லைக்காட்சித் திரையில் இயன்கோவின் முகம் தெரிந்தது.

இயன்கோவ் யார்? என்று உங்களுக்குள் கேள்வி வருமல்லவா?

பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர். 1990வரை பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தட்சரின் வலதுகரம் என்று நம்பப்பட்டவர்.

1974ம் ஆண்டுமுதல் 1990வரை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இயன்கோவ் 1979ம் ஆண்டு தொடக்கம் 1983வரை தாட்சரின் செயலராக இருந்தவர்.

தாட்சர் சொல்லும் கருத்தெல்லாம் இயன்கோவின் மூளையில் இருந்து உதித்தவை என்றுதான் அனைவரும் நம்பினார்கள்.

இப்போது உங்களுக்கு இயன்கோவின் செல்வாக்கு புரிந்திருக்கும். அவர் ஒரு வி.ஐ.பி என்று தெரிந்திருக்கும்.

தொலைக்காட்சியில் இயன்கோவ் பேச ஆரம்பித்துவிட்டார்.

சற்று உணர்ச்சிவசப்பட்டது போலவே பேசுகிறார்.

**"அயர்லாந்து தீவிரவாதிகளின் செயல்கள் அத்துமீறிப் போய்க்கொண்டிருக்கின்றன. இன்று அவர்கள் மூன்று பேரை சுட்டுக்கொன்றுள்ளார்கள். அந்த மூன்று பேரின் மனைவியர்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குழந்தைகள் அனாதைகளாக்கப் பட்டுள்ளனர்.**

**என்ன நோக்கத்திற்காக தீவிரவாதிகள் இப்படியெல்லாம் செயல்படுகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களது தந்திரமும் நோக்கமும் ஒரு போதும் வெற்றிபெறப் போவதில்லை.**

**இவர்களது தந்திர நடவடிக்கைகளை நாங்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம்"**

தொலைக்காட்சியில் இயன்கோவின் பேச்சைக் கேட்ட மக்கள் அரசாங்கம் ஏதோ செய்யத் தீர்மானித்துவிட்டது என்று நினைத்தார்கள்.

இயன்கோவின் பேச்சை அயர்லாந்து தீவிரவாதிகளும் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் முகங்களில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

இந்த இடத்தில் அயர்லாந்து தீவிரவாதிகள் பற்றி ஒரு மிகச் சுருக்கமான அறிமுகம் அவசியம்.

பிரிட்டிஷ் நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்து விடுதலையாகத் துடிக்கிறது அதன் அருகில் இருக்கும் அயர்லாந்து.

நீண்டகாலமாக அயர்லாந்து மக்கள் போராடுகிறார்கள். அகிம்சை வழியில் நம்பிக்கையிழந்து ஆயுதமேந்திப் போராடுகிறார்கள்.

"அயர்லாந்து குடியரசு இராணுவம்" (ஐ.ஆர்.ஏ) என்ற பெயரில் ஆயுதமேந்தியிருக்கும் போராளிகளால் பிரிட்டனில் அடிக்கடி குண்டுகள் வெடிக்கவைக்கப் படுவதுண்டு.

குண்டு வெடிப்புக்கள், கச்சிதமாக திட்டமிடப்பட்ட கொலைகள் என்பவற்றில் ஐ.ஆர்.ஏ போராளிகள் கைதேர்ந்தவர்கள்.

இயன்கோவின் பேச்சு ஐ.ஆர்.ஏ போராளிகளுக்கு சவால் விடுவதாக இருந்தது.

**"இயன்கோவ் இனி வாழக்கூடாது....... அயர்லாந்தின் விடுதலைக்கு இயன்கோவின் உயிர் தேவைப்படுகிறது."**

ஐ.ஆர்.ஏ தலைவர் சூடான வார்த்தைகளை உதடுகளால் சுட்டார்.

பேச்சோடு நின்றுவிடவில்லை. திட்டம் தீட்டப்பட்டது. இயன்கோவ் கண்காணிக்கப் பட்டார். கவனமாக அவர் நடமாட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

□□

"சேர் உங்கள் பாதுகாப்பை பலப்படுத்த நினைத்திருக்கிறோம். தாங்கள் ஒத்துழைக்க வேண்டும்"

இயன்கோவின் பாதுகாப்பு அதிகாரி பவ்வியமாகத் தெரிவித்தார்.

"என்ன அவசரம் வந்தது இப்போது?"

இயன்கோவ் அலட்சியமாகக் கேட்டார்.

"தீவிரவாதிகளின் குறியில் நீங்கள் இருப்பதாக நம்பகமான தகவல்"

"எனக்கு எத்தனை வயது?"

"53"

"53 வயதான என்னை கொல்வது தீவிரவாதிகளுக்கு சுவாரசியமாக இருக்காது."

சிரித்தபடி சுருட்டு ஒன்றை பற்ற வைத்துக்கொண்டார் இயன்கோவ்.

பாதுகாப்பு அதிகாரி தலையைச் சொறிந்தார்.

"எதற்கும் தாங்கள் எமது பாதுகாப்போடு நடமாடுவது நல்லது."

"நன்றி உங்கள் ஆலோசனைக்கு! ஆனால் நான் சாகப் பயந்தவனல்ல. தீவிரவாதிகளுக்கு பயந்து வீட்டுக்குள் தூங்கிக்கொண்டிருப்பவனுமல்ல."

பாதுகாப்பு அதிகாரி அதற்குமேல் வற்புறுத்தவில்லை.

□□

1990 ஜுலை 31ம் திகதி. பனிப்புகார் இன்னும் முற்றாக விலகாத காலை 8.30 மணி.

இயன்கோவ் வெளியே புறப்பட ஆயத்தமானார்.

இன்னும் சில நொடிகளில் சாகப் போகும் இயன்கோவ் தனது உதவியாளர்களிடம் ஏதோ ஜோக் சொல்லி அவர்களைச் சிரிக்கவைத்துவிட்டு தனது காரை நோக்கி வந்தார்.

இன்னும் மிகச் சில நொடிகளே வாழப்போகும் இயன்கோவ் தனது கோட் சரியாக இருக்கிறதா என்று தன்னை ஒருமுறை பார்த்தபடி காரை சமீபித்தார்.

சாவு கையருகே வந்துவிட்டதை அறியாத இயன்கோவ் காரில் ஏறுவதற்கு முன்னர் வீட்டில் உள்ளவர்களைப் பார்த்து கையசைத்தார்.

மரணத்தை தொட்டு அழைக்கிறேன் என்று தெரியாமல் காரின் கதவில் கைப்பிடியை தொட்டுத் திருப்பினார் இயன்கோவ்.

அடுத்த நொடியே-

**ட...மா...ல்!**

ஒரே புகை மூட்டம். இயன்கோவின் மனைவி, மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் உதவியாளர்கள் பதறியடித்து ஓடி வந்தனர்.

கார் எரிந்துகொண்டிருந்தது.

"இயன்கோவ்..."

என்று அலறியபடி தனது கணவரை தேடினார் திருமதி இயன்கோவ்.

அதோ... அது.... அது... இயன்...கோ...வ்...

கை...கால்கள் எதுவுமில்லாமல் உடல் முழுக்க இரத்தமாக முனகிக் கொண்டுகிடந்தார் இயன்கோவ்.

"ஐயோ...!"

அருகே ஓடிவந்து குனிந்த மனைவியின் முகத்தை ஒருமுறை பார்த்தார் இயன்கோவ். மறு நொடியே விழிகள் நிலைகுத்தி நிற்க,

இயன்கோவ் திரும்பிவராத பயணத்தை ஆரம்பித்துவிட்டார்.

□□

இயன்கோவ் கொலை விசாரணை ஆரம்பித்தது.

பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிரட் தாட்சர் கண்ணீர்விட்டார்.

காரின் கதவை திறக்கும்போது அந்த அழுத்தத்தில் வெடிக்கத்தக்க வகையில் சாரதியின் ஆசனத்தின் கீழே குண்டு வைக்கப்பட்டிருந்தது.

வீட்டு வேலைக்காரர்கள்போல் புகுந்து குண்டை பொருத்திவிட்டு சென்றுவிட்டார்கள் ஐ.ஆர்.ஏ. போராளிகள்.

இயன்கோவ் கொலைக்கு ஐ.ஆர்.ஏ உரிமை கோரியது.

உரிமை கோரிய அறிக்கையில் ஐ.ஆர்.ஏ. ஒரு எச்சரிக்கையையும் விடுத்திருந்தது.

"எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் போது அதனை சரியாகப் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதற்கு தயங்கமாட்டோம். இங்கிலாந்துக்குள் எங்கள் அதிரடிகள் தொடரும்."

உலகில் நடந்த மிக முக்கிய அரசியல் படுகொலைகளில் ஒன்றாகியது இயன்கோவ் கொலை.

கொலையாளி என்று எவருமே கைதுசெய்யப்படவில்லை.

# மூட்டுவலி இருக்கிறதா?

## என்ன செய்யலாம் நீங்கள்




**ப**ல் வேறு காரணங்களின் நிமித்தம் உங்களின் உடலில் உள்ள மூட்டுக்கள் மற்றும் எலும்புப் பொருத்துக்களில் வலிகள் ஏற்படக்கூடும்.கிருமித் தாக்கங்களை தவிர்த்து பொருத்து விலகல், பொருத்துக்களில் சவ்வுகள் விலகுதல் அல்லது பாதிப்படைதல் அல்லது சேதமுறுதல், அல்லது ஆத்தரைஸ்ட் எனப்படும் மூட்டு வீக்கம் போன்றவைகளாலும் பொருத்துக்களில் வலி ஏற்பட்டு வருவது வழக்கமாகும்.

எனவே இவ்விதம் ஏற்படும் வலிகளுக்கான தாக்கத்தைப் பற்றி தெரிந்து கொள்ளும் பொருட்டு கீழே சில உத்தேச குறிப்புக்கள் வழங்கப்பெறுகின்றன.

1. காலை படுக்கையை விட்டெழுந்தவுடன் கை கால் மற்றும் பொருத்துக்களில் ஏற்படும் வலி வேலைகளில் ஈடுபடும் பொழுது அல்லது உடற்பயிற்சி செய்த பின்பு குறைந்து காணப்படுமானால் அவ் வலி குறித்து நீங்கள் அக்கறைப் படத் தேவையில்லை.
2. மேலே கூறப்பட்ட பணிகளில் ஈடுபட்டும் தொடர்ந்தும் அந்த வேதனை ஒரு மணித்தியாலம் வரை நீடித்து காணப் படுமானால் அவை அதற்கு முந்திய தினத்தில் நீங்கள் ஈடுபட்டிருந்த அதிக உடல் உழைப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். எனவே அவற்றை போக்குவதற்கு நீங்கள் சில வலி நிவாரணிகளைப் பாவிக்க முயற்சியுங்கள்.
3. இதே வலி 10 தினங்களுக்கதிகமாக நீடித்துக் காணப்படும் பட்சத்தில் பொருத்துக்களில் வீக்கம் ஏற்பட்டுள்ளது என்பதே அதன் பொருளாகும். இவ்வாறான வீக்கம் பல காரணிகளாலும்ஏற்படக்கூடும்என்பதால் வைத்திய ஆலோசனை பெறுவது முக்கியமாகும்.
4. இவ் வலிகள் மேலும் அதிகரித்து குனிந்து நிமிரக்கூட சிரமம் ஏற்படும் பட்சத்தில் பொருத்துப் பகுதியின் விரிவினால் இறுக்கம் ஏற்பட்டிருக்கக் கூடும். இவ்வாறான நிலை தோன்றியும் சிகிச்சை மேற்கொள்ளாது செயற்படும் பட்சத்தில் மூட்டுக்களில் அடங்கப் பெற்றுள்ள சவ்வுகளில் சிதைவேற்படக் கூடும். இந்நிலை ஏற்படும் பட்சத்தில் சத்திரசிகிச்சை மாத்திரமே சாத்தியமாக நேரிடலாம்.

# காய்ச்சலா?

## கண்டுபிடிப்பது எப்படி?



**கா**ய்ச்சலை கணித்தறியும் வெப்பமானியின் உதவியுடன் வீடுகளிலிருந்து கொண்டே நமது உடல் காய்ச்சலை நாமே அறிந்துகொள்ள முடியும். என்றாலும் காய்ச்சலை கணிக்கும் வண்ணம் இவ் வெப்பமானியை நாக்கின் கீழ்ப் பகுதியில் எவ்வளவு நேரம் வைத்திருக்கவேண்டும் என்ற விடயம் குறித்து இப்போது சிறு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ் வெப்பமானிகளை உற்பத்தி செய்துள்ள நிறுவனத்தின் குறிப்பில் இவற்றை 30 விநாடிகள் நாக்கிற்கு கீழ்ப் பகுதியில் வைத்திருப்பதன்மூலம் உடல் வெப்பத்தை தெரிந்துகொள்ள முடியுமென தெரிவித்துள்ளது.

எனினும் டாக்டர் எனப்படும் மருத்துவ சஞ்சிகை வெளியிட்டுள்ள கருத்துப்படி இவ்வெப்பமானியை நாக்கிற்குக் கீழ் பகுதியில் வைப்பதனால் 02 நிமிடமும் கமக்கட்டிற்கிடையில் வைத்துப் பார்ப்பதானால் 05 நிமிட நேரமும் அவசியமெனத் தெரிவித்துள்ளது.

அச் சஞ்சிகை மேலும் கருத்துத் தெரிவிக்கையில் குறுகிய நேரம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் நிமித்தமே காய்ச்சலின் அளவுகள் நிமிடத்திற்கு நிமிடம் வேறுபடுவதற்கு காரணமாகி வருவதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

# மாத்திரைகள் உட்கொள்ள உரிய முறை என்ன?

**மா**த்திரைகளை உட்கொள்வதற்கு ஒரு சிலர் தேனீர், கோப்பி போன்றவைகளை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் சிலர் விட்டமின் மாத்திரைகளை உட்கொள்வதற்கு பால், பழரசம் போன்றவற்றைக்கூட பயன்படுத்திவருவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

பால், பழரசம் போன்ற பானங்களுடன் விட்டமின் மாத்திரைகளை உட்கொண்டு வருவோர் சிலர் விட்டமின் மாத்திரைகளுடன் சேர்த்து அருந்தும் பால், பழரசங்களினால் தமது உடல் மேலும் வலுவூட்டம் அடைந்துவருவதாக கருதி வருகின்றனர்.

ஆனால் மருத்துவ ஆராய்ச்சியினர் இதற்கு எதிர் மாறான கருத்தொன்றை சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். பால் பழரசம் போன்றவை மனித உடலுக்கு வலுவூட்டமளிக்கவல்ல பானங்கள் என்பதை மறுப்பதற்கில்லைதான்! எனினும் நிச்சயிக்கப்பட்டிருக்கும் விட்டமின் மாத்திரைகளுடன் பால், பழரசத்தை சேர்த்து அருந்துவதன் மூலம் அம் மாத்திரையின் சாரத்தை உடல் உறிஞ்சப் பெறும் ஆற்றலை முடக்கமடையச் செய்கிறது.

குறிப்பாக (Iron)இரும்புச் சக்தி மாத்திரைகள், (tetracyclin)டெட்ராசைக்கிளின் போன்ற நுண் கிருமிகொல்லி மாத்திரைகளை மேற்கூறிய பானங்களுடன் சேர்த்து அருந்துவதன் மூலம் எந்தப் பலனுமே கிட்டப் பெறாதிருந்து வருதல் இக்கருத்திற்கு சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ள முடியும். எனவே எவ்வாறான மாத்திரைகளாக இருக்கப் பெற்றாலும் அவற்றின் பூரண பயனைப் பெற வேண்டுமானால் அவற்றை உட்கொள்வதற்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

# அணிவது வழக்காட

## அவிழ்ப்பது மாடலிங்குக்காக

**அ**ஞ்சலி கபூர். 24 வயது இளம் பெண்.

இந்தியத் தலைநகரான புதுடில்லியில் சட்டத் தரணியாக கறுப்புக் கோட் போட்டு பவனிவருபவர்.

திடீரென்று ஒருநாள் சக சட்டத்தரணிகளை மட்டுமல்ல 'பென்டாசி' என்னும் பத்திரிகையை பார்த்த அனைவரையுமே ஒரு கலக்கு கலக்கிவிட்டார்.

விசயம் வேறொன்றுமில்லை, அந்தப் பத்திரிகையின் அட்டைப் படத்தில் இரண்டு சிறு துணிகளுடன் மட்டும் உடலைக் காட்டி போஸ் கொடுத்தபடி இருந்தார் அஞ்சலி கபூர்.

சட்டத்தரணிகள் கொதித்தார்கள். சட்டத்தரணி தொழிலையே அவமானப் படுத்திவிட்டார் என்றார்கள்.

அவரது சட்டத்தரணி பட்டத்தை இரத்துச் செய்யவேண்டும் என்று குரல்கள் எழுந்தன.

அஞ்சலி கபூர் அலட்டிக்கொள்ளாமல் பதிலளித்தார்.

"என் உடலை நான் எவ்வாறு வேண்டுமானாலும் உபயோகிப்பேன். இது என் சொந்த விவகாரம். மாடலிங் செய்வதில் என்ன தவறு?"

என்று பதிலடி கொடுத்துவிட்டு சட்டத்தரணியாக கறுப்புக் கோட்டுடன் நீதிமன்றத்திற்கு வந்து போகும் அஞ்சலி கபூரை எல்லோரும் வித்தியாசமாகப் பார்க்கிறார்கள்.

கோட் போடுவது வழக்காட. கோட்டை அவிழ்ப்பது மாடலிங் தொழிலுக்காக.

பெண்களின் சுதந்திரத்திற்காக போராடவே இந்த முயற்சியே தவிர பணம் சம்பாதிப்பது நோக்கமல்ல என்கிறார் அஞ்சலி கபூர்.




# நீ...ள.....மோ..... நீ......ள....ம்!

**மி**க சமீபத்திய கின்னஸ் புத்தகத் தகவலின்படி உலகில் மிக நீ....ள.....மா......ன.....கார் இதுதானாம்.

காரின் மீது அமர்ந்திருக்கும் காரிகை நீச்சலடித்துவிட்டு வந்து போஸ் கொடுக்கிறார். நீச்சலடித்தது எங்கே தெரியுமோ? காரின் உள்ளே இருக்கும் நீச்சல் குளத்திலேதான்! காரின் நீளம் 26 மீற்றர்! இந்தக் காருக்கு கண்காட்சியில் மகா மரியாதை! சுற்றுலாக்களுக்கு செல்லும் குடும்பத்தினர் விடுதிகளில் தங்கும் அவசியமே இல்லை. காருக்குள் சகல வசதிகளும் இருக்கிறது. ஐந்து நட்சத்திர விடுதிபோல இது ஐந்து நட்சத்திர கார்.

தகவல் பெட்டி






## உலக மகா குள்ளர்

கின்னஸ் உலக நிலவரப்படி உலகில் மிகக் குள்ளமனிதர் இவர்தான் என்று கின்னஸ் புத்தகம் அடித்துச்சொல்கிறது.

இவரது பெயர் அன்ரனியோ ஃபெரைரோரா. உயரம் 75 சென்றிமீற்றர் மட்டுமே.

## எடையால் சாதனை படைக்கும் இரட்டையர்

படத்தில் உள்ள இருவரும் இரட்டையர்கள். முகத் தோற்றம் மட்டுமல்ல பொலிவான உடல் தோற்றமும் இருவருக்கும் ஒரே ரகம். அதுமட்டுமல்ல எடையில் கூட எந்த மாற்றமும் இல்லை. ஒவ்வொருத்தரும் சரியாக 698 கிலோ எடையில் இருக்கிறார்கள். இதுபோல் உலகில் வேறு எங்கும் இல்லை என்பது உறுதியானதால் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் புகைப்படத்தோடு இடம்பிடித்துவிட்டார்கள். ஒருவரது பெயர் பென் புமோக்ஸ். மற்றவர் மைக்கயர்.





## ஓ.... பட்டர் பிளை உன் சிறகென்ன நீளம்? உனக்கென்ன ஆச்சு?

பிரான்சிலுள்ள கமீமா மைக் வழக்கம்போல தனது தோட்டத்திற்கு சென்றார். அவருக்காக ஒரு அதிசயம் காத்திருந்தது. தோட்டத்தில் ஒரு பெரிய வண்ணத்திப் பூச்சி. கமீமா மைக் தன் கண்களையே முதலில் நம்பவில்லை. ஓடிச்சென்று அயலவர்களைக் கூட்டி வந்தார். வந்தனர்-கண்டனர். ஊருக்குள் செய்தி பரவ கூட்டம் திரண்டுவிட்டது. பத்திரிகையாளர்கள் மொய்த்தனர். இத்தனைக்கும் காரணமான அந்த வண்ணத்திப் பூச்சியின் இரண்டு இறக்கைகளுக்கும் இடையிலான தூரம் 180 சென்றி மீற்றர். எடை 3 கிலோ. உலகில் மிகப்பெரிய வண்ணத்திப் பூச்சி இதுதானாம்.

# பிரேமானந்தா பரமானந்தாவாகிறார்

ஆர்.கே.செல்வமணி ராஜமுத்திரை படத்தில் போலிச்சாமி பிரேமானந்தா கதையை வைத்து சில காட்சிகளை எடுக்க முடி பண்ணினார். போலிச்சாமியாராக நடிக்க [illegible] கொண்ட மன்சூரலிகான் என்ன நினைத்[illegible] முடியாது என்றுவிட்டார். இதேவேளை [illegible] 'சாம்ராட்' படத்தில் பிரேமா[illegible] நகைச்சுவை காட்சிகளாக [illegible] ஜெயமணி என்னும் [illegible] போலவே தலை [illegible] தயார் செய்து [illegible] ஏற்கனவே முரளி [illegible] பற்றி கூறி[illegible] அந்த படமு[illegible] [illegible]



## உளவாளிகளை சாய்க்கும் முரளி

முரளி நடித்த 'அதர்மம்' நன்றாக ஓடிய படம். அந்தப் படத்தை இயக்கிய ரமேஷ் கிருஷ்ணன் இயக்கத்தில் முரளி மீண்டும் நடிக்கும் படம் 'உயிர் மூச்சு'. வீர தீரமிக்க மீனவ வாலிபனாக முரளி நடிக்கிறார். வெளிநாட்டு உளவாளிகளை எதிர்த்து மீனவ இளைஞன் போராடுவதுதான் கதை. அடிதடி காட்சிகள் நிறைய இருக்கும். 200 கட்டுமரங்கள், 50 இயந்திரப் படகுகள் மற்றும் சண்டைக் காட்சிகளுக்கு 50 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப் படுகின்றன. இதில் முரளிக்கு ஜோடியாக சங்கவி நடிக்கிறார். இசை-இளையராஜா. ஒளிப்பதிவு-சுதாகர்.

## மினிசினி

- சுகன்யா கதாநாயகியாக நடித்து இன்னும் வெளிவராத நிலையில் இருக்கும் 'மகாபிரபு' படத்திற்குப் பின்னர் 'ஞானப் பழம்' படத்தில் பாக்கியராஜிற்கு ஜோடியாக நடிக்கவுள்ளார்.
- கார்த்திக் நடிக்க, பிரதாப் போத்தன் இயக்கி வரும் 'லக்கிமேன்' படத்தைத் தயாரித்து வருகிறார் பிரசாத். இவர் 'லக்கிமேன்' வெளிவரும் தினத்தன்று கார்த்திக் நடிக்க, பிரதாப் போத்தன் இயக்கும் 'மேஜிக்மேன்' என்றொரு புதிய படத்தைத் தயாரிக்கவுள்ளார்.
- மலையாளத்தில் ஜோஷி இயக்கி வெற்றி பெற்ற 'சைன்யம்' படத்தில் நடித்துள்ள மோகினி, ஜோஷி இயக்கும் புதிய படமொன்றிலும் நடிக்கவிருக்கிறார்.
- 'சரிகமபதநி' படத்திற்குப் பின்னர் பார்த்திபன் 'கருப்பண்ணசாமி' படத்தை இயக்கி நடிக்கிறார். அத்துடன் ஆர்.வி.உதயகுமார் இயக்கத்தில் 'மாசி பங்குனி' என்ற படத்திலும் கதாநாயகனாக நடிக்கிறார்.
- 'சிக்கு புக்கு ரயிலே...', 'டேக் இட் ஈஸி ஊர்வசி....' ஆகிய பாடல்களைப் பாடியுள்ள சுரேஷ் பீட்டர்ஸ், பி.வாசு இயக்கும் 'கூலி' படத்தின் மூலம் இசையமைப்பாளராகிறார்.
- சத்யராஜ் இயக்கி நடித்து வரும் 'வில்லாதி வில்லன்' படத்தில் கதாநாயகியாக நடிக்கும் நக்மாவிற்குத் தாயாக நடித்து வருகிறார் ராதிகா.
- தேசிய விருது பெற்ற 'ஒரு வடக்கன் வீர கதா' என்ற மலையாளப் படத்தை வழங்கிய மம்மூட்டி, கதாசிரியர் எம்.டி.வாசுதேவன் நாயர், இயக்குநர் ஹரிஹரன் கூட்டணி மீண்டும் புதிய படமொன்றில் இணைகின்றனர்.
- 'ஜெய்ஹிந்த்' படத்தில் போலீஸ் வேடத்தில் நடித்துள்ள ரஞ்சிதா, எஸ்.பி.முத்துராமன் இயக்கும் 'தொட்டில் குழந்தை' என்ற புதிய படத்தில் மீண்டும் காக்கி சட்டை போட்டு போலீஸ் வேடத்தில் நடித்துவருகிறார்.
- தமிழ்-தெலுங்கு-இந்தியில் ஷங்கர் இயக்கத்தில் மும்மொழிப் படமொன்றை தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார் தயாரிப்பாளர் கே.டி. குஞ்சுமோன். இப்போது அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டு பிரதாப் போத்தன் இயக்கும் படமொன்றைத் தயாரிக்கிறார்.
- ஐம்பதுக்கும் மேற்பட்ட படங்களில் நடனமாடியுள்ள ராணி, 'நாட்டாமை' படத்தில் முதன் முறையாக குணச்சித்திர வேடத்துடன் நடனமும் ஆடியிருந்தார். 'நாட்டாமை' வெற்றியால் தற்போது இவர் கைவசம் ஏழு படங்கள் உள்ளன.



## மழையிலே ஆட்டம்

மாதுரி டிக்ஷித் நடித்துள்ள படம் 'ராஜகுமார்'. கதாநாயகன் அனில்கபூர். எடுக்கப்பட்ட காட்சிகளை போட்டுப் பார்த்த மாதுரி மகிழ்ச்சியில் திளைத்தாராம். அத்தனைக்கும் படம் நன்றாக வந்திருக்கிறதாம். அதனால் மழையில் 'டான்ஸ் ஆடலாம்' என்று மாதுரி டிக்ஷித்.



## நாடோடி மன்னன் மீண்டும்!

[illegible]



## ஜோடியாக புது நடிகை

விஜயகாந்த் நடிக்கும் 'திருமூர்த்தி' படத்தில் அவரது ஜோடியாக புதுமுகம் ரவாலி நடிக்கிறார். பவித்ரன் திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் திருமூர்த்திக்கு இசை-தேவா. பாடல்கள்-வாலி.


## ஆயத்தமாகிவிட்டது அவதாரம்!

நாசர் இயக்கி நடித்துள்ள அவதாரம் படம் பெப்ரவரி மாத வெளியீடு. நாசர்-ரேவதி ஜோடி நடித்துள்ள 'அவதாரம்' படத்தில் டெல்லி கணேஷ், ஸ்ரீவித்யா, காக்கா ராதாகிருஷ்ணன், சில்வி ஜெயந்த், ஜூனியர் பாலையா ஆகியோர் நடித்துள்ளனர். புது வில்லன் பாலாசிங் அறிமுகமாகிறார். கிராமத்து தெருக்கூத்து கலைஞராக நாசரும், பாய் பின்னும் தொழில் செய்பவராக ரேவதியும் நடித்துள்ளனர். இசை-இளையராஜா. பாடல்கள்-வாலி, முத்துலிங்கம்.

## பாக்யராஜ்-ரஜினிகாந்த் இணைந்து ஒரு படம்?

'நான் சிவப்பு மனிதன்' படத்தில் ரஜனிகாந்த், பாக்யராஜ் இணைந்து நடித்திருந்தனர். 9 வருடங்களுக்கு முற்பட்ட படம் அது. ரஜினியை வைத்து ஒரு படம் இயக்கி தானும் அதில் நடிக்க விரும்புகிறாராம் பாக்யராஜ். இதற்காக ரஜினியின் சம்மதம் கேட்டு அணுகியிருக்கிறார் பாக்யராஜ்.

# சமாதானக் கோலம்




இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் 1 தொடக்கம் 11 வரைக்கும் படத்தில் உள்ளது போல் நேராகப் புள்ளியிடுதல் வேண்டும். பின்னர் குறித்துக் காட்டியது போல் ஒவ்வொரு புள்ளியையும் இணைத்துக் கொள்ளவும்.

புள்ளியில்லாமலேயே சிலுவை, பிறை, நட்சத்திரம், மேல் முடி போன்றவற்றை நீங்களாகவே வரைந்து கொள்ளுங்கள்.

உருவாக்கம்:
செல்வி.க.சந்திரகலா
23/13, பன்சல வீதி, இராகலை.

# கடினமாய் உழைக்கும் பெண்களுக்கு!

உலகெங்கும் உஷ்ணம் அதிகரித்து வருகிறது. தொழிற்சாலைகள் நிரம்பிய நகரங்களிலோ நிலைமை இன்னும் மோசம். வெய்யில் காலம், அதிக வெய்யில் காலம், கடும் வெய்யில் காலம் என்றுதான் பருவ நிலைகளை பாகுபடுத்த முடியும் போலிருக்கிறது. விளைவு-எந்நேரமும் வியர்வைக் கசகசப்பு.



இதில் துவைப்பது, குழந்தைகளைப் பள்ளியில் இருந்து அழைத்து வருவது போன்ற வியர்வையை வரவழைக்கும் வேலைகளைச் செய்யும் அம்மணிகள், சில விஷயங்களைத் தெரிந்து கொண்டே ஆக வேண்டும். வியர்வை வெளியேறுவது பொதுவாக நல்லதுதான் என்றாலும் வேறு சில வழிகளில் அது சருமத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தி விடக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. உதாரணத்துக்கு 'மேக்-அப்'.

காலையில் குளித்து விட்டு, எட்டு மணிக்கு அலுவலகம் புறப்படும் ஒருவருக்கு முழு மேக்கப்பில் டாட்டா சொல்லி அனுப்பி விட்டு, பிறகு வியர்வை சிந்த ஒரு வண்டி துணி எடுத்துப் போட்டுத் துவைக்கிற பெண்கள் உண்டு. இங்கேதான் ஆபத்து இருக்கிறது.

முகத்துக்குப் போட்ட பவுடர் வியர்வையில் கரைந்து, வியர்வைத் துளைகளை அடைக்கிறது. இதனால் முகத்தில் கரும் புள்ளிகளும், பருக்களும் கூடத் தோன்றலாம். வியர்வையோடு கலந்த மேக்-அப் கண்களில் படும்போது கண்ணுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

வியர்க்கும் நேரத்தில் தலைமுடி முகத்தில் படாமல் பார்த்துக் கொள்வதும் முகத்தில் மாசு-மறு தோன்றாமல் இருக்க உதவும்.

எனவே வியர்வை சிந்தும் காரியங்களில் ஈடுபடும் போது கூந்தலை கோடாலிக் கொண்டை போட்டுக் கொள்ளுங்கள். கூந்தலில் அந்த அளவுக்கு வசதி இல்லை என்றால், முடி முகத்தில் படாதபடி பின் போட்டு பின்னால் தள்ளி விடுங்கள். இதைச் செய்யும் போது மிகவும் இறுக்கி,



கேசத்தைச் சிரமப்படுத்தி விடாதீர்கள். அது தளர்வாகவே இருக்கட்டும். இல்லை என்றால் முடியின் முனை பிளவுபட்டு நாளடைவில் முடி உதிரவே துவங்கிவிடும்.

இதேபோல, சருமம் என்பது முகத்தில் மட்டும் இல்லை. உடல் முழுக்க போர்த்தியிருக்கிறது. அதிகமாய் வெளியேறும் வியர்வை அப்படியே தங்கி விடுவதால் அங்கேயும் பிரச்சினை உண்டு. இறுக்கமான உடைக்குள் வியர்க்கும்போது, வியர்வை சுரப்பிகள் அடைபடும் வாய்ப்பு இருக்கிறது. காற்று புகுந்து வெளிவரத் தோதான உடை அணிவதன் மூலம் தோல் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். வியர்வை வெளியேறும் நேரங்களில் பருத்தி ஆடைகளே உத்தமம்.

'வீட்டில்தானே இருக்கிறோம்' என்கிற நினைப்பில், நேற்றுப் போட்ட உடை, முந்தாநாள் கட்டிய சேலை என்று துவைக்கப்படாத ஆடைகளைப் பலரும் அணிவது உண்டு. இவற்றில் அந்தந்த தினத்தின் வியர்வையால் தோன்றிய பக்டீரியா நுண் கிருமிகள் தங்கியிருக்கும். மீண்டும் அவற்றில் புது வியர்வைபடியும்போது, அவை புத்துயிர் பெறுகின்றன. பலன் வியர்வை வாடை, சருமப் பாதிப்பு, பரு, மறு....

இந்த பக்டீரியாக்கள் உடலில் தங்காமல் இருப்பதற்கு, வியர்த்த பிறகு ஒரு குளியல் போட்டால் போதும். அதற்காக சீயாக்காய் போட்டு கரகரவென்று தேய்க்க வேண்டும் என்பதில்லை. சாதாரணமாக நீரூற்றிக் குளித்து விட்டு துவாலையால் மிருதுவாக ஒற்றி எடுங்கள் சருமம் மினுமினுக்கும்.

# மீதியானால் வீசாதீர்!

## சிக்கனமான சிறந்த யோசனை

இரண்டு பேரானாலும், இருபது பேரானாலும் சமைக்கும்போது மிஞ்சாமல் இருப்பதில்லை. மிஞ்சிப்போன சமையலை, சமையல் சாமான்களை என்ன செய்யலாம்?

நண்பர்கள் வருவார்கள் என்று கணவர் சொன்னதால் நிறைய அடைக்கு மாவு அரைத்து வைத்துவிட்டீர்கள். விருந்தாளிகள் வரமுடியவில்லை. மாவு கணிசமாக மிஞ்சிப்போய்விட்டது. என்ன செய்யலாம்?

மாவை, ப்ரிட்ஜ் இருந்தால் உடனே எடுத்துவைக்க வேண்டும். ப்ரிட்ஜ் இல்லையென்றால் அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும். போஞ்சி கால் கிலோ வாங்கி, பொடியாக நறுக்கி வேக வைத்து எடுத்து வைக்கவும். அடைமாவை குக்கரில் வேகவைத்து உதிர்த்து, இந்த போஞ்சியுடன் கலந்துவிடலாம்.

நிறைய காய், கூட்டு எல்லாம் மிஞ்சிப் போனால் அவற்றை ஒன்றாய்க் கலந்து கெட்டியாக புளி கரைத்து சிறிது மிளகாய்த் தூள், உப்பு, சேர்த்து ஒரு கொதி, கொதிக்க விடவும். பிரமாதமான எரித்த குழம்பாகிவிடும்.

பீட்ரூட் கறி, போஞ்சிக்கறி போன்ற கறிகள் மீதியாகி விட்டால் சுடச்சுட கட்லட் செய்துவிடலாம்.

காய்கறியுடன் அரைத்த கடலை மாவு, சிறிது மிளகாயத் தூள், உப்பு, பெருஞ் சீரகம், மசாலாத்தூள், கொத்தமல்லித்தழை போட்டு தண்ணீர் தெளித்து கெட்டியாகப் பிசைந்து ரஸ்க் பொடியில் பிரட்டி சிறிய வட்டங்களாக தோசைக் கல்லில் தட்டி, எண்ணெய் விட்டு வேக வைத்து எடுத்து சட்னியுடன் சாப்பிட் டுப் பாருங்களேன். மிச்சம் மீதி எதுவும் இருக்காது.

# ஆறிய கஞ்சியும் அழகு தரும்

குக்கரில் சமைக்கும் பழக்கம் இருந்தாலும் இன்னும் பலபேர் பானையில் அரிசி பொங்கி கஞ்சி வடித்துத்தான் சாப்பிடுகிறார்கள்.



கஞ்சியை அப்படியே ஓரமாக எங்காவது மூலையில் சாய்த்து வடித்துவிடுவார்கள். அரிசியில் உள்ள சத்துக்கள் எல்லாம் கஞ்சியோடு போய்விடுகிறது. வடித்த கஞ்சி ஒரு சத்தான பானம். இது உடம்புக்கும் நல்லது. வளமான அழகிற்கும் நல்லது. கஞ்சியை அப்படியே குடிக்க முடியாது. அதில் கொஞ்சம் பால், சீனி கலந்தால் குடிக்க ருசியாக இருக்கும்.

வறட்டு இருமல், சளி இருமல் எதுவாக இருந்தாலும் சூடாகக் கஞ்சி வடித்து அதில் பனங்கற்கண்டு போட்டுக் குடிக்கலாம். இனிப்பு வேண்டாமெனில் நெய்யில் சீரகம் வறுத்து அதைக் கஞ்சியில் கலந்து குடித்தால் இருமல் நிற்கும்.

பெண்களுக்கு வெள்ளைபடுவது உண்டு. இந்த வெள்ளைப் போக்கு இருந்தால் உடம்பு பலவீனமாகி இடுப்பு வலியும் இருக்கும். இதற்கு கஞ்சியை நன்றாக ஆறவைத்து, அரை டம்ளர் மோர்விட்டு கொஞ்சம் உப்பு போட்டு கலக்கி தினமும் குடித்து வந்தால் வெள்ளைபடுவது நின்றுவிடும்.

கஞ்சி நம்முடைய அழகிற்கு எப்படிப் பயன்படுகிறது என்பதைப் பார்ப்போம். வடித்த கஞ்சியை நன்றாக ஆறவைத்து அதில் கொஞ்சம் சீயாக்காய் தூளைப் போட்டு தலையில் தேய்த்து முழுகி வந்தால் தலைமுடி சுத்தமாக, பளபளப்பாக இருக்கும்.

ஒரு கரண்டி கஞ்சியை முகத்திலும், கைகளிலும் தேய்த்துக்கொண்டு, கொஞ்ச நேரத்தில் கழுவிவிட்டால் தோல் மிருதுவாக மினுமினுப்பாக மாறும்.

இவற்றைவிட கஞ்சியை பருத்திநூல் புடவைகளுக்குப் பயன்படுத்தினால் நூல் புடவைகள் உடம்போடு ஒட்டிக்கொள்ளாமல் அழகாக இருக்கும். இனிமேல் வீட்டில் கஞ்சி வடித்தால் ஞாபகமாக அதை ஒரு பாத்திரத்தில் எடுத்துவைத்துக் கொள்ளுங்கள்.

## பரிசுப் போட்டிக்குத் தயாரா?

கடந்த 25 வாரங்களாக லேடீஸ் ஸ்பெசல் பகுதியில் வெளியான பரிசுக் கூப்பன்களை பத்திரப்படுத்தி வைத்திருக்கிறீர்களா?

ஆம், என்றால் அந்த 25 கூப்பன்களையும் ஒன்றாய்ச் சேர்த்து இப்போது நீங்கள் அனுப்பிவைக்கலாம்.

கீழ்வரும் படிவத்தையும் பூர்த்திசெய்து கூப்பன்களோடு இணைத்து அனுப்பவேண்டும்.

**பரிசுக்கூப்பன் போட்டி**

பெயர்:- ..............................................

முகவரி:- ..............................................

..............................................

கையொப்பம்:- ..............................


அனுப்பவேண்டிய முகவரி—

பரிசுப்போட்டி
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772
கொழும்பு.

அனுப்பவேண்டிய கடைசித் திகதி- பெப்ரவரி 20-1995

## லேடீஸ் ஸ்பெசல்

## கடினமான போட்டி



பிரான்ஸ் நாட்டில் ஒரு வித்தியாசமான ஒப்பனைப் போட்டி. ஆதிவாசிப் பெண்கள் போல ஒப்பனையோடு கலந்து கொண்டு அசத்தும் பெண்களுக்குப் பரிசு. நவீன நாகரிக உடை என்றால் நளினமாய் வந்து வெளுத்துவாங்கும் பெண்கள் ஆதிவாசிப் பெண்களாக ஒப்பனை செய்துவர கஷ்டப் பட்டார்கள். ஒரேயொரு பெண் மட்டுமே அசத்திவிட்டாராம். 22 வயதான கல்லூரி மாணவியான அந்தப் பெண் தொப்புள், நாரி போன்ற இடங்களில் நகை அணிந்து வந்து நடுவர்களை அசத்தி பரிசைத் தட்டிச் சென்றுவிட்டாராம்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### முட்டை பச்சைப் பட்டாணிப் பொரியல்

**தேவையான பொருட்கள்:**

பச்சைப் பட்டாணி-250 கிராம்
பூண்டு- பெரியது-1
இஞ்சி-சிறுதுண்டு
பச்சைமிளகாய்- 3
மிளகாய்த்தூள்-2 தேக்கரண்டி
மஞ்சள் தூள்-1/2 தேக்கரண்டி
பெருஞ் சீரகம்-1/2 தேக்கரண்டி
உப்பு- அளவாக
முட்டை-5

**செய்முறை:**

பச்சைப் பட்டாணியைத் தண்ணீரில் கழுவி ஒரு பாத்திரத்தில் போட்டு, ஒரு டம்பளர் அளவு தண்ணீர்விட்டு, பெரிய வெள்ளைப்பூண்டை உடைத்து அதன் பற்களைத் தோல் உரித்து பொடியாக நறுக்கவும். பிறகு இஞ்சியையும், பச்சை மிளகாயையும் பொடியாக நறுக்கி, எல்லாவற்றையும் பட்டாணியில் போட்டு, மிளகாய்த் தூள், உப்பு, மஞ்சள்தூள் இவைகளையும் சேர்த்து மூடி, அடுப்பில் வைத்து வேகவிடவும். நன்றாக வெந்தபின் வாணலியை அடுப்பில் வைத்து நல்லெண்ணையை விட்டு பெருஞ் சீரகத்தை நைத்துப் போட்டு சிவந்தவுடன் வேக வைத்த பட்டா ணியை அதில் கொட்டிக் கிளற வேண்டும். கிளறிக்கொண்டே ஐந்து முட்டைகளை ஒவ்வொன்றாக உடைத்துப் போட வேண்டும். முட்டை சிவந்து வரும் சமயம் இறக்கி வைக்கவும். இது சாப்பிடுவதற்குச் சுவையாகவும், சத்துள்ள உணவாகவும் இருக்கும்.

## ஹி... ஹி..... ஹி.....

### எதிலும் தேன்


முத்தமிழ் காவலர்
கி.ஆ.பெ.விஸ்வநாதம் ஒரு சமயம்
பேசும்போது கீழ்கண்டவாறு
குறிப்பிட்டார்:
தமிழ் என்றாலே இனிமை என்றுதான்
பொருள். அதைப் பேசக்கேட்டால்
காதில் தேன் வந்து பாய்வதுபோல்
இருக்கும். பார்த்தேன்! சிரித்தேன்!
ரசித்தேன்! எடுத்தேன்! கொடுத்தேன்!
விடுத்தேன்! தடுத்தேன்!
நினைத்தேன்! அணைத்தேன்!
மகிழ்ந்தேன்! வந்தேன்! தந்தேன்
படித்தேன்! முடித்தேன்! எல்லாமே
தேன்தான்...எவ்வளவு இனிமை சொட்டும்
வார்த்தைகள் பாருங்கள் என்றார்.
இவ்வாறு கி.ஆ.பெ.விஸ்வநாதம்
கூறியதுதான் கவியரசு கண்ணதாசன்
எழுதிய, 'பார்த்தேன்,
சிரித்தேன்...பக்கம்வரத் துடித்தேன்..'
என்ற 'வீர அபிமன்யு' திரைப்படப்
பாடலுக்குத் தூண்டுகோலாய்
அமைந்தது.

### விகாரமான பாட்டு

ஒரு படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. பிரபல நடிகை ஒருவர் நடிக்கும் காட்சியை எடுத்துக்கொண்டிருந்தார்கள். படப்பிடிப்புக்கு அந்த நடிகையின் கணவரும் வந்திருந்தார். இடையில் கமெரா ஆங்கிள் (கோணம்) மாற்றும் வேலை நடந்துகொண்டிருந்தது. நடிகை ஒரு பக்கம் கதிரையில் அமர்ந்திருந்தார். இன்னொரு பக்கம் உள்ள கதிரைகளில் படத்தின் இயக்குநரும், அந்த நடிகையின் கணவனும் அமர்ந்திருந்தார்கள்.

நடிகையின் கணவனுக்கு ஏதோ ஜொலி மூட்! மெல்ல ஒரு பழைய பாட்டை வாயில் முனகினார். 'எனக்கொரு மகன் பிறப்பான்...' அடுத்த அடியை தன்னை அறியாமல் இயக்குநர் பாடினார். 'அவன் என்னைப் போலவே இருப்பான்'.

## வீட்டுக் குறிப்பு



பிள்ளைகள் விளையாடி விட்டு வரும்போது சட்டையெங்கும் சேறு, தார், பெயின்ட், துரு போன்று விதவிதமான கறைகளுடன் வந்து நிற்கிறார்களா? சேற்றுக் கறையைப் போக்க உருளைக்கிழங்கை நறுக்கி அந்த இடத்தில் தேய்த்துவிட்டு துணியை அலசுங்கள். துருக் கறையைப் போக்க எலுமிச்சம் சாற்றில் உப்புக் கலந்து கறைபட்ட இடத்தில் நன்கு தேய்த்தபின் உலர்த்துங்கள். தார் கறையைப் போக்க ரேப்பன்ரைனை கறைபட்ட இடத்தில் நன்றாகத் தேய்த்தபின் வெதுவெதுப்பான வெந்நீரில் துணியை சவர்க்காரம் போட்டுக் கழுவுங்கள். பெயின்ட் கறையை நீக்க பெட்ரோலை உபயோகியுங்கள். இப்போது எல்லாம் சரிதானே?

# தேன்கிண்ணம்

## குழந்தை

இல்லறத் தோட்டத்திற்குள்
பொழியப்படுகின்ற
இறைவனின்
ஆசிப்பூக்கள்!

மெத்தென்ற சகத்துடன்
வேறெங்கும் நுகரமுடியாத
மெல்லிய மணத்துடன்
மடியில் விழுகின்ற
பஞ்சப் பொதிகள்!

உடைந்துபோன
உறவுச் சங்கிலிகளையும்
ஒட்டி விடுகின்ற
அற்புதப் பசைகள்!

அழகைச் ஸ்வரங்களையும்
அமுத கானமாக்கி
செவிகளுக்குள் அனுப்பும்
அபூர்வ வீணைகள்!

மனவானில் சூழும்
கவலை மேகங்களை
சின்னப் புன்னகையால்
விலக்கிவிடும் சூரியன்!

அளவிற்கு மிஞ்சியும்
விஷமாகிப்போகாத
என்றும் சுவைக்கின்ற
அமுதத் தேன் துளிகள்!

காத்தான்குடி சுபைர்கான்.



## உலகம் (தெ)புரியாது!

1. மூசிக் கச்சான் காற்று அடித்தால்
முறியும் என்தேகம்!—இனிப்
பேசி என்ன பலன்தான் உண்டு
அனைத்தும் பெண்போகம்!

2. காசுக் காகத் தம்முடல் நல்கும்
கணிகையர் சுகம்கண்டேன்!—தினம்
'ஆசுப் பத்திரி' செல்வது வாழ்வாய்
அடியேன் வாழ்கின்றேன்!

3. போதை சேர்க்கும் பானம் யாவும்
பருகிப் பார்த்துள்ளேன்!—உடல்
வாதை கண்டே சோரும் வகையில்
வாந்தி எடுத்துள்ளேன்!

4. 'கஞ்சா' பீடி சுருட்டு அனைத்தும்
கண்டு களித்திட்டேன்!— தலை
பஞ்சு நிறமாய் மாறிய பின்பே,
பிழையை உணர்கின்றேன்!

5. கட்டிய மனைவி தடுத்தும் தொடர்ந்து,
கலந்து மகிழ்ந்திட்டேன்! பிள்ளை
எட்டோ டெட்டு பதினா றென்று
பெற்று முடித்திட்டேன்!

6. காலன் வரவுக் காக இப்போ
காத்துக் கிடக்கின்றேன்!—வாய்
வேலா—கந்தா சொல்ல; பாயில்
விழுந்து கிடக்கின்றேன்!

7. நன்மை தீமை இளமைக் காலம்
நமக்குத் தெரியாது!— அனுபவம்
உண்மை நிலையை உரைக்கும் வரையில்
உலகம் புரியாது!

அ.கௌரிதாசன்-ஆலங்கேணி கிழக்கு.



## எதிர்பார்ப்புக்கள்

கால தேவதை
கனவுகளைத் தந்துவிட்டு
கொலையாகிப் போயுள்ள
நேரமிது.

நிஜங்களை
நிரல் நிரலாய்க் கண்டு
பூபாளம் பாட
எத்தனையோ பேரின்
இதயங்கள்
எதிர்பார்ப்புடன்
இருக்கின்றன.

ஒவ்வொரு அமாவாசையிலும்
சூன்யங்களைத் தாங்கி
கண்ணீர்க் கடவுளுக்கு
காணிக்கை சேர்ப்பவர்கள்
அதிகமதிகம்.

வரும் வரும் என்று
பாதையில்
பார்த்துக்கொண்டிருப்போர்க்கு
பதிலேதும் செர்லலாமல்
பணக் காதலியோடு
சல்லாபம் கொண்டுவிட்டு
பயணப்படுகிறது
பாகுபாடில்லாப் பௌர்ணமி.

இடிந்து
இறந்துபோன இதயங்களை
சுமந்தவர்கள்
வாழ்க்கை ஏனோ...என்று
விரக்திக் கடலில்
குளிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இப்படி இப்படித்தான்
கடந்த வருடம்
கரைந்து போனது.
இருந்த களிப்பையும்
கடத்திக்கொண்டு
பறந்து போனது.
புதிய ஆண்டாவது
புலர்வுகளைச் சூடுமா?
இல்லை...இல்லை

இறந்த காதலியின்
கடைசி நேர
வார்த்தைகளின்

தாக்கத்தைப் போல்
கண்கள் நிறைய
கண்ணீர் நிறையுமா?

மனிதன்
மரணிக்கலாம்.
ஆனால்
அவன் வடுக்கள்
என்றும்
எதிர்பார்ப்புக்களாய்...

அம்தரவல்ல நிலாவாசன்.

## கல்குலேட்டர்

வயிற்றில் தட்ட
கண் சிமிட்டும்
மன்மதன்

பற்றரி மூச்சில்
உயிர்வாழும்
சிரிப்பழகன்


தட்டிக் கேட்டால்
உண்மை சொல்லும்
நீதிபதி

விரல்களோடு
உறவாடும்
ஊடல் கொள்ளா(க்)
காதலி

சிந்தனைக்கு(ச்)
சமாதி கட்டும்
கொத்தன்

சுயமுயற்சியை
அரித்திடும்
கறையான்

கலகெதர உனைஸ்.



## என்னவளே!

என்னவள்
சிரித்தால்
சித்திரம்!

என்னவள்
நிமிர்ந்தால்
நித்திலம்!

என்னவள்
நடந்தால்
நளினம்!

என்னவள்
வளைந்தால்
வளையல்!

என்னவள்
இருந்தால்
இளங்கொடி!

என்னவள்
உறங்கினால்
உதயதாரகை!

என்னவள்
களைத்துப்போனால்
கவிதைகள் பிரசவம்!

என்னவள்
கூந்தலில் ஈரமில்லை,
தென்றல் இளைப்பாறுவதால்..!

ஷஹிர்ஷா தாஸிம்-தர்காநகர்.

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

மனைவி: நீங்க ஆபரேசன் பண்ணின நோயாளி பிழைத்துக் கொண்டாராமே?
டாக்டர்: அதுதான் எனக்கும் புரியலே... எங்கேயோ ஒரு சின்னத் தவறு நடந்திருக்கு.

□□

கணவன்: ஆயிரம்தான் இருந்தாலும் உன் கழுத்தில் கிடக்கும் தாலி என்னோடது.
மனைவி: அதுக்கும் பணம் கொடுத்தது என் அப்பாதான்.

□□

முதல் இரவு அறையில் மணப்பெண்: என்னவோ கணக்கு எழுதிப்பார்க்கிறீங்களே, என்ன?
மணமகன்: சீதனப் பாக்கியை 'லேட்' பண்ணினால் எவ்வளவு வட்டி ஏறும்னு பார்க்கிறேன்.

□□


ப. ஆசிரியர்: ஆழமான கதைகள் எழுதுவேன்னு சொல்லுறியே... என்னென்ன கதைகள்?
எழுத்தாளர்: சுரங்கத் தொழிலாளர்கள் கதை. கிணறு தோண்டுபவர்கள் கதை. முத்துக் குளிப்பவர்கள் கதை இப்படிப் பல ஆழமாக எழுதுவேன்.

□□

மகன்: அப்பா...அப்பா.
தந்தை: சாப்பிடும்போது பேசாதேடா.
(சாப்பிட்டு முடிந்தபின்)
தந்தை: ஏனடா கூப்பிட்டே?
மகன்: உங்க சாப்பாட்டில் பூச்சி விழுந்திருந்தது.

□□

## உங்களால் முடியுமா?





சட்டென்று பார்த்தால் இருபடங்களும் ஒரே விதமாய் தெரியலாம். ஆனால் 2 படங்களுக்கும் இடையே 7 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடிக்க 5 நிமிடம் மட்டுமே. விடையைச் சரிபார்க்க 9ம் பக்கம் செல்லுங்கள்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.01.95 முதல் 04.02.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன். |
| தனு | - வெள்ளி |

சந்திரன்-தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பலவித யோசனை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்கஷ்டம் தீரல், பாராட்டு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | பி.ப. 1 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, தெய்வானுகூலம். | காலை 6 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பொருள்வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| சனி- | தொழில் பலிதம், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் பலிதம், கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- | எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| புதன்- | தொழில் விருத்தி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பணவரவு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, காரியசித்தி. | காலை 6 மணி |
| சனி- | பணவரவுதடை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, காரியசித்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | தேகாரோக்கியம், பணத்தடை. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், முயற்சி தோல்வி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | அந்நியர் சகாயம், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், தேகாரோக்கியக் குறைவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | காரியசித்தி, மனக்குறை நீங்கும். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனக்கவலை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், தொழில் கேடு. | காலை 7 மணி |
| சனி- | தொழில் மந்தம், பயனற்ற செயல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் பழி, துன்பமிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் நட்டம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் விருத்தி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | காலை 8 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, துன்பம் நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடவாழ்க்கை, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், செய்தொழில் இலாபம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, கௌரவம். | பி.ப. 1 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பொருள் இலாபம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 6 மணி |
| சனி- | துன்பம் அதிகம், தேகாரோக்கியமின்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் இலாபம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகாயம், கௌரவக் கேடு. | பகல் 12 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | அந்நியர் சகாயம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, மனக்கிலேசம். | காலை 6 மணி |
| புதன்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், பொருள் இலாபம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| சனி- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 9 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனக்கலக்கம், தேகாரோக்கிய நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் சகாயம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | செலவு மிகுதி, உடன்படல். | பி.ப. 1 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மீனம்: சுப நேரம்


(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | காரியசித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், புதிய முயற்சி. | காலை 6 மணி |
| புதன்- | உறவினர் கலகம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பொருள் நட்டம், மனப்பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- | காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2



"கீழோர்க்கு அஞ்சேல்.
குன்றென நிமிர்ந்து நில்.
கூடித் தொழில் செய்.
கெடுப்பது சோர்வு.
கேட்டிலும் துணிந்து நில்"
-மகாகவி பாரதியார்-



## எங்கள் வீட்டுக் கதவு!

எங்கள் வீட்டுக் கதவு-அது
எல்லோர்க்கும் உறவு!
என்றும் திறந்து மூடும்-கவலை
இல்லாது என்றும் ஆடும்!

அம்மா திறந்து மூட-அதை
அப்பா திறந்து போட
சும்மா நடந்த சேவல்-அதில்
துள்ளி ஏறிக் கூவும்!


பூட்டுப் போட்டதில்லை-மை
பூசிப் பார்த்ததில்லை!
பாட்டன், பாட்டி போலே- அது
பழைய கதவு தானே!

எலியும் ஓடிப்பாயும்-சின்ன
எறும்புக் கூட்டம் மேயும்!
வெயிலும் மழையும் பட்டு-கதவு
வெடித்துப் போச்சு கெட்டு!

எப்.சுமையா நவ்பர்-அக்குறணை.

## பாப்பா முரசு சிறுகதை

# எல்லாம் சேர்ந்தால்



ஒரு ஊரில் ஓர் துறவி இருந்தார். அவர் வயதும், அனுபவமும் மிக்கவர். ஆற்றங்கரையிலுள்ள மண்டபத்தில் அவர் வசித்து வந்தார். தினசரி ஆற்றில் நீராடி, விபூதி தரித்து, ஆலயம் சென்று இறைவனை வணங்கி, அங்கு அளிக்கப்படும் பிரசாதத்தை உண்டு மண்டபத்திற்குத் திரும்புவார். அங்கே அவரைத் தரிசிக்கவும், அவர் கூறும் அறிவுரைகளைக் கேட்கவும் மக்கள் கூடி விடுவார்கள்.

துறவி குழந்தைகளை நோக்கி, அவர்கள் கல்வி கற்க வேண்டிய அவசியத்தையும், கல்வி கற்றவர்கள் எப்படி வாழ்க்கையில் உயர்ந்து விளங்குகிறார்கள் என்றும் கல்வியே அழியாத செல்வம் என்றும், கொடுக்கக் கொடுக்க மேலும் மேலும் பெருகக்கூடிய ஒரே செல்வம் கல்விச் செல்வம் என்றும், கல்வி ஒன்றே ஒழுக்கத்தைக் கொடுக்கும் என்றும் அறிவுரை கூறுவார்.

திருமணமாகி குடும்பம் நடத்தும் பெண்கள் மிகவும் சிக்கனமாக குடும்பம் நடத்த வேண்டும் என்றும், அநாவசிய, ஆடம்பரச் செலவுகளைச் செய்யக்கூடாதென்றும் சேமிக்கின்ற பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும் என்றும், தம் மக்களை நன்மக்களாக்க வேண்டுமென்றும், நாட்டின் எதிர்காலம் அவர்கள் உருவாக்கும் பிள்ளைகளின் கைகளில்தான் நாளை கொடுக்கப்பட இருக்கிறது என்றும் சொல்வார்.

குடும்பத் தலைவர்களுக்கு அவர்கள் சம்பாதிப்பது மட்டும் தங்கள் கடமை என்றிருந்துவிடக்கூடாதென்றும், குடும்ப நலனில் மிகவும் அக்கறை கொள்ள வேண்டுமென்றும், உறவினர்கள், நண்பர்களை மதித்து நடத்த வேண்டும் என்றும் கூறுவார்.

அவரது அறிவுரைகளைக் கேட்டு பலர் தம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொண்டனர். இதனால் துறவியின் மீது அவர்களுக்கு பிரியம் உண்டாயிற்று. பலர் துறவியின் அறிவுரை கேட்கவும், அதன்படி நடக்கவும் துறவியைத் தேடி வரலாயினர்.

துறவி மீது இப்படி மக்கள் பிரியமாக இருப்பதைக் காணப் பொறுக்காத சிலரில், ஒருவன் துறவியைப் பலர் முன்னிலையில் கேள்வி கேட்டு மடக்கி அவரை அவமானப் படுத்த எண்ணி வந்தான்.

மக்கள் துறவியின் அறிவுரைகளைக் கேட்கக் கூடி இருந்தனர். அவன் துறவியின் அருகே சென்று வணங்கினான்.

"அப்பனே! உன் மனதில் உள்ள குறை என்னவோ?" என்று கேட்டார் துறவி.

"குறையல்ல, ஒரு சந்தேகம்..." என்றான் அவன்.

"என்ன சந்தேகமோ கேள்... என் சிற்றறிவுக்குத் தெரிந்தால் அதைப் போக்குகிறேன்" என்றார் துறவி.

"ஐயா நான் பேரீச்சம்பழம் சாப்பிடலாமா?" என்று கேட்டான் அவன்.

"பேரீச்சம்பழம்தானே, நிறைய சத்துக்கள் உள்ளது. அதை சாப்பிடுவது உடம்புக்கு நல்லது. நீ சாப்பிடலாம்," என்றார் துறவி.

"பேரீச்சம் பழம் சாப்பிடுகிற நான் தண்ணீர் குடிக்கலாமா?" என்று கேட்டான் அவன்.

"தண்ணீர் நம் தேச சீதோஷ்ணத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒரு பொருள். தண்ணீரை நாம் குடித்தே ஆக வேண்டும்," என்றார் துறவி.

"சிறிது புளிப்பான பொருள் ஏதாவது சாப்பிடலாமா?" என்றான்.

"சிறிது புளிப்பு, உவர்ப்பு, இனிப்பு, காரம் எல்லாம் சாப்பிடுவதில் தவறில்லை," என்றார் துறவி.

"நல்லது துறவியாரே. பேரீச்சம்பழம் சாப்பிடலாம் என்கிறீர்கள். நீர் குடிக்கலாம் என்கிறீர்கள். சிறிது புளிப்பான பொருள் சாப்பிடலாம் என்கிறீர்கள்.

இவைகளை எல்லாம் சாப்பிடலாம் என்று சொல்லும் நீங்கள், இவைகளை எல்லாம் ஒன்று சேர்த்து உண்டான மதுவை மட்டும் ஏன் குடிக்கக்கூடாது என்கிறீர்கள்?" என்று ஆணித்தரமாகக் கேட்டான்.

இளைஞனின் கேள்விக்குத் துறவி என்னபதில் சொல்லப் போகிறாரோ என்று மக்கள், அவர் முகத்தையே பார்த்தார்கள்.

துறவி அந்த இளைஞனைப் பார்த்துப் புன்னகைத்தார். பிறகு, கணீர் என்ற குரலில், "இளைஞனே உன் தலையில் கொஞ்சம் மண்ணைப் போட்டால்..?" என்று கேட்டார்.

"மண்தானே..அதைப்பற்றிக் கவலைப் படமாட்டேன்," என்றான் இளைஞன்.

"உன் தலையில் கொஞ்சம் நீரை ஊற்றினால்..?" கேட்டார் துறவி.

"அப்பொழுது கவலைப்படமாட்டேன்," என்றான் இளைஞன்.

"இளைஞனே! நான் உன் தலையில் மண்ணையும், நீரையும் போட்டால் சிறிதும் கவலைப்படமாட்டேன் என்கிறாய், உன் தலையில் அந்த மண்ணையும், தண்ணீரையும் கலந்து உருவாக்கிய செங்கல்லை போட்டால்...?" என்று கேட்டார் துறவி.

தன் தலையில் அப்பொழுதே செங்கல் விழுந்து, மண்டை உடைந்ததுபோல உணர்ந்த அந்த இளைஞன் துறவியின் காலில் விழுந்து தன் அறியாமைக்கு மன்னிப்புக் கேட்டான்.

## விடுகதைகளும் விடைகளும்

01. ஒற்றைக் கண்ணன் சிறைக்குள் சிறைப்பட்டு விட்டால் பின் இளமையும் இல்லை, முதுமையும் இல்லை. அவன் யார்?
2. நிலா உண்டு வானமும் அல்ல, மழை பெய்யும் மேகமும் அல்ல. அது என்ன?
3. சிருஷ்டி தேவனின் முழுமையில்லா சிருஷ்டியை முழுமைப்படுத்துவதே இதுதான் அது யாது?
4. சிறகடிக்கும்-பறக்காது. அது என்ன?
5. ஒன்றுக்குள் ஒன்று அது என்ன?
6. தான் வாழும் இடத்தில் தானே வலம் வருவான். ஆனால் வலம் வந்த தடம் அங்கே இல்லை. அது எது?
7. கண்ணிருந்தும் பார்வையற்றது. அது என்ன?
8. உடலில் இது இருக்கும். ஆனால் இருக்கும் இடம் தெரியாது. அது யாது?
9. ஊரின் உறக்கத்திலே இதன் விழிப்பு. அது என்ன?
10. தானே இயங்கி தன்னகத்தாரையும் இயக்கும். அது எது?

### விடைகள்

1. கமரா 2. கண்
3. ஆடை 4. இமை
5. விதைக்குள் விருட்சம்
6. தவளை 7. தேங்காய்
8. உயிர் 9. மின் விளக்கு
10. இதயம்

ஞானசெல்வம் இன்பச்செல்வம்
ஞானசெல்வம் இதயச்செல்வம்
மட்டக்களப்பு.


01. மூத்தவர் ஆற்றிலே, அடுத்தவர் காட்டிலே, இளையவர் வீட்டிலே- யார் அவர்கள்?
02. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுத்து வட்டக் குடை பிடித்து வருகிறார் வன்னியனார். யார் அவர்?
03. தட்டு வீட்டுக்குள் முட்டுப் பலகை. அது என்ன?
4. வெட்ட வெட்டத் தழைக்கும் மரம். என்ன மரம்? வேடர் கொண்டு ஓடும் மரம் என்ன மரம்?
05. போவான்- வருவான், திம்மப்பன் ஒற்றக்காலில் நிற்பான் திம்மப்பன். யார் அவன்?
06. முத்து முத்துச் சேலைக்காரி-முப்பது பெண் வேலைக்காரி. தண்டைக் கொழுக்காரி. தாவரத்து வீட்டுக்காரி. அவளைத் தொடுவானேன்? கவலைப் படுவானேன்? யார் அவள்?

### விடைகள்

01. முதலை, உடும்பு, பல்லி
02. நண்டு 03. நாக்கு
04. தலைமயிர்-வில் அம்பு 05. கதவு
06. கொடுக்கான்.

பாத்திமா ஸப்ரீனா

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.02.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 76
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 73

பரிசுக்குரியவர்
செல்வி தியாகராஜா லாவண்யா
கார்மேல் பாத்திமா தேசியப் பாடசாலை-கல்முனை.


பாராட்டுக்குரியவர்கள்
என்.எம்.எம்.ரிம்ஸான்
கு/அல்/அக்ஸா வித்தியாலயம்-பொல்கஹவெல.
யே.சைலஜா-அல்/ஹிலால் ம.கல்லூரி-நீர்கொழும்பு.
மிப்லா மிஷ்வார்
களு/முஸ்லிம் மகாவித்தியாலயம்-களுத்துறை.
சி.கபிலன்-கொழும்பு இந்துக்கல்லூரி
இரத்மலானை.
அஷோக் ரஜீவ் குமார் கணநாதன்
ஸ்ரீ.மு.மா.அ.த.ம வித்தியாலயம்-கம்பளை.

## உலகக் கோப்பை கால்பந்து




- **உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி முதன் முதலில் எப்போது நடைபெற்றது? இப்போது எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது?**
  *முதன் முதலில் 1930ம் ஆண்டு தென் அமெரிக்காவில் உள்ள உருகுவே நாட்டில் விளையாடப்பட்டது. அதில் ஆர்ஜென்டினாவை 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. இப்போது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்போட்டி விளையாடப்படுகிறது.*
- **கால்பந்து போட்டிக்கான தலைமைச் சங்கம் எது?**
  *சர்வதேச கால்பந்துச் சங்கம் சுவிற்சர்லாந்தில் உள்ள சூரிச் நகரில் இதன் தலைமையகம் உள்ளது. இதனுடன் இணைந்த மற்றொரு சங்கம் போட்டிக்கான விதி முறைகளை வகுக்கிறது.*
- **இப்போட்டியில் விளையாட பல நாடுகள் எப்படி தகுதி பெறுகின்றன?**
  *அந்தந்த கண்டங்களில் உள்ள நாடுகளுக்கு இடையே பகுதி வாரியாகப் போட்டிகள் நடைபெறும். அவற்றிலிருந்து இறுதிக்கட்ட போட்டிக்கு 24 நாடுகள் தேர்ந்தெடுக்கப்படும். பிறகு பல கால் இறுதிப்போட்டிகளுக்குப் பின்னர் அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறும்.*
- **இதுவரை நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டிகளில் அதிக கோல்கள் போட்டவர் யார்?**
  *பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வீரர் பான்டைன் 1958ம் ஆண்டு போட்டிகளில் 13 கோல் போட்டார்.*
- **அடுத்த உலகக் கோப்பை கால் பந்து போட்டியை நடத்தும் நாடு எது?**
  *பிரான்ஸ்.*

## அறிவோம் மனதில் பதிவோம்



அமெரிக்காவில் காணப்படும் ராட்சத சிலந்திகள் வலை பின்னி விட்டு அதை தனது கால்களின் மூலம் விரித்து பிடித்துக்கொள்ளும். பூச்சிகள் வலையில் விழுந்ததும் அவற்றைத் தின்னும்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியின்றி, பிரசாரம் இன்றி இரண்டு முறை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு அதிபரானவர் ஜோர்ஜ் வோஷிங்டன். 1788, 1792 ஆண்டுகளில் அவர் அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.






இங்கிலாந்தின் மிகப்பெரிய மருத்துவமனை ஜேம்ஸ் யுனிவர்சிட்டி ஹொஸ்பிட்டல். லீட்ஸ் என்ற இடத்தில் உள்ளது.

## ஐந்தெழுத்தில் பல பொருளிருக்கும்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ச | ந் | தி | ரி | கா |

1. 1-3 அவிசுவாசத்தைக் குறிக்கும்.
2. 1-4 பிழைக்கும் எதிர்.
3. 1-5 தோள் கொடுப்பான் தோழன்
4. 1-4-5 கமலஹாசனின் இல்லத்தரசி
5. 3-4 எண்ணெய் மட்டும் போதுமா விளக்கெரிய?
6. 5-2-3 அகிம்சை அண்ணல்
7. 5-3 முஸ்லிம் சட்ட நிபுணர்.

விடைகள்
1. சதி 2. சரி 3. சகா 4. சரிகா
5. திரி 6. காந்தி 7. காதி

கே.இஸ்மத் இர்பானா-ஏறாவூர்.

# மகா சூலம்

## 6

**தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது! வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!**

**எழுதுவது யார்?**

**கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான- பரிசுகள் காத்திருக்கின்றன- தொடர்ந்து வாசியுங்கள்.**

நாம் கேட்கும்போது மட்டும் விடையை எழுதி அனுப்பினால்போதும்.

ஸ்ரீலதாவோடு சொல்லாமல்.... தொலைவில் நின்றாவது அவளிடம் ஒருவார்த்தையும் சொல்லாமல்...

கோகுலின் திருமணம் முடிந்துவிட்டது!

'ஸ்ரீலதா! என்னை நீ மன்னிக்க மாட்டாயா?' -மனசுக்குள்ளாகவே அவளிடம் மன்னிப்புக் கேட்டான் கோகுல்.

இந்தத் திருமணம் நடந்ததே திடீரென்றுதான். நீலகண்டன் திருமேனி பவத்ராதனிடம் சொன்னபோது அது அவரை வெறுப்பேற்றத்தான் சொல்கிறார் என்று வேலைக்காரன் பாச்சு நினைத்திருந்தான். ஆனால்...நடந்ததோ..?

எப்போது பேசி முடிவு செய்யப்பட்டது.... யார் யார் எல்லாம் போய் பெண்ணைப் பார்த்தார்கள்?

எதுவுமே தெரியாது கோகுலுக்கு.

அந்த நான்கு நாட்களும் அவனுக்கு இல்லமே சிறைச்சாலை போலாகியிருந்தது. எங்கேயும் வெளியே போக முடியவில்லை. விடவும் இல்லை. கைதியைப்போல் அறைக்குள்ளாகவே அடைந்து கிடந்தவன் அவன். வெளியே போகவிடாமல் அவனை அறைக்குள்ளேயே அடைகோழி மாதிரி ஒரே இருப்பு இருக்கச் செய்தது...

அப்பாவின் மாந்திரீக சக்தி என்பதைக் கூட அவன் இன்னமும் உணரவில்லை!

சுமதியின் கழுத்தில் அவன் தாலி கட்டும்போதுகூட ஒரே எந்திரகதிதான்! அப்போதெல்லாம் அவன் நினைவில் ஸ்ரீலதாவோ... அவளுக்குச் செய்து கொடுத்த சத்திய வாக்குகளோ..எதுவுமே கோகுலின் கவனத்துக்கு வரவில்லை!

நீலகண்டன் திருமேனி தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று நிரூபித்துவிட்டார்!

பாலேக்கல் மனையிலிருந்து தன் மகன் மேலிடத்து மாப்பிள்ளையாவது அவருக்குப் பிடித்தமில்லை! அந்த வீம்பில்தான் வீடு தேடி வந்த பவத்ராதனைக்கூடப் பரிகாசம் செய்து அனுப்பி வைத்துவிட்டார் அவர்.

மேலிடத்து மனை மாந்திரீகனின் மகள், யக்ஷி மாதிரி எங்காவது நின்று கோகுலைக் கூப்பிட்டிருக்கக் கூடும்! இவனும் இளித்துக் கொண்டுபோய் அவளோடு கொஞ்சிக் குலாவியிருக்கக் கூடும். அவ்வளவுதானே?

ஆண்களுக்கு என்ன?

இப்படித்தான் கணக்குப் போட்டார் நீலகண்டன்.

இவரது நினைப்புப்படியே ஸ்ரீலதா கோகுலைக் கூப்பிட்டிருந்தாலும்... போனவன் களவாடியது அவளது கற்பெனும் பொக்கிஷத்தை அல்லவா?

நீலகண்டன் இதையேன் யோசிக்கவில்லை?

அவருடைய வன்மம், எந்தெந்த வழிகளில் எல்லாம் மேலிடம் குடும்பத்தையும், பாரம்பரியத்தையும் அவமானத்துக்குட்படுத்த வேண்டுமோ அப்படி அவமானப்படுத்துவதில் நிறைவு கொண்டிருந்தது போலும்!

பவத்ராதன் தான் நீலகண்டனைப் பொறுத்தமட்டில் எதிரி.

அந்த ஆள் மட்டும் மாந்திரீகத்தைத் தொடவில்லை என்றால் இந்தப் புல்லரிக்குன்று கிராமத்தில் தனது புகழும் கியாதியும் எப்படி எப்படி எல்லாம் இருந்திருக்கும்? அதைக் கெடுத்தவனின் குடும்பத்தையே அவமானத்தால் கெடுத்துக்கொண்டிருக்கிறோம் என்கிற வஞ்சம்தான்...கோகுல் சுமதியின் கழுத்தில் தாலியைக் கட்டுறவரை பிளறிக்கொண்டே இருந்தது நீலகண்டனுக்கு!

மாந்திரீகன் மாந்திரீகத்தோடு மோத வேண்டியதுதானே?

ஏன் பவத்ராதனைக் காரணமாக வைத்து அவர் மகளைப் பழிதீர்க்க வேண்டும்?

நீலகண்டன் தனக்குத்தானே இப்படிக் கேட்டக்கொண்டது உண்டு. ஆனால்... துல்லியமான சக்திகளுக்கு நடுவே ஏற்படுகிற போராட்டங்களுக்கு ஏது வெற்றியும் தோல்வியும்? தெரியும். அது மட்டுமில்லை! தனது உபாஸனா மூர்த்திகளுக்கு பவத்ராதனை அழித்தொழிக்கிற சக்திகளும் இல்லை! எனவே தான் எதிரியின் குடும்பத்தோடு ஏதாவது செய்து தனது தலையை நிமிர்த்துக்கொள்ளவேண்டிய கட்டாயம் வந்துவிட்டது நீலகண்டனுக்கு.

□□□

கோகுல் திருமணம் செய்துகொண்ட தகவலறிந்ததுமே குலுங்கிக் குலுங்கி அழுதாள் ஸ்ரீலதா.

இந்த அழுகை-

பவத்ராதன் நீலகண்டனைப்போய்ப் பார்த்துவிட்டு வந்த அன்றைக்கே ஆரம்பமாகிவிட்டது!

தனக்கும் கோகுலுக்கும் திருமணம் செய்து வைக்கிற முடிவோடு அப்பா பாலேக்கல் மனைக்குப் புறப்பட்டுப் போனது முதல் புளங்காகிதமாகக் காத்துக்கொண்டிருந்தவள் அவள்! ஆனால் அந்தக் கனவு மாளிகை நொறுங்கிப்போய்விட்டது.....

"உனக்காகத்தான் ஸ்ரீலதா நான் அவ்வளவு அவமானத்தையும் சகிச்சுட்டு வந்தேன். நீலகண்டன் ஏதோ ஒரு மூட சொர்க்கத்திலே மூழ்கிக்கெடக்கறாறு! அவருக்கு சொந்த மகனைப்பத்தின கவலைகூட இல்லே! நீ கோகுலை மறந்துடும்மா!"

தளர்ந்துபோய் சாய்வு நாற்காலியில் சாயும்போது-

அப்பாவைப் பார்க்கிற திராணிகூட இல்லை ஸ்ரீலதாவுக்கு! அவர் காலடியில் விழுந்து கதறி அழுதாள்.

"என்னப்பா சொல்றீங்க?"

"ஏதோ ஒரு கனவா கண்டதை எல்லாம் மறந்துடு ஸ்ரீலதா. இனி, கோகுல் உனக்கு இல்லே!"

"என்னால மறக்க முடியலேப்பா! கோகுலாலேயும் என்னை மறக்க முடியாது!"

உறுதியோடு சொன்னவள் ஸ்ரீலதா.

அப்புறம்தான் தெரிந்தது.... மறுநாள் தியானத்திலிருந்து கண்களைத் திறந்த பவத்ராதன் சொன்னார்: "இது அவன் இஷ்டமா நடக்கிற கல்யாணமில்லம்மா! நீலகண்டன் மந்திர சக்தியாலே அவன் மனசை மாற்றியிருக்கான். இப்படிச் செய்யறது ரொம்பவும் தப்பு. இதனாலே பல ஆபத்துக்கள் வரலாம்...! பாவம் கோகுல்!"

கேட்ட பிறகும் கூவி அழுதாள் ஸ்ரீலதா.

"அப்பா...! தடுங்கப்பா! உங்க மந்திர சக்தியாலே தடுங்க! கோகுலைக் காப்பாத்துங்க! அப்பா...அப்பா...காப்பாத்துங்கப்பா."

கெஞ்சினாள் ஸ்ரீலதா.

"அதி புத்திசாலித்தனம்.... புத்திமான்களையே புதை குழிக்கு அனுப்பும்மா! அப்படித்தான் நீலகண்டனும் அதிபுத்திசாலியாகியிருக்கான்! ஆனா அது விகல்ப புத்தியா மாறிப்போயிடுச்சு!"

ஸ்ரீலதாவால் இதைக் கேட்டுக்கொண்டு அங்கே நிற்க முடியவில்லை. ஓடிப்போய்க் கட்டிலில் விழுந்து புரண்டு அழுதாள்.

அழுதுகொண்டே இருந்தாள்... அவளுடைய எல்லா உற்சாகங்களும் அந்தக் கண்ணீரில் கரைந்துகொண்டிருந்தன!

□□□

நான்காவது நாள்...சாய்வு நாற்காலியில் கண்களை மூடியபடி படுத்திருந்த பவத்ராதன் இல்லத்து முற்றத்தில் யாருடைய காலடிச் சப்தத்தையோ கேட்டுக் கண்களைத் திறந்தார்.

குஞ்சன் திண்ணையில் தொய்ந்துபோய் அமருவது தெரிந்தது.

"கோகுல் கல்யாணம் முடிஞ்சுபோச்சா குஞ்சா?"

திருமேனி தூங்கிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்து உட்கார்ந்த குஞ்சன் சட்டென்று எழுந்து நின்றான். தலையை மட்டும் அசைத்தார். ஏதோ கெட்ட செய்தியைச் சொல்கிற முகபாவம்!

திருமேனி மனைவியை அழைத்தார்.

இல்லத்துப் பெருமாட்டி ஏதோ இடியோசை கேட்டதுபோல் பதறிக்கொண்டே வந்தார்.

"என்ன ஆச்சு உனக்கு?"

"என்னவோ தெரியலே...ஸ்ரீலதாவைப் பார்க்கவே முடியலே! அவ இனியும் ஒருவாய் அன்னம்கூட வாயில வைக்கலே!"

"சாப்பிடுவா. நீ கொண்டுபோய்க் குடு.." என்றார் அவர். பிறகு எதையோ யோசித்துவிட்டுச் சொன்னார்- குடுத்துட்டு வர்றப்ப அந்தப் பஞ்சாங்கத்தையும் எடுத்துட்டு வா...!"

"எதுக்கு?"

"நீலகண்டன்ஏதோ ஒரு கணக்கிலே தப்புப் பண்ணினமாதிரி எனக்கு ஒரு தோணல்!"

"உங்களுக்கு நீலகண்டன் பண்ணினது எல்லாமே தப்பு! இப்ப என்னத்துக்கு அவன் கவலை?" எரிச்சலோடு சொல்லிவிட்டு இல்லத்து 'அந்தர்ஜனம்' உள்ளே போனதுமே-

குஞ்சன் கேட்டான்: "திருமேனி! கண்டதையெல்லாம் போட்டு எதுக்கு மனசை வருத்திக்கறீங்க?"

"பாரம்பரியமா ரெண்டு குடும்பத்துக்கும் பகையிருந்தது நிஜம். ஆனா நான் தலையெடுத்தப்புறமாவது அந்தப் பகை விலகணும்'னு நெனைச்சேன்... குஞ்சா! இந்த நினைப்பை நீலகண்டன் மதிக்காமப் போனாலும் போகட்டும். அதுக்காக- இப்படியா அவசரப்படுவான்?"

"என்ன சொல்றீங்க திருமேனி?"

பவத்ராதன் உடனே சொல்லவில்லை. பஞ்சாங்கம் வந்த பிறகு ஏதேதோ கணக்குகளை எல்லாம் கூட்டிக் கழித்துப்போட்டுப் பார்த்து விட்டுத்தான் சொன்னார்...

இதே நேரம்-

□□□

பாலேக்கல் இல்லத்தில் நீலகண்டன் திருமேனியின் வெடிச் சிரிப்பு... பூ முகத்தையும் முற்றத்தையும் குலுக்கி அடித்தது! கூடவே விருந்தாளிகளும் வேலைக்காரப் பாச்சுவும் கூட அந்தச் சிரிப்பில் பங்கேற்றுக்கொண்டனர்.

"இப்ப எப்படி இருக்கு? பவத்ராதன் இந்நேரம் கூனிக் குறுகிப் போயிருக்கணும்...! என்னடா சொல்றே பாச்சு?"

"ஆமாம் திருமேனி!"

"அவன் அகம்பாவத்தோட தலைமேல அடிச்சு நொறுக்கித் தள்ளியாச்சு! கெட்டுப்போன மகளை இனி எந்த நம்பூதிரியாவது வந்து சம்பந்தம் பேசுவானாடா?" கேட்டார் நீலகண்டன்.

"பேசமாட்டாங்க திருமேனி!"

மறுபடியும் அட்டகாசமாகச் சிரித்தார் நீலகண்டன்.

"இனியாவது என்னை இந்த ஊர்ல மந்திரவாதீன்னு மக்கள் அங்கீகாரம் பண்ணுவாங்களாடா?"

கேட்டார் திருமேனி.

பாச்சு சுற்றிலும் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்தான். இந்தக் கேள்விக்கு அவர்களில் யாராவது பதில் சொன்னால்தான் அது நம்பகமாக இருக்கும் என்பது அவன் வேட்கை.

யாரும் சொல்லவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது இரவும் பகலும் முத்தமிடும் சந்தியா நேரம்!

வானத்தில் செக்கரின் திரை சிவந்து தொங்கியது.

□□□

சிவப்பு பழுப்பேறி இருட்டத் தொடங்கியபோது...உலகமே அந்தகாரத்தில் நீராட ஆயத்தப்பட்டது! தூரத்தில் குன்றின் மீது எழுந்தருளிக்கொண்டிருந்த கோவில்களில் கூட்டு மணி முழக்கம்.

தீபாராதனை நடக்கிற நேரம்.

பாலேக்கல் மனையின் பூமுகத்தில் அஞ்சு திரிபோட்ட நிலை விளக்குப் பூவிரித்தார்ப் போல் வெளிச்சக் கதிர்களை வீசி நனைத்தது.

விருந்தாளிகள் ஒவ்வொருவராக விடைபெற்றுத் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

அன்று கோகுலின் சாந்தி முகூர்த்தம் பாலேக்கல் மனையிலேயே ஏற்பாடாகியிருந்தது!

இந்த முகூர்த்தம் முடிக்கப்பட்டதுமே மறுநாள் கோகுல் சுமதியோடுபோய் வாழவேண்டும் என்பது நம்பூதிரியின் மரபு.

இன்றுவரைக்கும்தான், கோகுல் பாலேக்கல் இல்லத்துப் பிள்ளை!

அப்புறம் சுமதியின் இல்லத்துக்கு மருமகன்!



எனவேதான் திருமணம் முடிந்த இரவே மகன் பாலேக்கல் இல்லத்திலேயே பெறவேண்டிய இறுதி மகிழ்ச்சியைப் பெற்றோர்கள் ஆசியோடு நிறைவேற்றிக்கொள்ள ஆயத்தப்பட்டிருந்தான்.

இந்தச் சடங்கு குலச் சம்பிரதாயப்படி நடக்கிற திருப்தியில் நீலகண்டன் நம்பூதிரியும் பூமுக வாசலில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து மனதுக்குள் எதை எதை எல்லாமோ அசைபோட்டுக்கொண்டிருந்தார்.

விருந்தாளிகள் விடைபெறும் போதெல்லாம் அவருக்கு ஏதோ ஒரு பதட்டம்!

என்றாலும் அவர் அதை வெளியே காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அப்போதும் அவர் தனது பெருமையைச் சொல்லிக் காட்டத் தவறவேயில்லை. " இனி... இந்த ஊர்லேயே நான்தான் திருமேனி...பெரிய மாந்திரீகன்! பவத்ராதன் சக்தி மொத்தமும் போயிடுச்சு!"

"சரி...சரி..! எங்களுக்கு விடைதாருங்கோ! நாங்க வெகு தூரம் போகணுமில்லே?"

கடைசியாகப் புறப்பட்ட நம்பூதிரியும் நீலகண்டனின் கைகளைப் பற்றி விடைபெற்றுக்கொண்டு நடந்த மறு நிமிடம்-

சோபனை அறையிலிருந்து ஓடோடி வெளியே வந்தான் கோகுல்.

இடுப்பில் கட்டியிருந்த வேட்டியும், மார்பின் குறுக்காய்க் கிடந்த பூனூலும் மட்டுமே இருந்தன.

தலை கலைந்திருந்தது.

சந்தனமும் குங்குமமும் கரைந்து போயிருந்தன.

"என்னடா... என்னஇது..? ஏன் இப்படி ஓடி வரே?" பதறிப்போய்க் கேட்டார் பாலேக்கல் திருமேனி.

"அப்பா!"

குரலில் ஈனம் மனசுக்குள் குமுறல்!

"என்ன கோகுல்?"

நீலகண்டன் திருமேனி மகனைப் பற்றிக்கொண்டு கேட்டார். அவன் உடல் நெருப்பாகக் கொதித்தது.

"சுமதியைக் காணலேப்பா! உடம்பைக் கழுவிட்டு உள்ளே போனேன். அவளைக் கட்டில்லே காணலேப்பா!"

"கழுவின உடம்பா இப்படிச் சுடுது? பதட்டப்படாமப் போடா! அவளும் உன்னை மாதிரியே போய் உடம்பைக் கழுவிட்டு வருவா! போய்க் காத்திரு!"

"ஐயோ- அப்பா! இவ்வளவு நேரமும் அவளுக்காகத்தான் காத்திருந்தேன்! ஒரு வேளை-விருந்தாளிகளோட அவளும் அவ வீட்டுக்குப் போயிருப்பாளோ?"

"பைத்தாரா! அதெப்படிப் போவா? இன்னிக்கு அவள் போகமாட்டாப்பா.... போ..போ..." நீலகண்டனுக்கு மகனிடம் விளக்கிச் சொல்லவும் முடியவில்லை; சொல்லாமலிருக்கவும் முடியவில்லை.

"வேற எங்காவது போயிருக்கலாம்பா!"

"வெவரங்கெட்டவனே! உனக்குக் கழுத்தைக் காட்டினப்புறம் வேறெ எங்கே போவா?" நீலகண்டன் உரக்கச் சிரித்தார்.

"பெண்ணைக் காணலியாம்!" என்றாள் ஒரு அந்தர்ஜனம்- உள்ளறையிலிருந்து. சற்று நேரத்தில் இல்லம் முழுக்க இதே வார்த்தைகள். எல்லாரும் இல்லத்தைச் சுற்றித் தேட ஆரம்பித்தார்கள். எங்கேயும் சுமதியைக் காணவில்லை.

நீலகண்டன் திருமேனிக்கு ஏதேதோ சந்தேகங்கள். அவர் தனது அறைக்குப் போனார். சிலர் சுமதியின் வீட்டுக்கே தேடிப் போனார்கள். போனவர்கள் எல்லாம் ஒரு மணிநேரத்தில் திரும்பி வந்தார்கள். சுமதியை அங்கேயும் காணவில்லை.

கோகுல் வெகு நேரம் காத்திருந்துவிட்டு வெட்கமும், கவலையும் அப்பிய மனசோடுத் தனது அறைக்கே திரும்பிப் போனான். அப்போது-

அவனுள் சுமதியின் நினைவைவிட ஸ்ரீலதாவின் நினைவே அதிகப்பட்டிருந்தது! அவளை ஏமாற்றி இவளுக்குத் தாலிகட்டியதால் ஒரு வேளை ஸ்ரீலதா சாபமிட்டிருக்கலாமோ....

கோகுல் கதவைச் சாத்தித் தாழிட்டான். கட்டிலில் போய்ப்படுத்தான். மோட்டு வளையையே பார்த்தான். அப்போதுதான் நீலகண்டனும் மகனின் அறையை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

வந்தவர் சட்டென்று நின்றார்.

காரணம் மகனின் அறைக்குள்ளிருந்து பெண்ணொருத்தி சிரிக்கிற சப்தம்! சுமதி வந்துவிட்டாளா? இதுநேரம்வரை அவனை ஏமாற்றிவிட்டதற்காகத்தான் இப்படிச் சிரிக்கிறாளா?

நீலகண்டன் மகனின் அறைக் கதவிலிருந்த சாவித் துளையில் கண்பதித்துப் பார்த்தார்!

அப்போது அவர் கண்ட காட்சி? நீலகண்டனின் சர்வாங்கமும் வேர்த்துப் போயிற்று! (தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: வி. கணேசமூர்த்தி
வயது: 18
முகவரி: 11, நுவரெலியா வீதி, கம்பளை
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி



பெயர்: எம். ரிஸ்வி
வயது: 22
முகவரி: 06, 2ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், பாடல்கள் கேட்டல்.



பெயர்: ஏ. கிரேஸ்
வயது: 21
முகவரி: டிம்புல மேற்பிரிவு, பத்தனை.
பொழுதுபோக்கு: ரீ.வி., வானொலி, பூந்தோட்டம் வளர்த்தல்.



பெயர்: எம். அஸ்மியா
வயது: 15
முகவரி: 173/ஏ, மத்திய வீதி, புதிய காத்தான்குடி-03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனாநட்பு.



பெயர்: கே.ஜே. ஜீவா
வயது: 23
முகவரி: RATHUS QUAI-5, 6004, LUZERN, SWITZERLAND.
பொ.போ: தொலைக்காட்சி, கொம்பியூட்டர் கேம்.



பெயர்: எல்.வஹாப்டீன்
வயது: 24
முகவரி: P.O.BOX- 70043 AL SHAMAL DOHA-QATAR. A.G.
பொழுதுபோக்கு: வானொலி, ரீ.வி., பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: வி. சூரியகுமார்
வயது: 33
முகவரி: 108, விவேகானந்தா மேடு, கொழும்பு-13.
பொ.போ: திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். ரிபான்
வயது: 23
முகவரி: P.O.BOX-13, AL-JUBAIL-31951, K.S.A.
பொழுதுபோக்கு: கொம்பியூட்டர் கேம், தொலைக்காட்சி, வீடியோ.

பெயர்: பி. செபஸ்டியன்
வயது: 18
முகவரி: லொனக் எஸ்டேட், வட்டவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்.

பெயர்: வ. கலீலுல் ரஹ்மான்
வயது: 20
முகவரி: ரஹ்மானிய்யா வீதி, சின்னக் கிண்ணியா-1.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஆர். கலைச்செல்வன்
வயது: 19
முகவரி: பொடஸ்வுட் எஸ்டேட், கந்தப்பளை.
பொ.போ: வழமையானவை.

பெயர்: எம். சாபி
வயது: 20
முகவரி: 30/1, பிரதான வீதி, தலவாக்கலை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி.

என்றும்

முதலிடம்

உலகில்

மிகச் சிறந்த நாவல் எது?

ஒரே பதில்

தாய்! தாய்!! தாய்!!!

உண்மைகள் எப்போதும் வசீகரமானவை

அதுதான் 'தாய்' நாவல்

எப்போதும்

முதலிடத்தில் இருக்கிறது!

தவறவிடாமல் தொடர்ந்து

வாசியுங்கள்!

ரகுநாதனின்

மொழி பெயர்ப்புநடை

பிரமாதப்படுத்துகிறது.

-ஆ.ர்.

# தாய்

## மக்சீம் கார்க்கி

10

அவனது முகத்தைப் பார்த்ததும் அவள் தன்னுள் நினைத்துக் கொண்டாள்: "இவன் தவறேதும் செய்யமாட்டான்; இவனால் செய்ய முடியாது."

புரியாத பதிற்றுக்கணக்கான புதிய வார்த்தைகளைப்போல், திரும்பத் திரும்ப அடிக்கடி கேட்ட அந்தப் பயங்கர வார்த்தையும், முனை மழுங்கி அவள் காதுக்குப் பழகிப்போயிற்று. ஆனால் சாஷாவைமட்டும் அவளுக்குப் பிடிக்கவேயில்லை. சாஷா வந்துவிட்டால் அவளுக்கு அமைதியின்மையும் எரிச்சலும்தான் உள்ளத்தில் எழுந்து ஓங்கும்.

ஒரு நாள் அவள் தனது உதடுகளை வெறுப்போடு பிதுக்கிக்கொண்டு, ஹஹோலிடம்போய் சாஷாவைப் பற்றிச் சொன்னாள்:

"அவள் மிகவும் கண்டிப்பான பேர்வழி! ஒவ்வொருவரையும் அதிகாரம் பண்ணுகிறாள்: 'நீ இதைச் செய், நீ அதைச் செய்' என்று உத்தரவு போடுகிறாள்!"

ஹஹோல் வாய்விட்டு உரக்கச் சிரித்தான்.

"சரியான குறி பார்த்து ஒருபோடு போட்டீர்கள் அம்மா, ரொம்ப சரி! அப்படித்தானே பாவெல்?" என்றான். பிறகு அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு,

"பிரபு வம்சம்" என்றான்.

"அவள் ஒரு நல்ல பெண்!" என்று உணர்ச்சியற்றுச் சொன்னான் பாவெல்.

"அதுவும் உண்மைதான்" என்றான் ஹஹோல்; "அவள் என்ன செய்யவேண்டும்; நாம் என்ன விரும்புகிறோம், நம்மால் என்ன முடியும்-என்பது மட்டும் அவளுக்குப் புரியவில்லை."

புரியாத எதையோபற்றி அவர்கள் விவாதித்தார்கள்.

சாஷா பாவெலிடமும் கண்டிப்பாக நடந்து கொள்வதையும், சமயங்களில் அவனைப் பார்த்து உரக்கச் சத்தம்போடுவதையும் தாய் கண்டிருக்கிறாள். அம்மாதிரி வேளைகளில் பாவெல் பதிலே பேசுவதில்லை. வெறுமனே சிரிப்பான்; நதாஷாவை எத்தனை அன்பு கனியப் பார்ப்பானோ, அது போலவே சாஷாவின் முகத்தையும் பார்ப்பான். தாய்க்கு இதுவும்கூடப் பிடிக்கவில்லை.

எல்லோரையும் தழுவி நிற்கும் பெரு மகிழ்ச்சி தாயைச் சில சமயங்களில் வியப்புக்குள்ளாக்கும். இம்மாதிரியான குதூகலம், வெளிநாட்டிலுள்ள தொழிலாளர் இயக்கங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் படிக்கின்றபோதுதான் ஏற்படுவது வழக்கம். அப்போது அவர்கள் அனைவருடைய கண்களும் குதூகலத்தால் ஒளிபெற்றுத் துலங்கும்; அவர்கள் குழந்தைகளைப்போலக் குதூகலம் கொள்வார்கள்; வாய்விட்டுக் கலகலவென்று சிரிப்பார்கள்; உற்சாகத்தில் ஒருவர் தோளை ஒருவர் தட்டிக்கொடுத்துக்கொள்வார்கள்.

"ஜெர்மன் தோழர்கள் வாழ்க!" என்று யாரோ ஒருவன் தனக்கு ஏற்பட்ட ஆனந்தத்திலேயே மூழ்கி, வெறிகொண்ட மாதிரி கத்தினான்.

"இத்தாலியத் தொழிலாளர்கள் நீடூழி வாழ்க!" என்று அவர்கள் வேறொரு முறை கத்தினார்கள்.

இந்த வெற்றி முழக்கங்களைத் தூர தேசங்களிலுள்ள தமது நண்பர்களை நோக்கி, தங்களையோ தங்கள் மொழியையோ அறியாத, புரியாத நண்பர்களை நோக்கிக் காற்றிலே மிதக்க விட்டுக் கத்தினார்கள். ஆனால், அந்த இனந் தெரியாத நண்பர்கள் அவர்களது முழக்கங்களைக் கேட்பது போலவும், அவர்களது உற்சாகத்தை உணர்ந்துகொள்வது போலவும், இவர்கள் முழுமையாய் நம்புவதுபோலத் தோன்றியது.

"நாம் அவர்களுக்குக் கடிதம் எழுதுவது ஒரு நல்ல காரியம்" என்று ஆனந்தமயமாக ஒளிரும் கண்களோடு பேசினான் ஹஹோல்; "அப்படி எழுதினால்; ருஷியாவிலும் தங்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். தங்கள் மதத்தையே நம்பி அதையே பிரச்சாரம் செய்யும் தோழர்கள் இருக்கிறார்கள். தாங்கள் எந்தக் கொள்கையோடு வாழ்கிறார்களோ அதே கொள்கையோடு வாழந்து, தங்களது வெற்றிகளைக் கண்டு களிப்பாடும் தோழர்கள் இருக்கிறார்கள் என்ற விஷயம் அவர்களுக்கும் தெரியவரும்."

இதழ்களிலே புன்னகை பூத்துச் சொரிய அவர்கள் பிரெஞ்சுக்காரர்களையும், ஆங்கிலேயர்களையும், ஸ்வீடன்காரர்களையும் தமது நண்பர்களாகக் கருதிப் பேசுவார்கள்; தங்கள் இதயத்தோடு மிகுந்த நெருக்கம் கொண்ட மக்களாக, தாங்கள் பெருமதிப்பு வைத்திருக்கும் மக்களாக அவர்களைக் கருதிப் பேசிக்கொள்வார்கள்; அந்த மக்களின் துன்பத்திலும் இன்பத்திலும் இவர்களும் பங்கெடுத்துக்கொள்வார்கள்.

நெருக்கடி நிறைந்த அந்தச் சின்னஞ்சிறு அறையிலே எல்லா உலகத் தொழிலாளர்களோடும் ஆத்மார்த்தமாகக் கொள்ளும் ஒட்டுறவு உணர்ச்சி பிறந்தது; அந்த உணர்ச்சி தாயையும்கூட அடிமைப்படுத்தியது; அவர்கள் அனைவரையும் ஒன்றாக உருக்கிச் சேர்த்து ஒரே பேராத்மாவாக மாற்றி விட்டது. இந்த உணர்ச்சி அவளுக்குப் பிடிபடவில்லையென்றாலும், அந்த உணர்ச்சியின் இன்பமும் இளமையின் சக்திவெறியும், நம்பிக்கையும் அவளைத் தளர்ந்துவிடாதபடி தாங்கி நின்றன.

"நீங்கள் இருக்கிறீர்களே!" என்று ஒரு முறை அவள் ஹஹோலிடம் சொன்னாள்; "அனைவரும் உங்களுக்குத் தோழர்கள்! அவர்கள் யூதர்களாகட்டும், ஆர்மீனியர்களாகட்டும், ஆஸ்திரியர்காரராகட்டும்- எல்லோரும் உங்கள் தோழர்கள்! அவர்களுக்காக நீங்கள் வருத்தம் அடைகிறீர்கள்; சந்தோஷமும் கொள்கிறீர்கள்!"

"ஆமாம், அனைவருக்காவும், அனைவருக்காகவும், அம்மா! அனைவருக்கும் தான்!" என்றான் ஹஹோல். எங்களுக்குக் குலம் கோத்திரமோ, தேசிய இன பேதங்களோ தெரியாது. தோழர்களைத் தெரியும்; எதிரிகளையும் தெரியும். சகல தொழிலாளி மக்களும் எங்களுக்குத் தோழர்கள்; சகல பணக்காரர்களும், சகல அரசுகளும் எங்களுக்கு எதிரிகள். உலகத்தை நீங்கள் ஒருமுறை பார்த்து, உலகில் எத்தனைகோடி தொழிலாளி மக்கள் இருக்கிறார்கள், அவர்கள் எவ்வளவு பலசாலிகளாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால், உங்கள் ஆனந்தத்துக்கு அளவே இருக்காது; உங்கள் இதயத்தின் கொண்டாட்டத்துக்கு எல்லையே இருக்காது! அம்மா, பிரெஞ்சுக்காரனும், ஜெர்மனியனும், இத்தாலியனும் நாம் எப்படி வாழ்க்கையைப் பார்க்கிறோமோ அது போலவே பார்க்கிறான். நாம் அனைவரும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள்! அகில உலகத் தொழிலாளர்களின் வெல்லற்கரிய சகோதரத்துவம் எனும் தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் நாம்! இந்த எண்ணம் நமது இதயங்களைப் பூரிக்கச் செய்கிறது. இது தான் நியாயம் என்னும் சொர்க்க மண்டலத்தின் சூரியனாய்ச் சுடர்விடுகிறது. தொழிலாளியின் இதயபீடம்தான் அந்தச் சொர்க்க மண்டலம்! யாராயிருந்தாலும் சரி, எந்த இனத்தவனாயிருந்தாலும் சரி, ஒரு சோஷலிஸ்ட் எக்காலத்திலும் நமக்கு உண்மை உடன் பிறப்பு-நேற்று இன்று என்றுமே தான்."

இந்தச் சிறு பிள்ளைத்தனமான, எனினும் உறுதி வாய்ந்த நம்பிக்கையே அவர்களிடம் நாளுக்கு நாள் உரம் பெற்று வந்தது; நாளுக்கு நாள் விம்மி வளர்ந்து, ஒரு மாபெரும் சக்தியாக வளர்ந்து வந்தது. இதைக் கண்ட தாய், வானத்தில்தான் காணும் கதிரவனைப் போல, மகத்தான ஏதோ ஒன்று இவ்வுலகத்தில் பிறந்துவிட்டது என்று, தன்னையறியாமலே உணரத் தலைப்பட்டாள்.

அவர்கள் அடிக்கடி பாட்டுப் பாடினார்கள். உரத்த உற்சாகம் நிறைந்த குரலில் அநேகமாக எல்லோருக்குமே தெரிந்த வெகு சாதாரணமான பாடல்களைப் பாடினார்கள்; சமயங்களில் அவர்கள் புதிய பாடல்களை, கருத்தாழம் கொண்ட பாடல்களைப் பாடினார்கள். இனிமையான இங்கிதத்தோடு, அசாதாரண கீதசுகத்தோடும் பாடினார்கள். இந்தப் பாடல்களை அவர்கள் உரக்கப் பாடுவதில்லை, தேவாலய சங்கீதத்தைப் போல தாழ்ந்த குரலில் பாடினார்கள். அந்தப் பாடல்களைப் பாடும்போது, அவர்களது முகங்கள் கன்றிச் சிவக்கும்; வெளிறிட்டு வெளுக்கும், கணீரென ஒலிக்கும் அந்த மணி வார்த்தைகளில் ஒரு மகா சக்தி பிரதிபலிக்கும்.

முக்கியமாக, இந்தப் புதிய பாடல்களில் ஒன்றுமட்டும் தாயின் உள்ளத்தை மிகவும் கவர்ந்து கிளறிவிட்டது. சந்தேகமும் நிச்சயமின்மையும் கொடிபோல் பின்னிப் பிணைந்து இருண்டு மண்டிக்கிடக்கும் ஒரு பாதையிலே, தன்னந்தனியாகத் தானே துணையாகச் செல்லும் ஒரு துயரப்பட்ட ஆத்மாவின் துன்பமயமான வேதனைப் புலம்பல் அல்ல, அந்தப் பாடல். தேவையால் நசுக்கப்பட்டு பயத்தால் ஒடுக்கப்பட்டு, உருவமோ, நிறமோ இல்லாத அப்பாவி உள்ளங்களின் முறையீட்டையும் அந்தப் பாடல் பிரதிபலிக்கவில்லை. இருளிலே இடமும் வழியும் தெரியாமல் தட்டுத் தடுமாறும் சக்திகளின் சோக மூச்சுக்களையோ, நன்மை யாகட்டும், தீமையாகட்டும்-எதன்மீதும் கண்மூடித்தனமான அசுர வெறியோடு மோதிச் சாட முனையும் வீறாப்புக் குரல்களையோ அந்தப் பாடல் பிரதிபலிக்கவில்லை. எதையும் உருப்படியாய்க்கட்டி வளர்க்கத் திராணியற்ற, எல்லாவற்றையும் நாசமாக்கும் திறமைபெற்ற, அர்த்தமற்ற துன்பக் குரலையோ, பழிக்குப் பழி வாங்கும் வெறியுணர்ச்சியையோ அவர்கள் பாடவில்லை. சொல்லப்போனால், பழைய அடிமை உலகத்தின் எந்தவிதமான சாயையும் அந்தப் பாட்டில் இல்லவே இல்லை.

தாய்க்கு அந்தப் பாடலிலிருந்த கூரிய சொற்களும், கடுமையான ராக மூச்சும் பிடிக்கவில்லை. ஆனால், அந்த வார்த்தைகளையும் ராகத்தையும் அமுங்கடித்து, இதயத்தில் சிந்தனைக்கு வயப்படாத ஏதோ ஒரு உணர்ச்சியை மேலோங்கச் செய்யும் ஒரு இனந்தெரியாத மகா சக்தியை அவள் அந்த இளைஞர்களின் கண்களிலும் முகங்களிலும் கண்டாள்; அவர்களது இதயங்களில் அது வாழ்ந்து வருவதாக உணர்ந்தாள்; எந்தவிதச் சொல்லுக்கும் ராக சுகத்துக்கும் கட்டுப்படாத இந்த ஏதோ ஒன்றுக்கு எப்பொழுதும் தனிக் கவனத்துடன்தான் கேட்ட அந்தப் பாடல், மற்ற பாடல்களைவிட ஆழமான உணர்ச்சிப் பெருக்கை அவளுக்கு ஊட்டியது.

அவர்கள் அந்தப் பாடலை மற்றவற்றை விட மெதுவான குரலில் தான் பாடினார்கள். என்றாலும், அவர்கள் பாடிய முறைதான் வலிமை மிக்கதாகத் தோன்றியது, மார்ச் மாதத்தின் நிர்மலமான நாளொன்றைப்போல், வசந்த காலத்தின்வரவை அறிவிக்கும் ஒரு தினத்தைப்போல், அந்தப் பாடல் எல்லோரையும் தன் வசப்படுத்தி இழுத்தது.

"இந்தப் பாடலைத் தெருக்களின் வழியே நாம் பாடிச் செல்வதற்குரிய காலம் வந்து விட்டது!" என்று நிகலாய் வெஸோவ்ஷிகோவ் உணர்ச்சியற்றுச் சொல்லுவான்.

சமீபத்தில் செய்த ஒரு திருட்டுக் குற்றத்திற்காக, அவனது தந்தை தனீலோ சிறைத் தண்டனை பெற்றுச் சென்றபோது, நிகலாய் தன் தோழர்களைப் பார்த்துச் சொன்னான்:

"இனிமேல் நாம் எங்கள் வீட்டிலேயே கூடலாம்."

ஒவ்வொரு நாள் மாலையிலும், பாவெல் வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வருவம்போது அவனுடன் யாராவது ஒரு நண்பனும்கூட வந்து சேருவான். அவர்கள் உட்கார்ந்து படிப்பார்கள்; குறிப்பு எடுப்பார்கள்; அவர்களுக்குள்ள அவசரத்தில் முகங்கை கழுவிக்கொள்ள மறந்துபோய் விடுவார்கள். சாப்பிடும்போதும், தேநீர் அருந்தும்போதும் அவர்களது கையிலே புத்தகங்கள் இருக்கும்; அவர்கள் எதைப் பற்றித்தான் பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறிவது தாய்க்கு வரவரச் சிரமமாகிக் கொண்டிருந்தது.

"நாம் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கத்தான் வேண்டும்" என்று பாவெல் அடிக்கடி சொல்வான்.

வாழ்க்கை வெகு வேகமாக, ஜுர வேகத்தில் முன்னேறிக்கொண்டிருந்தது; அவர்கள் ஒவ்வொரு புத்தகத்தையும் சீக்கிரமே படித்து முடித்து மறு புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினார்கள். மலர் மலராய்ச் சென்று வண்டு தேனுண்ணுவதைப்போல, அவர்கள் விரைந்து விரைந்து புத்தகம் புத்தகமாகப் படித்துக்கொண்டிருந் தார்கள்.

"அவர்கள் நம்மைப்பற்றிப் பேசத் தொடங்கி விட்டார்கள்; நம்மீது சீக்கிரமே வலை வீசப் போகிறார்கள்!" என்று சொன்னான் நிகலாய் வெஸோவ்ஷிகோவ்.

"வலையில் விழுவதுதானே குருவிக்குத் தலைவிதி" என்றான் ஹஹோல்.

தாய்க்கு அந்த ஹஹோலின் மீது நாளுக்கு நாள் வாஞ்சை அதிகரித்தது. அவன் 'அம்மா' என்று அருமையாக அழைக்கும்போது, ஒரு பச்சிளங்குழந்தை தன் மென்மையான பிஞ்சுக்கரத்தால், அவளது கன்னத்தை வருடிக்கொடுப்பது போன்ற சுகம் தாய்க்குத் தட்டுப்பட்டது. பாவெலுக்கு ஞாயிற்றுக்கிழமையன்று வேறு வேலைகளிருந்தால், ஹஹோல் அவளுக்கு விறகு தறித்துக்கொடுப்பான். ஒருநாள் அவன் ஒரு பலகையைச் சுமந்துகொண்டு வந்துபோட்டு, கோடரியால் அதைச் செதுக்கினான்; உளுத்து உபயோகமற்றுப் போன வாசற்படியை அகற்றிவிட்டு, அந்தப் பலகையால் வெகு சீக்கிரத்தில் லாவகமாய் ஒரு வாசற்படி செய்துபோட்டுவிட்டான். ஒரு தடவை வீட்டின் வேலியை வெகு திறமையோடு பழுது பார்த்துச் சீராக்கினான். அவன் வேலை செய்யும்போதெல்லாம் ஏதோ ஒரு சோகமயமான, இனிய கீதத்தைச் சீட்டியடித்துக்கொண்டிருந்தான்.

"ஹஹோல் இங்கேயே வழக்கமாய்ச் சாப்பிடட்டுமே!"

என்று ஒருநாள் தன் மகனிடம் சொன்னாள் தாய்; "அது உங்கள் இரண்டு பேருக்குமே நல்லது. நீங்கள் இருவரும் ஒருவரைத் தேடி ஒருவர் ஓடிக் கொண்டிருக்க வேண்டாம் அல்லவா?"

"உங்களுக்கு அனாவசியத் தொல்லை எதற்காக?" என்றுதோளைக் குலுக்கிக் கொண்டே சொன்னான் பாவெல்.

"அபத்தம்! ஏதோ ஒரு வகையில் ஆயுள் பூராவும் தொல்லையாய்த்தானே இருக்கிறது. அவனைப் போன்ற நல்ல மனிதனுக்காக தொல்லைப்படலாம்!" என்றாள் தாய்.

"சரி! உன் இஷ்டம். அவன் இங்கு வந்தால் எனக்குச் சந்தோஷம்தான்!" என்றான் மகன்.

ஹஹோல் வந்து சேர்ந்தான்.

□□□

தொழிலாளர் குடியிருப்பின் கோடியிலிருந்த அந்தச் சின்னஞ்சிறிய வீடு, ஊர் ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்தது. அதன் சுவர்களை எத்தனையோ சந்தேகக் கண்கள் ஏற்கெனவே கூர்ந்து பார்த்துக்கொண்டுதான் இருந்தன. அந்த வீட்டைப்பற்றி எண்ணற்ற வதந்திகள் இறக்கை முளைத்து அதிவேகமாகப் பறந்து பரவின. வீட்டின் சுவர்களுக்குள்ளே ஏதோ ஒரு பரம இரகசியம் பதுங்கிக் கிடப்பதாகவும், அதை விரட்டியடிக்க வேண்டும் எனவும் ஜனங்கள் எண்ணிக்கொண்டார்கள். இராத்திரி வேளைகளில் அவர்கள் ஜன்னலின் வழியே தலையை நீட்டி எட்டிப்பார்த்தார்கள்; சமயங்களில் ஜன்னல் கண்ணாடியைக் கையால் தட்டிவிட்டு, உடனே பயத்தால் விழுந்தடித்துக்கொண்டு ஓடிச் சென்றார்கள்.

ஒரு நாள் பெலகேயாவை பெகுன்சோவ் என்ற சாராயக் கடைக்காரன் வழியில் சந்தித்தான். அவன் ஒரு அழகான கிழவன். ஊதா நிறமான தடித்த அரைக் கோட்டும், தொளதொளத்துச் சிவந்த கழுத்துச் சதையைச் சுற்றிக் கரிய நிறப் பட்டுக் கச்சையும் அணிந்திருப்பான்; பளபளக்கும் கூரிய மூக்கின் மீது ஆமை ஓட்டால் ஆன் ஒரு மூக்குக் கண்ணாடி தரித்திருப்பான். எனவே அவனுக்கு ஊரார் 'எலும்புக் கண்ணன்' என்று பட்டப் பெயர் வைத்திருந்தார்கள்.

மூச்சு விடக்கூட முனையாது, பதிலுக்காகவும் காத்திராது, அவன் பெலகேயாவை நோக்கிச் சரமாரியாக, உணர்ச்சியற்று உடைந்துபோன வார்த்தைகளைப் பொழிய ஆரம்பித்தான்:



(தொடர்ந்து வரும்)

# மௌனம்

-மருதமுனை முகர்றப்-

முழுநாளும் அலுவலகத்தில் தட்டச்சுடன் போராடிய களைப்புடன் உள்ளே நுழைந்த சாந்தியை கதிரையில் அமர்ந்தவாறே வரவேற்றார் அப்பா சிவஞானம்.

"உன்னோட ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசுறதுக்குத்தான் காத்துக்கிட்டிருக்கன். உடுப்புகள மாத்திக்கிட்டு கெதியா வாம்மா."

அலுவலகத்திலிருந்து கொண்டு வந்த கைப் பையை மேசைமீது போட்டுவிட்டு உடைகளை மாற்றுவதற்காக அறையினுள் நுழைந்து கொண்டிருந்த சாந்திக்கு அப்பாவின் இந்த வார்த்தைகள் சிந்தனையைத் தூண்டியது.

அப்பா எதைப்பற்றிப் பேசப் போகின்றாரோ என்று மனம் பல வழிகளாலும் போராடிக் கொண்டிருக்க விரைவாக முகத்தை அலம்பிக் கொண்டு அப்பா முன் வந்து நின்றாள் சாந்தி.

"வாம்மா சாந்தி! நான் திருமணப் பேச்சை எடுக்கும் போதெல்லாம் இப்ப வேணாம் அப்பா எண்டு நீ தடுத்துக்கிட்டிருக்காய். ஆனா ஒரே பிள்ளையை இருபத்தெட்டு வயது வரை திருமணம் முடிச்சுக்கொடுக்காம வீட்டில வச்சிக்கிட்டிருக்கான் எண்டு ஊரார் என்னைக் குறை கூறுறாங்க."

"காலையில வீட்டுக்கு வந்த நம்ம பக்கத்து வீட்டு நடராஜா கனடா இருந்து வந்திருக்கிற அவுர்ர மகனுக்கு உன்னப் பொண்ணு கேட்டார். நல்ல பையன்தானே எண்டு நானும் சம்மதம் கொடுத்திற்றன். அந்தப் பையன் அடுத்தமாதம் திரும்பவும் வெளிநாடு போக இருக்கிறதால வாற திங்கட்கிழமை திருமணம் செய்யிறதா தேதியும் குறிச்சிட்டம்மா."

"சீதனமா ஒரு இலட்சம் ரூபா பணம் மட்டும் கேட்கிறாங்க. என்ர பென்சன் தொகையும் ஒரு இலட்சம் ரூபாக்கிட்டத்தான் கிடைக்கும். அத அப்படியே மாறிக் குடுத்திரல்லாம். நீ நாளைக்குப் போய் இரண்டு வாரத்துக்கு லீவு போட்டிட்டு வாம்மா."

தனக்கும் விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் இருக்கும் என்று சிறிதும் சிந்தனை இல்லாமல் இலகுவாகக் கட்டளையிட்டு விட்டு வெற்றிலையை மென்று கொண்டிருக்கும் அப்பாவைப் பார்க்க சாந்திக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.



பலமாக சிந்தனையில் ஆழ்ந்தபின் பெண்ணாய்ப் பிறந்த பாவத்திற்காய் அழுது தீர்த்தாள் சாந்தி. கோழையான சாந்தியினால் அழுவதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்?

மனதுக்குள் அழுது கொண்டிருந்த சாந்திக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

"நான் உயிராக நேசிக்கும் சாந்திக்கு,

உனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட செய்தியினை நண்பன் சிவா மூலமாக அறிந்து கொண்டேன். சிறிதும் நம்பாமல் இரண்டு தினங்கள் பைத்தியக்காரனாக அலைந்து இன்றுதான் தொலைபேசி மூலம் செய்தியினை உண்மையென உறுதிப்படுத்திக்கொண்டேன்.

நான்தான் உன்னை நேசித்தேன். நீ என்னை நேசிக்கவில்லை என்பதனை மட்டும் அறிந்து கொண்டேன். இன்று வரை உன்னை மட்டும் மனதில் வைத்து உண்மையாகப் பூஜித்த எனக்கு உன்னை வேறு ஒருவனின் மனைவியாகக் கண்ட பின் உயிரோடு இருக்கும் சக்தி இல்லை.

நான் இப்போது இறைவனிடம் வேண்டுவதெல்லாம் நான் இறக்கும் வரை உன்னைக் கண்ணால் கூட காணக்கூடாது என்பதைத்தான். இனிமேல் நீ இருக்கும் ஊர் மண்ணில் கூட என் பாதம் சத்தியமாகப் படாது. நான் எங்கிருந்தாலும் உனது நல் வாழ்வுக்காகப் பிரார்த்தித்துக்கொண்டே இருப்பேன். உனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கும் அதே தினத்தில் அதே நேரத்தில் இந்த ரதனும் எங்கோ ஓரிடத்தில் ஒரு ஏழைக்கு மாலை சூடிக் கொண்டிருப்பான் என்பது மட்டும் உறுதி."

இங்கே

ரதன்.

வாசித்து முடிக்கு முன்பே சாந்திக்கு கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது. கடிதம் மிகுந்த கவலையைக் கொடுத்தாலும் ரதனும் திருமணம் செய்யப் போகும் செய்தியினால் ஓரளவு ஆறுதலடைந்தாள் சாந்தி.

நாட்கள் கரைந்து திருமண நாளும் வந்தது. ஊரவர்களால் நிரம்பியிருந்த திருமண வீட்டுக்கு வந்த நடராஜா தருவதாகக் கூறிய ஒரு இலட்சம் ரூபாவையும் தந்தால்தான் மகனைத் தாலி கட்ட விடுவேன் என்று உறுதியாகக் கூறி அடம்பிடித்தார்.

கிடைக்க இருந்த பென்சன் பணம் அடுத்த வாரம் கிடைக்கும். கிடைத்தவுடன் தந்து விடுவேன் என்று கூறி நடராஜாவின் காலில் விழுந்து கெஞ்சினார் சிவஞானம். திருமண வீட்டில் கூடியிருந்த அனைவரும் சமாதானப் படுத்தியும் சிறிதுகூட இரக்கங் காட்டாத நடராஜா மகனை அழைத்துக்கொண்டு வெளியேறி விட்டார்.

பெண்ணிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் திருமணம் நிச்சயித்த அப்பா சிவஞானமும் இறுதி நேரத்திலாவது ரதனைக் காதலிப்பதாகக் கூறாது மறைத்து வாழ்வைப் பாழாக்கிக் கொண்ட மகள் சாந்தியும் எதிர்பாராத இந் நிகழ்ச்சியினால் திகைத்துப் போயினர்.

பெண்ணின் விருப்பத்தைக் கேட்டுத்தான் திருமணம் நிச்சயிக்க வேண்டும் என்ற உண்மையினையும் திருமணம் நிச்சயிக்கப்படும் போதாவது காதலிப்பவனைப் பற்றி மறைக்காமலும் வெட்கப்படாமலும் கூறி விட வேண்டும் என்ற உண்மையினையும் எல்லாம் நடந்து முடிந்ததன் பின்னர் உணர்ந்து கொண்ட அப்பாவும் மகளும் கதறி அழுது கொண்டிருந்தனர்.

# கடலோர கனவுகள்

அ.றஜீசன்

சிறுகதை

"எங்களை வெட்டிப் போடுவதால் அவர்களுக்கு ஈழம் கிடைக்குமா என்று தெரியவில்லை"



தெரியும்.

ஒவ்வொரு அலையும் எனக்குத் தெரியும்.

இத்தின மணிக்கு இத்தனை அலை வரும் என்றும் தெரியும்.

கடல் எங்களுக்கு சொந்தம்

கடலுக்கு நாங்கள் சொந்தம்.

இது கொந்தளித்தோ அல்லது காற்று பலமாக வீசியோ இதற்குள் நாம் போய் சாக நேரிடலாம் என்றும் தெரியும்.

தெரிந்து ஒன்றும் செய்வதற்கில்லை; செய்ய வழியில்லை.

எம் குடிசையைவிட்டு எம்மால் நகர முடியவில்லை. நகர இடமில்லை. இடம் கட்டி தருவார்கள் யாரும் இல்லை. கடலையே வணங்கி, கடலையே நம்பி, அதனுடனேயே போராடி, அதற்குள்ளேயே உழைப்புத்தேடி, அதனுள்ளேயே அமிழ்ந்து போகின்ற ஜீவிதம். கடல்தான் எமக்குத் தெய்வம், காலன் தோழன், எதிரி.... ஆனால் எமக்கு கடல் மட்டுமல்ல காலன். அருகிலேயே எம் குடிசைக்கு அருகிலேயே போடப்பட்டிருக்கும் தண்டவாளங்கள்கூட காலன்தான்; எதிரிதான். என் பிள்ளைகள் ஐந்துபேரையும் நான் இரயில் தண்டவாளம் அருகேபோக விடாது; என் மனைவியும் நானும் பட்ட கஷ்டம் எமக்குத்தான் தெரியும்.

என் சின்னக் குழந்தை நிசங்க நேற்றிரவு தவழ்ந்துபோய் குடிசைக்கு ஆறு அடிக்கு முன்னாலிருக்கும் ரயில் தண்டவாளங்களில் உருள... ஓடிப்போய் தூக்கி, தூக்கியபடியே கதறி அன்றிரவு நானும் மனைவி சியாமனியும் உறங்காமல் அழுதுகொண்டு இருந்ததை நினைக்க இப்பவும் கண் கலங்குகிறது. என்ன செய்வது ஒவ்வொரு தரமும் எலக்ஷன் வந்து போகுது. வருகிற யாரும் கடலோர குடிசைகள் பக்கம் தம் பார்வையை திருப்புவது இல்லை.

கும்மிருட்டுக்குள் இருந்துகொண்டு யோசித்தவண்ணம் இருந்தேன். சின்ன விடிவிளக்குக்கூட எரிய வைக்கமுடியாமல் காற்று தடுத்துவிடும். இரவில் எழும்பி சின்னவன் நிசங்க அழும்போது மனது ஊமையாக முனகுவது தவிர்க்க முடியாமல் இருக்கும்.

நாளை இரவு மீன்பிடிக்கப் போக வேணும். சிலாபம் வரைக்கும் போய் மீன் பிடிக்கப் போகணும். முந்தி என்றால் மன்னார்வரை போகலாம். இப்ப 'அவங்கள்' எங்கள மாதிரி சிலரைப் பிடித்துக்கொண்டு போய் வெட்டின பிறகு அப்படி போவது இல்லை. 'எங்களை வெட்டிப்போடுவதால் அவர்களுக்கு ஈழம் கிடைக்குமா' என தெரியவில்லை.

ஒரு இரவு மெயில் ரயில் தடார், தடார் எனும் கொடூர ஓசையுடன் கடந்து போனது. இதன் கர்ணகடூர ஓசை பழகிவிட்ட தென்றாலும் இது எமக்கு பிடிக்காத ஒலியாகத்தான் இருந்துவருகின்றது. என் நினைவுகள் எங்கோ எல்லாம் சுற்றி இறுதியில் நித்திரைக்கு செல்கையில் வெளியே விடியத் தொடங்கி இருந்தது. பேருக்கு சிறிது தூங்கிவிட்டு அன்றைய வேலைக்கு தயாரானேன். சியாமனி எழுந்து நிசங்கவிற்கு பால்கொடுத்துக்கொண்டு இருந்தாள். வற்றி வரண்ட மார்புகள், கண்ணுக்குள் புகுந்து நெஞ்சுக்குள் வதைத்தது.

வதை, கவலை, கையாலாகாத்தனம் எல்லாம் ஒன்று சேர்ந்து வெறியாக எனக்குள் கிளர்ந்தது. உழைக்கவேண்டும், பேயாய், நாயாய் உழைக்கவேண்டும். இன்றிரவு வள்ளத்தில் நடுக்கடலுக்குப்போய் எப்படி யாவது நிறைய மீன் பிடிக்கவேண்டும். பிடித்து அதைவித்து நிறைய காசு எடுக்க வேணும், எடுத்து இந்த குடிசையைவிட்டு இன்னுமொரு இடத்தில் புதுசாக, பாதுகாப்பாக இன்னொரு குடிசை கட்டி...

கடற்கரையோரமாக பார்க்கையில் மூக்கைப் பொத்திக்கொண்டு இருவர் எம் குடிசையைக் கடந்து போவதைப் பார்க்க எரிச்சல் வந்தது. எமக்கு இந்த நாற்றம்தான் சோறு போடுது என்று இவர்களுக்கு எங்கே தெரியப்போகுது? ச்சீய்...என்ன வாழ்க்கை... இதை எப்படியாவது மாற்ற வேண்டும். புத்தனே இன்றிரவு மீன்பிடிபட வேண்டும். குடிசை மாறவேண்டும்.

இரவு வந்தது. எமது வள்ளம் இந்துமகா சமுத்திரத்தின் நடுவில் மிதந்துகொண்டு இருந்தது. சுற்றிவர கும்மிருட்டு; அந்த இருட்டு பழக்கமாகியதொன்றாக இருக்க அது கதை பேசியது; கடல் காற்று தந்த குளிர் இதமாக இருந்தது. உடலில் காலையில் இருந்து தங்கிய வெறி உழைப்பை அதிகமாக்கியது. உழைப்பு அதிகமாக எக்கச்சக்கமாக மீன்பிடிபட்டது. சந்தோஷம்... மகா சந்தோஷம் என்னுடன் கூடவந்த பதின்மூன்று பேர்களுக்கும் சந்தோஷம். நிறைய மீன் நிறைய காசுவரும். குடிசை மாறவேண்டும். இப்படியே ஒவ்வொரு நாளும் மீன்பிடிபடவேண்டும்... புத்தனே... அதைக்கொண்டு பிள்ளைகளை படிப்பிக்க வேண்டும். டொக்டராக... எஞ்சினியராக... என்னைப்போன்ற பிழைப்புக் கெட்ட வேலையை பிள்ளைகள் செய்யக் கூடாது... புத்தனே... சந்தோஷத்தில் எல்லோருக்கும் பாட்டு வந்தது. பாடினோம் எல்லோருக்கும் ஒரே மாதிரி பிரச்சனைகள்; ஒரே மாதிரி எண்ணங்கள்.

மெதுவாக காலை புலர, வள்ளத்துடன் நாங்கள் கரைக்கு வந்தோம். மீன்களை மொத்த வியாபாரிக்கு கொடுத்து காசு வாங்கி பிரித்து குடிசை நோக்கி நகர்ந்தேன். நெருங்க நெருங்க அதற்கு முன் பெரிய தொரு கூட்டம் நிற்பது தெரிய மனதுள் இலேசாக ஒரு பய அதிர்வு எழுந்தது.

ஓடிச்சென்றேன். அரக்கபரக்க வீட்டினுள் உள்சென்று பார்க்க...குவியலாக ஏதோ பொட்டலமாக கட்டி வெள்ளைத் துணியால் மூடி இருந்தது.

ஐயோ... பியசேன... உன் பொஞ் சாதியும் சின்னக் குழந்தை நிசங்கவும்... செத்துட்டாங்கடா...யோசேப்பு அண்ணையின் பொஞ்சாதி வயித்திலும் வாயிலும் அடித்து கதறினாள். அவள் சொன்னது காதில் விழுந்து மூளைக்குள் ஏறாமல்... ஏறவிடவிரும்பாமல்..."அடேய் பியசேன... பாழாய்போன என்ஜின் டைவர் (Driver) வாயில் மண்விழ... உன் குழந்தை நிசங்க தவழ்ந்துபோய் ரயில் தண்டவாளத்தில் விளையாட தூர ரயில் வர அதுப்பார்த்துட்டு சியாமளி ஓடிப்போய் உன் பிள்ளையைத் தூக்க முயல...ஐயோ அந்த ரயிலு அப்படி அடிச்சுக்கொண்.... மிகுதி வாக்கியம் என் காதில் விழுமுன் நான் மயங்கி விழுகின்றேன். கையிலிருந்த காசுதாள்கள் காற்றில் பறக்க ஆரம்பித்தன. ●

---

# பொய் முகம்

ஷர்மிளா இஸ்மாயில்

திடீர் 'பிரேக்' போட்டு பஸ் நிற்க, ஓடி வந்து ஏறிக்கொண்ட மனிதர் ரகுவை வெகுவாகக் கவர்ந்தார். நேர்த்தியாக 'டிரஸ்' பண்ணியிருந்த விதம், பாதி வழுக்கையை அதிசிரமமாய் மறைத்த பிரயத்தனம். கோல்ட் பிரேம் கண்ணாடி, ஒபிஸ் பேக் சகிதம் பெரியதோர் நிறுவன உரிமையாளர் (அப்படி யென்றால் பஸ்ஸில் ஏன் போகிறார்?) இல்லை பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்பதாக பலவிதமாய்க் கற்பனை பண்ணினான் ரகு.

நெரிசலில் இடிபட்டு ஒருவாறாக தடுமாறிக்கொண்டு நின்றார் அந்த மனிதர். ரகுவுக்கு அது பாவமாய்த் தெரிந்தது. அப்பாவை மனம் நினைத்துப் பார்த்தது. "பாவம்" நினைத்ததை உதட்டினால் முணுமுணுத்தபடி அவரைத் தட்டி "இருங்க சேர்" தனது இருக்கையை தியாகம் பண்ணினான்.

புன்னகைத்தபடி உட்கார்ந்து கொண்டார். ரகுவுக்குள் திருப்தி நிறைந்தது. தொடர்ந்த நாட்களில் அவருடன் பிரயாணித்த ரகுவும் அவரும் சினேகிதம் பிடித்தனர். அவன் நினைத்தது சரி. ஓர் நிறுவன அதிகாரி. பேச்சிலும் செயலிலும் கண்ணியமும் கட்டுப்பாடும் தொனித்தது. மனதுக்குள் மரியாதை செய்தான் ரகு. "நல்ல மனிதர்" வியந்தான். நாட்கள் நகர, பழக்கம் முற்ற இயல்பாக பேசிக்கொள்ள முடிந்தது அவனால்.

நிறைய 'அட்வைஸ்' பண்ணுவார். அனுபவங்கள் பற்றி அலசுவார். ரகு ஆர்வமாய்க் கேட்பான். "ரகு தம்பி, நீங்க என் மகன் வயசிருப்பீங்க. ஆனாலும் உங்கள என் நண்பனாத்தான் நெனக்கிறேன். அந்தளவுக்கு என் மனசில இடம் பிடிச்சிட்டீங்க." என்ற பீடிகையோடு ஒருநாள் கதையை ஆரம்பித்தவர் தொடர்ந்தார். வழுக்கையை மறைத்த ஒற்றை முடிக்கற்றை நெற்றியில் விழுந்தது. அவசரமாய் சரிசெய்து கொண்டார். ரகு பார்த்தவாறிருந்தான்.

"என்னோட வைஃப் இருக்காங்களே ரகு தம்பி, அவங்களாலே எனக்கு என் லைஃப் வெறுத்துப்போச்சு." ரகுவுக்குப் புரியவில்லை. "என்ன சொல்றீங்க சேர்?" சிறிய அதிர்ச்சியுடன் கேட்டான். "இதுவரை தான் சந்தித்தவர்களுள் எவ்வித பெரிய பிரச்சனைகளும் தொல்லைகளும் இல்லாத ஒரு அற்புத மனிதராகக் கருதியவர் இப்படி பேசுகிறாரே?" மனதுக்குள் பேசிக் கொண்டான்.

"என்மேல என் வைஃப்புக்கு நம்பிக்கை இல்லை. எதுக்கெடுத்தாலும் சந்தேகப்படுவா. ஒரு அஞ்சு நிமிஷம் லேட்டா போனேன்னு வையுங்க. அன்னைக்கு வீட்ல ஒரே ரகளை. நான் யார் யாரு கூடவோ அதாவது பெண்கள்கூட ஊர் சுத்தரதா கற்பனை பண்ணி ஒரே சண்டை பிடிப்பா. நிம்மதியே கிடையாது. என்ன செய்யறது எல்லாம் என் விதி."

ரகு ஏராளமாய் அதிர்ந்து வியந்தான். இப்படியான மனிதருக்கு இந்த சோதனையா? அதுவும் இந்த வயசில்?" ஆண்டவனே, எதற்கெடுத்தாலும் சந்தேகப் பிராணிகள்னு ஆண்களைத்தான் சொல்வாங்க. இப்போ பெண்களும் அப்படித்தான்னு சொல்றது சரிதான். என்றாலும் இவர் பாவம். இத்தனை பிரச்சனையை எப்படித் தாங்குகிறாரோ? வெளியில் பார்த்தால் அப்படித் தெரியலை. ரகு யோசித்துக்கொண்டிருக்க, அவன் தோளில் கைவைத்தார்.

"தம்பி ரகு. என்ன என் வீட்டு பிரச்சனை சொல்லி உங்களை குழப்பிட்டேனோ?" ஒருவாறு சமாளித்தான் ரகு. அவரது மனைவிமீது ரகுவுக்கு கோபம் கோபமாய் வந்தது. இத்தனை நல்ல மனிதரை இப்படி கீழ்த்தரமாக நினைக்கிறாளே என எண்ணம் வந்து எரிச்சல்பட வைத்தது.

பனிமூடிய மலையகக் காலை வேளை. பஸ்ஸுக்குள் ரகு. அவனது மரியாதைக்குரிய மனிதர் முன்னிரண்டு இருக்கைகளைத் தாண்டி முன்னால் உட்கார்ந்திருந்தார். இன்று ரகுவை அவர் காணவில்லை. வழமையாக நேரத்துடன் வருபவன் இன்று கொஞ்சம் லேட் அவசரமாக ஓடி வந்து சனத்தோடு சனமாய் ஏறி நெருக்கத்துடன் பின்புறம் தள்ளுப்பட்டுப்போனான். நிறைந்து வழிந்த சனக்கூட்டத்துடன் பயணித்தது பஸ்வண்டி.

அப்போதுதான் ரகு கவனித்தான். அவர் பக்கத்தில் ஓர் இளம் பெண். அழகாய்த் தெரிந்தாள். அவள் இருக்கையில் சற்று சிரமப்படுவது புரிந்தது. ரகு பார்த்துக்கொண்டிருந்தான். 'சட்'டென அவள் எழுந்தாள். 'இறங்கப் போகிறாள் போல' ரகு நினைத்தான். இல்லை. அவள் எழுந்து நின்றுகொண்டாள். ரகுவுக்குள் ஆச்சரியம் பூத்தது ஏன்? சின்னப் பையன் ஒருவன் அவள் இருக்கையை ஆக்கிரமித் தான். இதர பயணிகள் முகத்திலும் ஆச்சரியம் பூத்தது. மேலும் 10 நிமிட பிரயாணம். ரகு யோசித்தவாறே பயணித்தான். "சீ இந்த காலத்து பையன்களைவிட கிழவன்கள் ரொம்ப மோசம். கேவலம், புதைகுழிக்கு போகிற வயசிலும் பொண்ணாசை விடல. நாசமாய்ப் போக அந்த கிழட்டு குரங்கு. என்னமாய் விஷமம் பண்ணிச்சு நேத்து."

அடுத்த நாள் பஸ் பிரயாணத்தில்–காதில் மேற்கண்ட சொற்கள் வந்து விழ ரகு, அதிர்ந்து போனான். அதே பெண். இன்னுமொரு பெண்ணிடம் ஆவேஷமாய் பேசிக்கொண்டிருந்தாள். முன்னிருக்கையில் அந்தப் பெண்கள். பின் இருக்கையில் ரகு. திரும்பி பின்னால் பார்த்தான்.

அங்கு அவனது 'மரியாதைக்குரிய மா மனிதர்' வழமைபோல நேர்த்தியாக முகத்தில் கண்ணியம் பிரதிபலிக்க ஒரு ஜன்னலோர இருக்கையில் இன்றும்–

"யாருடி அது?" முன் இருக்கை கேட்க அந்தப் பெண் அங்குமிங்கும் தேடி இறுதியில் திரும்பி அவரைக்காட்டி முகம் சுளித்தாள். "உனக்குத் தெரியாதா? அந்த சபல கேஷ். ஒபிஸ் செகற்றி கீதாகூட நம்மகிட்ட அந்தாளப் பத்தியும் சபல புத்தியப் பத்தியும் சொல்லி சிரிச்சாளே, நினைவிருக்கா உனக்கு?"

ரகுவுக்கு இப்போது மலையகக் காலை குளிர் தெரியவில்லை. மனதும் உடலும் வியர்த்த உணர்வுடன் இருக்கையில் சாய்ந்துகொண்டான். பஸ் ஓடிக் கொண்டிருந்தது. ■



---


முரசிற்கு வரும் ஆக்கங்கள்-கதை, கவிதைப்போட்டி, பேனா நண்பர், குறுக்பெழுத்துப் போட்டி, புகார் பெட்டி, தேன் கிண்ணம் எல்லாவற்றையும் கீழ்வரும் த.பெ.இலக்கத்திற்கு மட்டுமே அனுப்பிவைக்கவும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

Thinamurasu Varamalar
P.O.BOX. NO-1772
Colombo.


---

# ஆசை தீர்ந்ததா?

ம்டவளை கலீல்



கு.....கு...ரு....கூ....!

விடிந்துவிட்டது என சேவல் பறை சாற்றியது. பிரகாஷ் கொட்டாவிட்டபடி, கண்களைக் கசக்கியவாறே துயில் எழுந்தான்.

பள்ளி அறையில் பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த, தனது அன்பு மனைவியைப் பார்த்து,

"ஏய் தூங்கினது போதும், கெட் அப் டாலிங்" என அவளது கூந்தலைத் தடவியவாறு கனிவாகச் சொன்னான் பிரகாஷ்.

வெள்ளை நைட்டியுடன் தூங்கிக் கொண்டிருந்த சீதா, சோம்பல் முறித்தபடி "ஹாய் குட்மோனிங் டாலிங்" என்றவாறே அவனைக் கட்டி அணைத்துக்கொண்டு முத்த மழை பொழிந்தாள்.

முத்த மழையின் தாக்கத்தால், இன்பக் கடலில் மிதந்தான் பிரகாஷ்.

"என்னங்க... இரவு எப்படி? நல்லா இருந்ததா?" கொஞ்சும் குரலில் குழைந்தாள் சீதா.

இன்ப சிலிர்ப்பில், அவன் முகம், உணர்ச்சிகளின் சங்கமம் ஆயிற்று.

"ஆசை தீரத்தந்தேனே! நல்லமா?" என கண்களைச் சுழற்றி, உதட்டை கவர்ச்சி யாகத் திறந்துகேட்டாள்.

"ஆசை தீரவில்லை. இன்றைக்கும் வேணும்" என பிரகாஷ் ஆவலுடன் சொன்னான்.

"ஹா...! அப்படியா? இப்பவே தாரேன். பல்துலக்கி, முகம் கழுவி விட்டு வாருங்கள்" என சீதா ஆர்வத்துடன் கூறியதும்...,

பிரகாஷ் சிட்டுக்குருவிபோல் பறந்து சென்று பல் துலக்கி, முகம் கழுவிவிட்டு வந்தான்.

"என்ன ரெடியா?" சீதாவைப்பார்த்து அன்பாய் அடம்பிடித்தான்.

"என்னங்க ஆக்கப் பொறுத்தவருக்கு, ஆறப் பொறுக்க முடியாதா?" என குறும்பாகக் கேட்டுக் கவர்ச்சியாகச் சிரித்தாள் சீதா.

ஆவி பறக்க...

சுடச்சுட உடனடியாக தயார் செய்த தோசையை அவள் அன்பாக ஊட்டிவிட.....,

சாப்பாட்டுப் பிரியரான பிரகாஷ், மிக சந்தோஷத்துடன் ஆசை தீர ஒருபிடி பிடித்தான். ●

# இணை சொல்ல ♥♥ எதுவுமில்லை





## இலக்கிய நயம்

**தருவது ரசிகன்**

குளிர்தரு சோலை. அங்கே தனித்திருந்தனர் காதலர் இருவர். நேரமோர் மாலை.

"எனக்கொரு சந்தேகம்"

என்றான் காளை.

"சந்தேகமா? என்ன?"

என்று கேட்டாள் பூஞ்சோலை போல் இருந்த கோதை.

"குளிராக இருக்கிறதே இந்த மாலை. அது கண்ணுக்குத் தெரியும் இந்த சோலையின் வரமா? அல்லது சேலைக்குள் சிறையிருக்கும் கோல எழில் சோலைகளின் வரமா?"

வெட்கத்தின் விதை விழுந்தது அவள் நெஞ்சில். அது விருட்சமாகித் தெரிந்தது அவள் முகத்தில்.

அவன் விடவில்லை. காதலிலே தோய்த்தெடுத்த வார்த்தை அம்புகளை தொடுத்தான்.

"வெல்லக் கட்டி என்றால் முன்பெல்லாம் பிடிக்கும் எனக்கு. இப்போதெல்லாம் அதன் சுவை அத்தனை இனிப்பில்லை என்று தெரிகிறது எனக்கு. ஏன் என்றுதான் தெரியுமோ உனக்கு?"

மருதாணி பூசிய விரல் நகங்களை விழிகளால் ஆராய்ந்துகொண்டே சித்திர இதழ்கள் சிறிதே திறந்தன.

"தெரியாது!"

"காதல் எனும் களத்தில் உன்மத்தம் கொள்ளவைக்கும் உன் முத்தம்! வெல்லத்தின் சுவை தோற்கும். அதையறியும் என் சித்தம்!"

பொய்யாக முறைத்தது அழகுப் பொய்கை.

"உங்களுக்கு வேறு வேலை இல்லை."

நகைத்தான் காளை.

"என்ன சிரிப்பு?"

மீண்டும் ஒரு சுத்தமான பொய் முறைப்பு.

"சிற்பிக்குத்தான் வேலை இல்லை. நான் சிற்பியல்ல. சிலை ஆராய்ச்சியாளன். எனவே எனக்கு வேலை இருக்கிறது."

புரியாமல் பார்த்தாள் பூவை.

"புரியவில்லையா? எந்த சிற்பிக்கும் வேலை வைக்காமல் படைத்தவனே சிறப்பாக செதுக்கி தந்துவிட்ட விலையில்லா சிலை நீ! கலை வண்ணப் புதிர் அறிய காத்திருக்கும் ஆராய்ச்சியாளன் நான்."

விஷமச் சிரிப்பை உதடுகளில் பரவ விட்டான்.

அவள் கேட்டாள்.

"இந்த ஆராய்ச்சியாளனுக்கு நாகரிகம் தெரியுமல்லவா?"

"தெரியும். ஏன் இந்த வினா?"

"ஆராய்ச்சிக்கும் அனுமதி வேண்டுமல்லவா? அனுமதி இல்லாமல் ஆராய்வது முறையல்லவே!"

"சிற்பத்தை ஆராய அனுமதி தேவையில்லை. கலைமதி இருந்தால் போதும்."

"தங்களுக்கு இருக்கிறதாக்கும்."

"சற்று அதிகமாகவே இருக்கிறது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்."

"அப்படியானால் தாங்கள் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல."

விழிகளில் குறும்பு தெரிந்தது. அவனை வாதத்தால் வீழ்த்தி விட்ட பெருமிதமும் தெரிந்தது.

"வேறு எந்த இடம். ஓ.... புரிகிறது..... புரிகிறது."

"என்ன புரிகிறது?"

"மலர் சோலையல்ல, மஞ்சமிருக்கும் மதன அறைதான் பொருத்தமான இடம் என்கிறாய்."

"எண்ணம்தான்! நான் சொன்னது நீங்கள் இருக்க வேண்டியது சிற்பக் கூடத்தில் என்று."

அவன் நகைத்தான். மலர் ஒன்று வந்து அவன் மடியில் விழுந்தது.

"இந்த மலர் தேடி வருகிறது மடிக்கு. தேவையான மலர் மட்டும் சிக்க மறுக்கிறது பிடிக்கு! விசித்திரம்தான்! என்ன சொன்னாய் சிற்பக் கூடம் செல்ல வேண்டும் என்றா சொன்னாய்?"

"ஆமாம்."

"அடி பைத்தியக்காரி. நடமாடும் சிற்பம் இங்கிருக்க, நட்டகல் போல் இருக்கும் சிற்பங்கள் எனக்கெதற்கு? அதுமட்டுமல்ல பெண்ணே. இன்னொரு காரணமும் உண்டு என் கண்ணே!"

"அது என்ன காரணமாம்?"

"அப்படிக் கேள் சொல்கிறேன். நான் ஆராய்ச்சியில் மன்னனல்ல. மாணவன்!"

"ஓஹோ.... அதனால்......?"

"கற் சிற்பங்கள் கற்றுத்தராத கலைகளை கள் வடியும் இதழ் கொண்டு பேசும் சிற்பம் நீதான் கற்றுத்தர முடியும். அசையாத சிற்பங்கள் அவிழ்க்காத புதிர்களை என்னோடு இசைவான மனம் கொண்ட நீதானே விளக்கமுடியும்!"

"நான் ஒன்றும் மேதையல்ல!"

"நிறைகுடம் தளம்பாது. அழகின் உறைவிடமும் அப்படித்தான்! கற்றுக்குட்டிகள் கொக்கரிப்பார்கள். கற்றுத்தரத் தெரிந்தவர்கள் நாவடக்கம் காத்துக் கொள்வார்கள்! எனக்கு இப்போது என்ன தோன்றுகிறது தெரியுமோ?"

அவன் முகத்தை பார்க்க வெட்கப்பட்டு அவன் பரந்த மார்பை பார்த்துக்கொண்டு கேட்டாள்,

"என்ன தோன்றுகிறது?"

"நாவடக்கம் காத்துநிற்கும் இந்த நற்காரிகையை பாராட்ட வேண்டும்போல தோன்றுகிறது."

"பாராட்டு ஒன்றும் தேவையில்லை."

"தாலாட்டு?"

"நான் ஒன்றும் குழந்தையல்ல."

"குழந்தையும் ஒன்றுதான். கொஞ்சும் கிளியும் ஒன்றுதான்!"

உடனே அவள் தன் இதழ்கள் குவித்து சூள் கொட்டினாள்.

"மெச்சுகிறாய்.... மெச்சு... மெச்சு!"

"அறிவின் சிகரம் ஐயா தாங்கள்."

"நல்லது. சிந்தித்து சிந்தித்து என் மூளை சூடாகிவிட்டது. இப்போது தேவைப் படுகிறது ஓய்வு!"

"அப்பாடா...... தாராளமாக ஓய்வெடுக்கலாம் தாங்கள்!"

"இந்த அறிவின் சிகரம் ஓய்வெடுக்க வேண்டுமானால் அதற்கு ஒரேயொரு இடம் அந்த அழகுச் சிகரம். அங்குதான் சாய்ந்து கொள்ளும் என் தலை."

அவன் விழிகள் சுட்டிக்காட்டிய இடம் எதுவென்று தெரிந்து அவள் விழிகளில் வியாபித்தது வெட்கம்.

அவன் சாய்ந்தான் அவள் பக்கம். குன்றென நிமிர்ந்திருந்த இரு அழகுகள் மத்தியில் குடியேறியது காளையின் முகம். வெட்கம் தடுத்தாலும், வேண்டும்தான் அவன் ஆராய்ச்சி அவளுக்கும்.

அவன் முதுகின் மத்தியிலே கரம்வைத்து வருடியபடி அவள் கேட்டாள்,

"இதற்குத்தானே இதுவரை உங்கள் புகழ்ச்சியெல்லாம்."

அதற்கு அவன் சொன்னான்,

"தேன் மழையில் நனைவது என் தேவை என்பது உண்மையடி. ஆனால் தேவதை உன் போதை தரும் அழகினை நான் புகழ்ந்ததிலே பொய்யில்லை."

"ம்....ம்.... நனைந்தது போதும்."

"பொறு... நழுவி விழுந்ததடி என் இதயம். அதனைத் தேடுகிறேன் சற்றுப் பொறு."

அவள் நெளிந்தாள் கூச்சத்தால்.

அவன் செயலை ரசித்தாள் தன் உள்ளத்தால்.

இனிப் பொறுக்க முடியாது என்று ணர்ந்தாள். தானும் அவனோடு கலந்தாள்.

ஆராய்ச்சியில் இறங்கியவன் கலங்கிப் போனான்.

ஏன் கலக்கம்? ஆராய்ந்து அறிந்தவற்றை எவற்றோடு ஒப்பிட்டுச் சொல்வது என்றதினால் வந்த கலக்கம்.

இந்தக் கலக்கத்தைத் தான் பாவேந்தர் பாரதிதாசன் கவிதை ஒன்றிலும் காண்கிறோம்.

**"வஞ்சிக்கொடி போல இடை**
**அஞ்சத்தகு மாறுளது!**
**நஞ்சுக்கிணை யோ அலது**
**கெண்டைக்கிணை யோ, கரிய**
**அம்புக்கிணை யோ, உலவு**
**வண்டுக்கிணை யோ, விழிகள்**
**மங்கைக்கிணை ஏதுலகில்**
**அங்கைக்கிணை யோ மலரும்?"**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-86

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| | ■ | 5 | | | | |
| | ■ | 6 | | ■ | 7 | |
| 8 | | | ■ | 9 | | ■ |
| 10 | | ■ | ■ | | ■ | 11 |
| | ■ | 12 | | | | |
| ■ | 13 | | | | ■ | |

### இடமிருந்து வலம்

1. வண்டி ஓட சில்லு வேண்டும்; சில்லுக்கு இது வேண்டும்.
5. கல்லில் இது ஒரு ரகம்.
6. தவறுக்கு இது எதிரி.
7. கல்லால் அடித்தால் இது உடலுக்கு வரும். சொல்லால் அடித்தால் இது உள்ளத்திற்கு வரும்.
8. இனிப்புப் பிரியர்கள் இதை விரும்ப மாட்டார்கள்.
10. மாசியில் இது மூசிப் பெய்யும் என்பார்கள்.
12. தற்போது இவற்றிற்கு ஓய்வு கிடைத்திருக்கிறது.
13. நற்காரியம் செய்தால் இது கிடைக்கும்.

### மேலிருந்து கீழ்

1. அமராவதியின் காதலன்.
2. சேர்க்ஸில் மிருகங்களும் இதனைச் செய்வதுண்டு.
3. தபாலுக்கு இது அவசியம்.
4. இது இந்தியாவில் இருக்கிறது.
9. மனிதர்களுக்குள் இது கூடாது என்பார்கள்.
11. நிலவை இது மறைப்பதுண்டு.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 04.02.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-86
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-84ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 எ | 2 ரி | ம | லை | ■ | 3 உ | ■ |
| து | ஷி | ■ | 4 தா | ம | த | ம் |
| கை | ■ | 5 சு | ■ | 6 த | வி | ல் |
| ■ | 7 வி | ர | த | ம் | ■ | ■ |
| 8 வி | லா | ங் | கு | ■ | 9 ந | கை |
| ழு | ■ | க | ■ | 10 வா | த் | து |
| 11 து | ரு | ம் | பு | ■ | தை | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.84இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. கே. விஜய் ஆனந்த் கொழும்பு-13.
2. எஸ்.ஏ.அமீன் களுத்துறை.
3. செல்வி நிலக்ஷி எல்விரா மட்டக்களப்பு.
4. சக்கீலா வஹாப்தீன் கல்பிட்டி.
5. ஆர். சாந்தரூபன் கண்டி.
6. ஆர். கமலினி வாழைச்சேனை.
7. திருமதி. நிஸாடீன் திருகோணமலை.
8. இஸட். பாசில் முகமட் மாத்தளை.
9. க. முத்து சங்கரன் பண்டாரவளை.
10. திருமதி. ராஜி விஜயகுமார் வத்தளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ்



### அம்புரோஸ் வருகிறார் ஆட!

நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியில், வேகப்பந்து வீச்சாளரான கேட்லி அம்புரோஸ் இடம் பெற்றுள்ளார். தோள்பட்டை வலி காரணமாக அவதிப்பட்டு வந்த அம்புரோஸ் சமீபத்தில்இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்த மேற்கிந்திய அணியில் இடம்பெறாமல் இருந்தார். தனது அணிக்காக மீண்டும் விளையாடப் போவதுபற்றி அவர் கூறுகையில்,

"மூன்றுமாத இடைவெளிக்குப் பின்னர் விளையாட வந்தாலும், நான் வலுவான உடல் நிலையில் இருப்பதாக உணர்கிறேன். முன்பு நான் விளையாடியதுபோல் இப்போதும் நல்ல முறையில் விளையாட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது," என்கிறார் அம்புரோஸ்.

பதினைந்துபேர் அடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விபரம் இதோ: கொட்னி வோல்ஷ் (தலைவர்), ஜிம்மி அடம்ஸ், கேட்லி அம்புரோஸ், கெய்த் ஆர்தட்டன், வின்ஸ்டன் பென்ஜமின், ஷெர்வின் கெம்பல், சந்தர்போல், அன்டர்சன் கம்மின்ஸ், ராஜேந்திர தன்ராஜ், ரோலன்ட் ஹோல்டர், கார்ல் ஹூப்பர், பிரையன் லாரா, ஜூனியர் மூரே, ஸ்டுவர்ட் வில்லியம்ஸ்.

### ஜெயிப்பாரா ஸ்டெபி கிராப்?

பான் பசிபிக் ஓப்பன் டென்னிஸ் போட்டி இம்மாதம் 31ம் திகதிமுதல் பெப்ரவரி 5ம் திகதிவரை டோக்கியோவில் நடைபெற இருக்கிறது. உலகின் நம்பர்வன் வீராங்கனையாகத் திகழும் ஸ்டெபி கிராப்



பங்கேற்பதன் மூலம் மீண்டும் இந்தப் பட்டத்தைத் தக்க வைக்க முயலுவார். உலக டென்னிஸ் வீராங்கனைகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை வகிக்கும் கொன்ஜிதா மார்ட்டினஸ் முதன் முறையாக இந்தப் போட்டியில் பங்கேற்கிறார்.

மேலும் இப்போட்டியில் மேரி பியர்ஸ் (பிரான்ஸ்) லிண்ட்ரே டேவன்போட் (அமெரிக்கா), கிமிகோடேட்(ஜப்பான்) ஆகிய முன்னணி வீராங்கனைகள் இதில் கலந்து கொள்கின்றனர். இந்தப் போட்டியில் மொத்தம் 28 பேர் பங்கேற்கின்றனர்.

### இந்திய வீரர்களின் சம்பாத்தியம்

இந்திய கிரிக்கெட் அணி, மேற்கிந்தியத் தீவுகள் அணியினருடன் இதுவரை மோதிய போட்டிகளின் மூலமும், மும்முனைப் போட்டிகளின் மூலமும் (நவம்பர் வரை) சுமார் பதினொரு லட்சம்வரை வெகுமதியாகப் பெற்றுள்ளது.

இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டென்டுல்கர் 65,000 பெற்று முதலிடத்திலும், அஜய்ஜடேஜா 55,000 ரூபாய் பெற்று இரண்டாவது இடத்திலும், 35,000ரூபாய் பெற்று அசாருதீன் மூன்றாவதாகவும், 30,000 ரூபாய் பெற்று விக்கெட் கீப்பர் மொங்கியா நான்காம் இடத்திலும் உள்ளனர்.

இதைவிட 'சன் கிரேஸ் மபத்லால்' விருது திட்டத்தின் கீழ் கிரிக்கெட் வீரர்களுக்கு விருது வழங்கப்படுகிறது. மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான டெஸ்ட் தொடரில் 400க்கும் மேற்பட்ட ஓட்டங்கள் எடுத்தமைக்கு டென்டுல்கர் 46500 ரூபாய் பெற்றார். சன் குரேஸ் மபத்லால் வழங்கிய சிறந்த ஆட்டக்காரருக்கான 8000 ரூபாய் வெகுமதியை மற்றொரு வீரரான ஸ்ரீநாத் பெற்றுள்ளார்.

### 7 வித்தியாசங்கள்

1. கழுதை
2. பனைமரம்
3. பறவை
4. தாமரைப்பூ
5. கோவில் சுவர்
6. கோவில் கலசம்
7. படியின் முகப்பு

# மகாபாரதம்

அங்கம் 65

**இவ்வாரம் (29.01.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** தன்னுடனுணவினை உட்கொள்ளுவதற்கு கண்ணனை அழைத்த போதினில் அவனதை ஏற்காதிருந்ததை கண்ணிய மற்ற செயலெனக் கருதிய துரியோதனனவன் சொல்லொணா சீற்றம் கொண்டவனானான். ஆணவம் என்பதே அவனது பார்வையை மூடி மறைத்திடும் முழுப் போர்வையானதால் நாட்டின் நிலையினை நினைவினில் நிறுத்திடும் மார்க்கம் தவிர்த்தவன் அழிவினை நோக்கியே அஸ்தினாபுரத்தினை அழைத்துச் செல்கிறான்!

-காட்சி தொடக்கம்-

விதுரர் வீட்டில் குந்தி கிருஷ்ணருக்கு உணவு பரிமாறுகிறாள்.

**கிருஷ்:** போதும் அத்தை......!

**குந்தி:** இன்னும் கொஞ்சம் எடுத்துக் கொள்ளேன்!

**கிருஷ்:** இல்லை இல்லை.... இதுவே போதும்.

**குந்தி:** துச்சாதனனவன் மாளிகை தன்னில் விருந்தினனாக நீ இருந்திட வேண்டும் என்பதுதானே துரியோதனின் ஏற்பாடாகும்! அவனுடை சுபாவம் அறிந்தவன் நீயே! ஏனதை மறுத்தாய்? இதனாலேயே நீ தரும் தீர்வின் வழிமுறைகளையும் நிச்சயமாக அவன் மறுத்துரைத்திடுவான்!

**கிருஷ்:** உரியதோர் தீர்வுக்கான வழிகளை அரசரின் அவைதனில் உரைப்பதென் கடனாம். விரும்பினால் ஏற்பர் அல்லா விட்டால் பலனினைப் பகிர்வர்!

**விதுர:** பிதாமகர் பீஷ்மர் போன்ற மாபெரும் வீரர்களனைவரும் தன்னருகிருக்கையில், பாண்டவரெவரும் படையெடுத்தெதிர் போர்முனை ஏகிட மாட்டாரென இவன் கருதுவதும் ஒரு காரணமாகும்.

**கிருஷ்:** விராட நாட்டினில் நடைபெற்ற போரினில் விஜயனே தனிமையில் வெற்றி கண்டனனே!

**விதுர:** தலைமறைவாக இருந்தவேளையில் விராட மன்னவன் உதவி புரிந்ததால் மன்னவன் தன்னைக் காத்திடும் கடமையில் பார்த்தனும் போர்க்களம் புகுந்தனனன்றோ?

**கிருஷ்:** பிதாமகர் பீஷ்மர் போர்முனை வந்தால், அன்னவர்க் கெதிராய் போர்க் கொடி ஏந்தவும் பாண்டவர் இன்று தயார் நிலையுள்ளனர்!

**விதுர:** அதுவே நடப்பது உறுதியுமானால் அஸ்தினாபுரமே அழிந்து போகட்டும்! புதியதோர் புலமது பூக்கட்டுமாங்கே! அமைதித் தீர்வினை அரசவை தன்னில் திணித்திட வேண்டாம். உன் அரும் கருத்தினை உணர்பவராங்கே உறுதுணையற்ற நிலையினிலுள்ளனர்.

**கிருஷ்:** உண்மை தனை நான் உணர்வேன் மகாத்மா! தூதுவனாகவே வந்தவன் தான் நான். எந்தனுக்குரியதோர் கடமை தனை நீயே பூரணமாக முடித்திடாதினி நான் ஏகிட முடியுமா?

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி அரசவை.

**காவலன்:** சுதர்சன சக்கரமேந்திய வீரன் மதுசூதனனாம் கிருஷ்ணன் சபையினை நாடியே வருகிறார்!

**கிருஷ்:** அமைதியின் தூதுவனாக வந்த என் வாழ்த்தும் வணக்கமும் தெரிவிக்கிறேன்.

**திருத:** வாசுதேவனே! வருக வருக! வந்தாசனந்தனில் அமர்ந்தருளுக! எனதரும் தம்பி மைந்தர்கள் ஐவரும் எடுத்துக்கூறிய கருத்தினைத் தருக!

**கிருஷ்:** கங்கையின் மைந்தர் தமக்குமென் வணக்கம். எவருடை கருத்தையும் எடுத்தியம்பிட நான் வந்தவனல்ல. அமைதியெனும் அரிய வழியினை அறிவுறுத்திடும் சொந்தக் கருத்துடன் இங்கு வந்துற்றேன். பெருமைக்குரிய பீஷ்மருடனே அறிவிலும் வலுவிலும் ஈடிணையற்ற அறிஞர்கள் பலரும் நிறைவுறு நாடு இதனைப் போல வேறோர் நாடு உலகினிலில்லை! போர் முனை தானொரு தீர்வெனத் தேர்ந்தால் பாரினில் சிறந்த விப்பெருமகரெல்லாம் சீரது குலைந்து சிதறிப்போவர்! மன்னவ! நீர் நீதியும் நியாயமும் நேர்வழியனைத்தும் நன்கு தெரிந்த நிலையினுள்ளவர்! அமைதியை அணைப்பது ஆபத்தைத் தவிர்த்திடும் அரிய செயலாம். பாரத வம்சம் சீர்கெட்டழிந்தால் மன்னவர் நீரே பெரும் பொறுப்பாக நாளைய உலகம் நிச்சயம் தூற்றும். சூதாட்டத்தில் சூழ்ச்சி புரிந்த சகுனிதனையோ பாரத வம்சத்தின் மருமகளான பாஞ்சாலி தன் துகில் உரிந்திடச் சொன்ன துரியோதனனையோ அன்னவள் சிகையை அலங்கோல மாக்கிய துச்சாதனனையோ வரலாறென்றும் வசைகூறாது. அரியாசனத்தில் அமர்ந்திருந்திட்ட அரசன் தன்னையே உலகம் பழிக்கும். அத்தனை பழியையும் அழித்தெழுதிடும் வல்லமை உள்ளது சமாதானம் என்னும் சாந்தி நிலைக்கே!

**பீஷ்:** போரினை எவரும் விரும்பாதிருந்தால்.....?

**கிருஷ்:** தங்கள் வினாவிலும் சந்தேகமெழுவது தங்களுக்கேற்றதோர் கூற்றும் ஆகா. நிச்சயமற்ற நிலையொன்றதுவே பின்னணியதனில் தோன்றுவதறிகிறேன். கவுரவருடனே பாண்டவர் இணைந்தால் உலகினை என்றுமே தம் அடிப்படுத்துவர். அஸ்தினாபுரத்தின் எல்லைகள் எங்கும் அளவிடமுடியா விஸ்தீரமாக விரிவடைந்திருக்கும். கங்கையின் மைந்தரே மன்னவர்க்கிந்த மகிமையின் நிலையினை எடுத்துரைப்பீரே.... போரென்று வந்தால் அழிவது யாரோ? மன்னவர் தம்பியின் மகிந்தர்கள் போரினில் மாண்டுகிடந்தால் எதிர்த்திசை வீரர்தான் வீழ்ந்து விட்டாரென வாழாதிருந்திட மன்னரால் முடியுமா? சகோதரர் தம்மை ஒன்றாய் இணைத்து வாழ்ந்திட வைப்பதே மன்னவர்க்குரிய அருங்கடனாகும். அன்னவருடைய அன்பினில் திளைத்தே ஐவரும் தானும் வளர்ந்தவர் என்பதை மறுத்திட முடியுமா? இந்திரப் பிரஸ்தம் தன்னையும் அவர்க்கே சொந்தமாக்கினால் சமாதானம் நிலைக்கும்.

**துரி:** இத்தகையதோர் அமைதித்திட்டம் எந்த வகையிலும் ஏற்புடைத்தல்ல. முன்னர் விதித்த முறைப்படியவர்கள் பன்னிரெண்டாண்டுகள் கானகம் ஏகுதல் சாலவும் நன்றே. நாட்டைக் கேட்பது நலந்தராதென்று நான் உரைக்கின்றேன்.

**துரோ:** மன்னவர் மைந்தனே சீற்றம் அடைவது சிறப்பினை அழியா..... அழிவு தனக்கே அதுவழிசமைக்கும்.

**பீஷ்:** கிருஷ்ணன் இங்கு நம் நண்பனாய் வந்தவன் என்பதைப் புரிந்து ஏற்று நடந்து கொள்.

**துரி:** என்னுடை நாட்டின் ஒரு பெரும் பகுதியை அன்னவர்களித்திட அறிவுரை பகர்வது நட்புடன் வந்த நல்லவர்க் கடுக்குமோ.....?

**பீஷ்:** துர்மதி படைத்த தீயவன் தான் ஒரு தீயவழிக்கு உனையழைத்துச் செல்வான் வாசுதேவனோ பேசுவதெல்லாம் உண்மையின் செயலே......!

**துரி:** குலகுரு அவர்களே இந்திரப் பிரஸ்தம் தன்னைவிடுத்து வேறேதாகிலும் திட்டம் தந்தால் ஏற்க நினைப்பேன்.

**கிருஷ்:** அறிவுக்கு வேலை அறியாத வீரன் ஆணவத்தாலே அழிவதே உண்மை. துரியோதனனை சார்ந்தவர் எல்லாம் உண்மை நிலையினை எடுத்துரைக்கட்டும். மற்றொரு தீர்வுத் திட்டமதனை வைக்கிறேன் இங்கு. துரியோதனனவன் இந்திரப் பிரஸ்தம் நாட்டைத் தன்னுடன் வைத்திருப்பதில் ஆட்சேபம் இல்லை. பாண்டவர் தமக்கு ஐந்து ஊர்களை அன்புடன் ஈர்ந்தால் அதுவே போதும்.

**துரி:** பாண்டவர் தமக்கு ஒரு சிறுமண்ணையும் அளித்திட மாட்டேன். இதுவே எனது முடிவதுவாகும்.

**கிருஷ்:** பரம்பொருள் மீது பக்தி கொண்டவள் காந்தாரி. உன்தாய் உலைந்து கிடக்கும் உயிரற்ற உன்னுடல் எடுத்து அணைத்து புலம்பிடுதற்கொரு வழியினை ஏன் நீ வருந்தி அழைக்கிறாய்.

**துரி:** வாசுதேவா! வரம்பின்றி வார்த்தை வீசுவது அழகா...? தூதுவனாக வந்தவனென்பதால்.....!

**பீஷ்:** துரியோதனா.......!

**கிருஷ்:** பேசட்டும் விடுங்கள் பிதாமகரேயவன் பேசுவதறிவோம். மன்னவர் மகனே தூதுவனாக நான் வராவிட்டால் என்ன செய்திருப்பாய்?

**துரி:** என் தாய்தனை சபைக்கு இழுத்ததால் உந்தன் நாக்கினைத் துண்டாய் அறுத்திருப்பேன் சிறைதனில் உன்னை அடைத்திருப்பேன் நான்.

**கிருஷ்:** தூதுவனென்னை பிடித்திருப்பாயோ....? கவுரவ குலத்தின் பெரியவரெல்லாம் வரவேற்றென்னை மகிழ்வித்தார்கள். நீயோ என்னை சிறைப்பிடித்திடவே துணிந்து விட்டாயோ.........?

கிருஷ்ணர் எழுந்து நடந்து செல்கிறார்.

**துரி:** காவலரே இடையன் இவனை கைது செய்திடுங்கள்.

எல்லோரும் திகைக்கின்றனர்.

**சகுனி:** மடையனே! நீ என்ன செய்கின்றாய்?

கிருஷ்ணர் விசுவரூபம் எடுக்கிறார்.

காவலர்கள் பின்வாங்கி ஓடுகின்றனர். பீஷ்மரும் விதுரரும் வணங்குகின்றனர்.

**திரு:** என்னதான் இங்கு நடக்கின்றதோ........?

<u>பின்னணிப்பாடல்:</u>

**அண்ட சரா சரமனைத்தும் படைத்தவன்**
**விண்ணும் மண்ணும் விரவியே நின்றனன்**
**உண்மையதுணர்ந்த உத்தமர்க் கெல்லாம்**
**கண்ணும் கருத்தும் கடந்தவனுதித்தான்.**

-காட்சி மாற்றம்-

இந்திரலோகம்- இந்திரன் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்க ஊர்வசி அங்கு வருகின்றாள்.

**ஊர்வசி:** தேவேந்திரரே தங்களுக்கிப்போ நடந்தது எதுவோ? முகத்தில் கரிய ரேகைகள் படர்ந்து காண்பது ஏனோ........?

**இந்திரன்:** சூரியதேவனால் தோன்றியதுதான் எந்தனுக்குரிய வேதனையாகும். குந்திக்கும் அவனொரு மைந்தனை அளித்ததால் இந்த வேதனை எழுந்தது இன்று.

**ஊர்:** சூரியதேவனா......?

தேவேந்திரரே குந்திதேவிக்கு தாங்களும் அன்றொரு மைந்தனைத் தந்தீர்.

**இந்தி:** சூரியன் மைந்தனே கர்ணனும் ஆவான். என்னுடைய மைந்தன் அர்ச்சுனன் ஆவான். இருவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள். எதிர்வரும் போரினில் ஒருவரை யொருவர் எதிர்த்து நின்றிட சபதம் பூண்டனர்.

**ஊர்:** தேவர்க்குரிய ஏவுகணைகள் அத்தனையும் தான் அர்ச்சுனன் கைவசம் இருப்பதனாலவன் உயிரினைப் பறித்திட எவரால் முடியும்.



**இந்:** உண்மைதான் ஊர்வசி ஆனாலும் கர்ணன் உயிரைக்காத்திட கவச குண்டலம் அவனிடம் உள்ளதே எவ்வகையாயுதம் ஏவியபோதிலும். கர்ணனை வீழ்த்த அவற்றால் இயலா......! அர்ச்சுனன் தன்னை அழிப்பதே தனது அரிய இலட்சியம் என்றவன் கர்ணன் ஏற்றுள்ளான் சபதம்.

**ஊர்:** கர்ணனின் மார்பினை காத்திடும் கவசம் அவனுடை பிறப்புடன் அமைந்ததொன்றாகும். இதுவே நமது கவலையைத் தருவது.

**இந்தி:** சூரிய தேவனை பிற்பகல் போதில் கர்ணனவனும் துதிப்பது வழக்கம். பூஜை முடிந்ததும் எவர் எதைக் கேட்பினும் கூசாமல் கொடுப்பது கர்ணனின் குணமே.

**ஊர்:** அப்போது நீங்கள்......!

**இந்:** அதுவே எனது திட்டமதாகும். கவச குண்டலம் தாங்கிய உடலுடன் கர்ணனும் போர்க்களம் போவதைத் தவிர்ப்பதே என்மகன் தன்னை காப்பதற்குதவும்.

-காட்சி மாற்றம்-

கர்ணனை துரியோதனன் பார்ப்பதற்காக வருகிறான்.

**துரி:** நண்பனே கர்ணா மிகு பரவசத்துடன் தோன்றுகின்றாயே!

**கர்:** உன்னிடம் எதையும் நான் மறைப்பதில்லை என்ற உண்மையை அறிவாய் நீயே! என்னுடையன்பை பகிர்ந்து கொள்பவர் இந்த உலகினில் இருவரே உள்ளனர்.

**துரி:** அவ்வாறானால் அவ்விருவரையும் எனக்கேன் இதுவரை அறியத் தரவும் மறுத்திருந்தாய் நீ? அவ்விருவரும் தான் எவரெனக் கூறு?

அபகரித்தேயவர் இருவரை இங்கே ஒரு நொடிதனில் நான் உன்னிடம் கொணர்வேன்.

**கர்:** என்னன்பிற்குரிய அவர்களிருவரை உன்னால் என்றுமே அபகரித்திடவும் முடியாதன்பனே!

**துரி:** விடுகதைவிடுத்து விபரம் கூறு?

**கர்:** அர்ச்சுனன் தன்னை அமரினில் வெல்வதே ஆயுள் முழுவதும் எனதுயிர்த் துடிப்பு. அவனை அழித்தபின் நான் அழிந்தொழிந்தால் அதுவே எனக்கு பெரும்பேறாகும். தேரோட்டி மகனென இப்பாரெலாம் அழைத்து பரிகாசம் செய்த போதெலாம் நான் படும் வேதனை நீ உணர்ந்திருப்பாய். அவனை வீழ்த்துதல் ஒன்றே எந்தன் பேராசையாகும். எந்தன் ஆசை நிறைவேறிடவே காந்தாரி மைந்தனே நீ வழிசமைப்பதால் சிந்தை மகிழ்ந்து சிரித்திருக்கின்றேன்.

கர்ணன் படுத்திருக்கிறான். அதிரதனின் குரல் பின்னணியில் ஒலிக்கும்போது காட்சியில் பின்னோட்டமாக தோன்றுகின்றன.

துரோணாச்சாரியாரிடம் கர்ணனுடைய வளர்ப்புத்தந்தை அதிரதன் அழைத்துச் செல்கிறான்.

**துரோ:** மன்னவர் தேரினை செலுத்திடும் அதிரதன் நீயேயல்லவா?

**அதிரதன்:** ஆச்சாரியாரே அதுவே உண்மை.

**துரோ:** இவன் உன் மகனோ? இவன் பெயர் என்ன?

**கர்:** ராதேயன் என்பதே என் பெயராகும்.

**துரோ:** ராதேயன் என்பது உந்தனுக்கேற்ற நற்பெயரென்று கர்ணன் என்பதே உந்தனுக்கேற்ற நற்பெயராகும்.

-காட்சி பின்னோக்கு-

**துரோ:** இங்கு நீர் வந்த காரணம் யாதோ?

**அதி:** போராயுதங்களைப் பாவிக்கும் முறையினை படித்திட வேண்டும் என்பதே எந்தன் மைந்தனின் ஆசை. இப்பெருங் கலைகளில் சிறப்புற்றவரும் தாங்களே என்பதால் மைந்தன் இவனை அழைத்து வந்துற்றேன்.

**துரோ:** அறிவினை இச்சிறுவனுக்குநான் தானமதாக தருவதில் என்றும் தயக்கமேயில்லை.

**கர்:** மன்னிக்க வேண்டும் ஆச்சாரியாரே! தானமதாக அறிவினைப் பெற்றிடல் எந்தனுக் கொன்றும் ஏற்புடைத்தல்ல.

**துரோ:** ஆண்டவனுனக்கு அருள்பாலிப்பான். இளவரசர்க்கும் அரச குலத்து சத்திரியர்க்கும் கலைகளைப் பயிற்றும் கலைக்கூடம் இதுவே இளவரசராகவோ, சத்திரியனாகவோ இல்லாத இவனை மாணவனாக இங்கு நான் ஏற்பது பேணுதற்குரிய நல்வழியல்ல. மற்றுமோர் குருவிடம் மாணாக்கனாக கற்றிட இவனை கூட்டிச் சென்றிடு.

**கர்:** ஆச்சாரியாரே கல்விக்கரசியாம் கலைமகள் தானும் கற்பவர் தம்மை வாழ்த்திடும் போது குலமும் கோத்திரமும் அனைத்தும் அறிந்தா வாழ்த்துகின்றனள்.

**அதி:** கர்ணா....!

**கர்:** அப்பா தங்கள் அருமை வாயால் எந்தனைக் கர்ணன் என்றேயழைப்பது மாற்றான் ஒருவன் அழைப்பது போல் எனை வாட்டுதல் அறிவீர். என்றுமேயென்னை ராதேயன் என்றே அழைப்பது தங்கள் அரும்பெருங் கடனாம்.

காட்சி பின்நோக்கு முடிகிறது-
குரல் தொடர்கிறது.

**கர்:** வினாவொன்றைத் தங்கள் முன் விடுத்திட முடியுமா? இங்கேயிருப்பவன் யாரெனக் கூறுக?

**துரோ:** இவனேயென்மகன் அஸ்வத்தாமன்!

**கர்:** அப்படியானால் அரசர் குலத்தில் பிறந்தவன் அல்லவே? சத்திரியர் குல தோன்றலும் அல்லவே! மன்னிக்க வேண்டும் ஆச்சாரியாரே!

□□

**அர்ச்:** மமதையின் மாற்றுருவான இவனை முளையினில் கிள்ளி எறிந்திட எனக்கு குலகுருவே உடன் ஆணையிடுங்கள்!

**கர்ண:** வார்த்தைகள் தானோ உன் ஆயுதங்கள்! வில்லும் அம்பும் விடை கூறாதோ! அர்ச்சுனா உன்னை அந்தம் வரை நான் தொடர்ந்தே தாக்குவேன் என்பதை உணர்வாய்!

**அர்ச்:** ஆட்சிப் பொறுப்பினைத் தாரமாய்ப் பெற்றாய்! ஆயுதமனைத்தையும் ஆய்ந்தறியாதவன் சத்திரியனாக வாய்த்திட முடியுமா?

**பீமன்:** தேரோட்டி மகனிடம் பேசுவதெதற்கோ? திவ்யாஸ்திரங்களை தொடுக்கு முன் கரங்கள் தேரோட்டி மகனைத் தீர்த்திடத் துணிவது மாபெரும் இழுக்கே!

**துரி:** நதி மூலம் ஏதென்றும் ரிஷி மூலம் யாதென்றும் விதி மூலம் தேடுதல் வீரர்க்கே இழுக்கு! பீமனே உங்கள் ஐவரின் பிறப்பிலும் ஐயங்களுண்டு என்பதை மறந்து நீ ஆட்டம் போடாதே.

□□

**துரி:** தேரோட்டியின் மகன் நானல்லனென்பது தெரிந்திருப்பீர்கள்! அர்ச்சுனன் மட்டும் அரங்கினில் இறங்கிட ஆசைப்படாமல் ஐவர் நீரனைவரும் அமரிட வரலாம். தீரமிருந்தால் தீரச் செயல்களை திரண்டு நிற்குமிவர் பார்த்து மகிழட்டும்.

-காட்சி பின்னோக்கு முடிவு-

கர்ணன் படுத்திருக்கிறான்- சூரியதேவன் அவனுடைய உள்ளுணர்வுகளில் உரையாடுகிறார்.

**கர்:** சூரியதேவனே! தங்கள் தரிசனம் எந்தன் பாக்கியமே!

**சூரிய:** தானமளிப்பதில் தன்னிகரில்லா ஞான வள்ளலே! தாராளமாக நீ தயங்காதளித்திடும் தன்மையறிந்து இந்திரன் தானும் உன்னிடம் யாசகம் கோரி வருகிறான். கவச குண்டலம் கவர்ந்து செல்வதே கயமைத்தனத்தின் நோக்கமதாகும். கவனத்துடன் நீ கருத்துடனிருந்து கவச குண்டலம் கவரவொட்டாது காப்பதே உனது நற் கடமையுமாகும்.

**கர்:** தங்களைப் பணிந்து நான் பூஜித்த பின்னர் என்னுயிர் தன்னை எவர் கேட்டாலும் அளித்துவிடுவதே எந்தனுக்குள்ள ஒரு குணமாகும். இத்தகை கொள்கைக் கிடையூறு நேர்ந்திட எத்தகை நிலையிலும் இணங்கிட மாட்டேன். என்னுயிர் தன்னையும் சபதம் காத்திட எவர்க்களிப்பினும் நான் தயங்கிட மாட்டேன். என் அன்னையாம் ராதை, நண்பனாம் துரியன்-இவ்விருவரைவிட இந்த உலகினில் ஏற்றதெலாம் வெறும் ஏளனக்குரலே.

**சூரி:** இந்திரன் கேட்பதை அளித்திடத் துணிந்தால், அவனிடமுற்றொரு வரத்தினைக் கேட்பாய்! சக்தி அஸ்திரம் தன்னை உனக்கவன் தந்திடுமாறு கேட்டு நீ பெற்றிட வேண்டும் அறிவாய்.

இவ்வாறு கூறிய சூரிய தேவன் மறைகிறான் கர்ணன் கண்விழிக்கிறான்.

-காட்சி மாற்றம்-

மாலையில் ஆற்றங்கரையில் சூரியதேவனுக்கு கர்ணன் பூஜை செய்யும் வேளையில் அந்தணன் உருவினில் இந்திரன் வருகிறான்.

**இந்:** கர்ணவள்ளலே.......! ஆண்டவன் அருள் உனக் கென்றும் உண்டு!

**கர்:** வணக்கம் அந்தணரே........! வருக! தங்கள் வாழ்த்தினை தந்திட வேண்டாம்! வந்த காரியம் கூறினால் தங்களின் வேண்டுகோளினை விரைவுடன் தருகிறேன்.

**இந்:** பொன்னோ பொருளோ போக வாழ்க்கையின் பூஷணங்களோ வேண்டி நானிங்கு வந்தவனல்ல.

**கர்:** நாடி வந்துற்றதோர் நற்பொருளெதனையும் நானளித்திடத் தயங்கிட மாட்டேன். வேண்டுவதெதுவோ விருப்புடன் தருவேன்!

**இந்:** உன் மார்பினைப் பிணைக்கும் கவசம் தனையும் காதினிலிலங்கும் குண்டலமதனையும் கோரி நான் வந்தேன்!

**கர்:** இருபொருட்களுமென் அங்கத்தோடிணைந்த அரும் பொருளாகும். வேறெதாயுதம் விரும்பினால் தருகிறேன்.

**இந்:** வேண்டும் பொருளினை வேண்டுவோர் தமக்கே விருப்புடனீயும் பெருங் கொடை வள்ளலாய் விளங்கிடும் உன்னிடம் விரும்பிய பொருளும் அதுவே ஆகும்.

கர்ணன் இரண்டாவது தடவையாக அந்தணன் வேடத்திலிருந்த இந்திரனை வணங்குகிறான்.

**இந்:** இரண்டு தடவைகள் ஏன் எனை வணங்குகிறாய்?

**கர்:** அந்தணன் உருவினில் வந்ததால் முதலில் எந்தன் வணக்கம் அளித்தேனப் போது. இந்திரன் நீரே என்பதால் அடுத்தும் வணக்கம் அளித்து நின்றேன் நான்.

இந்திரன் தன் சுய உருவில் காட்சி தருகிறான்.

**கர்:** தேவேந்திரரே! கவலை விடுங்கள்! கேட்டதைக் கொடுக்கும் கடமையிலிருந்து கனவிலும் நானும் குலைந்திடமாட்டேன்.

கர்ணன் தனது உடலோடிணைந்த கவசம் தன்னையும் காதிலுள்ள குண்டலந்தன்னையும் பெயர்த்து இந்திரனிடம் தருகிறான். உடலிலிருந்து இரத்தம் பெருகுகிறது.

**இந்:** கர்ணனே! உன்போல் கொடையினில் சிறந்ததோர் மறு உயிரெதனையும் பிரம்மதேவனே படைத்திட இயலா......! சூரிய தேவனே உன்னிடம் வந்து கூறிய பின்னரும் மாறாதுன் நிலை நாட்டியும் விட்டாய்! உனக்கு நானேதும் அளித்திட வேண்டும்! எத்தகை வரம் நீ கோருகின்றாயோ?

**கர்:** இந்திர தேவனே! எவரிடமேனும் எப்பொருளெதனையும் எந்தனைத் தவிர நீர் ஏற்றவரல்ல; என்பதனால் நான் பெரும் பேறடைந்தேன்! கொடுத்ததற்காக எடுப்பது என்பது கொடையின் நிலைக்கே பேரிழிவாகும். இருப்பினும் ஒன்றினை கேட்கிறேனிப்போ! சக்தி என்னுமோர் ஆயுதம் தந்தெனை முக்திப் பேற்றுக்கு வழிகாட்டருள்க!

**இந்:** சக்தி ஆயுதம் தந்தேன் மைந்தனே! ஆனால் இதனை ஒரேயொரு முறை தான் ஏவிடமுடியும்!

**கர்:** அதுவே போதும்! எனக்கிருப்பதோ ஒரேயொரு எதிரியே!

<u>பின்னணிப் பாடல்:</u>

**அள்ளிக்கொடுக்கும் அரும்பொருளெதற்கும்**
**வள்ளலவனிடம் வரம்பேதுமில்லை**
**தன்னுயிர் காத்திட தன்னுடன் பிறந்த**
**பொன்னிழை கவசம் தன்னையும் தந்தனன்.**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

Regd. as a Newspaper at the G.P.O.(PRO/...




அருள் ஜுவலர்ஸ்


வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

436331

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

**நேரமாற்றம்** அருள் ஜுவல்லர்ஸ் நிறுவனத்தார் பிரதி ஞாயிறுதோறும் ஐ.ரி.என் (I.T.N) தொலைக்காட்சிச் சேவையில் பி.ப.1.45க்கு நடாத்திவந்த 'ரசிகர் அரங்கம்' நிகழ்ச்சியினை அதே தினம் காலை 10.15க்கு மாற்றம் செய்துள்ளார்கள் என்பதனை வாடிக்கையாளர்கள் மற்றும் ரசிகர்களுக்கு தெரிவிக்கின்றார்கள்.


# நாமிருவரல்ல நால்வர்



தருவது வியோ டெ




Kala JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11

433686


◄ பெஞ்சமின் சாலின்-பாவுடுமோரிஸ் மிகப் பெரிய தொழிலதிபர். மாதத்திற்கு பல கோடி வருமானம்.

ஒன்றைப் பெறுவதற்கு இன்னொன்றை இழக்கவேண்டும். பெஞ்சமின் இழந்தது 45 வயதுவரை குழந்தையோடு கழித்திருப்பதை.

இப்போது 48 வயதாகிய பின்னர்தான் மனைவியோடு தாட்களை கழிக்க முடிகிறது. அதன் பயனாக இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

"இப்போதுதான் நான் உண்மையான கோடீஸ்வரன்" என்கிறார் பெஞ்சமின். பணம் படைத்தவர்களை கண்டு கொடுத்துவைத்தவர்கள் என்கிறோம். ஆனால் அவர்கள் அதற்காக கொடுக்கும் விலை பற்றியும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

# அரங்கமே ஆடும்

▼ பொப் பாடகி விட்னி கொஸ்ரன், 31 வயதான பாடகி. உலகில் விசிறிகள் அதிகமுள்ள விட்னி 'செக்ஸ் விடயத்தில் தீராத விளையாட்டுப் பிள்ளை' என்று பத்திரிகைகள் எழுதியதால் மன முடைந்துள்ளார். கடந்த நவம்பர் மாதம் தென்னாபிரிக்க தலைநகரில் விட்னி கலந்து கொண்ட பொப் நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் தொகை 73 ஆயிரம். அதுமட்டுமல்ல 90 நிமிட நேரம் விட்னி பாட அரங்கத்தினர் இடை விடாமல் அந்த 90 நிமிடமும் கைதட்டிக்கொண்டிருந்தது மகா சாதனை.

நிகழ்ச்சியில் விட்னி மண்டேலா பற்றி பாடிய விட்னி கொஸ்ரன் நெல்சன் மண்டேலா பற்றி பாடவில்லை என்பது சிறு சர்ச்சையை கிளப்பி விருந்தது









# விரலுக்கு மரியாதை

▲ கொமபாரத்தில் ஏகலைவனிடம் துரோணர் கட்டை விரலைத்தான் கேட்டார்.

குரு தட்சணை என்று ஏகலைவனும் சட்டென்று கட்டை விரலை அறுத்துக்கொடுத்துவிட்டார். அந்தக் கட்டை விரல் மட்டும் இருந்திருந்தால் அர்ச்சுனனைவிடச் சிறந்த வில்வீரன் என்ற பெயர் ஏகலைவனுக்கு கிடைத்திருக்கும்.

கட்டை விரலுக்கு அவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதுபிரான்சை நாட்டவருக்கு மகாபாரதம் தெரியுமோ தெரியாதோ ஆனால் கட்டை விரலின் முக்கியத்துவம் தெரிந்திருக்கிறது. அதனால் பிரான்சில் லாபெனஸ் என்னும் இடத்தில் கட்டை விரலுக்கு பிரமாண்டமான சிலை வைத்திருக்கிறார்கள்.

5ம் ஆண்டு கட்டப்பட்ட இந்த விரல் சிலையின் உயரம் 6 மீற்றர்.

# பின்னிவிட்டார்கள் பின்னி!

அசத்தலான காரியம் ஏதாவது செய்துவிட்டால் 'பின்னி விட்டார்கள்' என்று சொல்வதுண்டு. ஆனால் பிரான்சில் 'லிமீனி' என்னும் இடத்தில் பின்னியே உலக சாதனை படைத்துவிட்டார்கள். படத்தில் காணும் கூடைதான் உலகிலேயே பிரம்பால் பின்னப்பட்ட மிக உயர்ந்த கூடையாகும். உயரம் 6 மீற்றர். கின்னஸ் புத்தகத்தில் இந்தக் கூடையும் இடம்பெறப்போகிறது.

# சாவின் விளிம்பில் ஒரு சாதனை!



➤ சாவுக்கருகினால் சாதனை படைக்க முடியுமா? முடியாது. சாவுக்கே சவாலவிடும் சாதனை ஒன்று பிரான்சில் செய்யப்பட்டது. சாதனை செய்ய விரும்பியவர் பிரேதப் பெட்டிக்குள் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டார். சுவாசத்திற்கு மட்டும் ஒரேயொரு வயர் மூக்கில் இணைக்கப்பட்டு குழியில் இறக்கப்பட்டது சவப்பெட்டி. சவப்பெட்டியை மண் கொண்டு மூடிவிட்டு எல்லோரும் கடிகாரத்தையே பார்த்துக்கொண்டு இருந்தார்கள். மூன்று மணி நேரம் கழிந்து மண் தோண்டப்பட்டு சவப்பெட்டியின் மூடி அகற்றப்பட்டது. சாதனையாளர் உயிரோடு உள்ளே இருந்தார். மூன்று மணிநேரம் புதையுண்டு வாழ்ந்த சாதனை உலக சாதனையாக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுவிட்டது.